

ராணி முத்து
காஞ்சனா ஜெயதிலகர்
ரூ.6
ரகசியக் கதவு

# ரகசியக் கதவு

## காஞ்சனா ஜெயதிலகர்



**1**

கரும் பச்சைக் குகை போல வளைந்து போனது அந்த சாலை. வலதுபுறம் முரட்டு அரணாய் நின்ற மலையில் முளைத்த செடி–கொடிகள், படமெடுத்த பாம்பு போல எம்பி நிற்க, மறுபக்க மரங்களும் சிநேகத்துடன் வளைந்து எதிர்பக்க செடிகளைத் தொடும் முயற்சியில் ஒரு குகை போலவே உருவாகி இருந்த அந்த மலைப்பாதை இருண்டிருந்தது. ரகசியமாய் வளைந்து வளைந்து மேலேறியது சாலை. அதில் தன் பழைய



டப்பா வாகனத்தை அலட்சியமாய் விரட்டிக்கொண்டிருந்தவனை ஓரக்கண்ணால் நோட்டமிட்டாள் வர்ஷி! பாதையின் இருளைப்போலவே அவன் முகத்து மூர்க்கமும் அவளை மிரட்டியது. அவன் 'கியர்' மாற்றிய வேகத்தில் இவளுக்குள் 'விருக்'கென இழுத்தது.

எதிரே ஒரு கார் வர, இந்த சிறு வேன்– இடதுபுறமாய் ஒதுங்கி நின்றபோது இவளுக்கு 'மரண பயம்' பரிச்சயமானது. புதர்களோடு மரங்கள் செழித்த பள்ளத்தில் உருண்டால், வனத்துக்கு உரமாக வேண்டியதுதான். 'இந்த அத்துவானக் காட்டில் யார் இறங்கி தங்கள் சடலங்களைத் தேடி எடுப்பார்கள்?'

தன்னையே திட்டி, சபித்துக்கொண்டாள்.

மும்பையில் 'விடுமுறைக் களங்கள்' உருவாக்கும் ஒரு நிறுவனத்தில் முதலாளியின் வலதுகரமாய் வலம் வந்தது வேறு.

மித்தல் சகோதரர்கள் ஆரம்பித்த அந்நிறுவனம், பதினைந்து ஆண்டுகளில் கொடி நாட்டிவிட்டது. பரிச்சயமோ, ஆள் புழக்கமோ அதிகம் இல்லாத இயற்கை அழகுள்ள இடங்களைத் தேர்ந்தெடுத்து– அதை விடுமுறைக்கு ஏற்ற 'ரிஸார்ட்'டாக உருவாக்க முனைந்தவர்கள், அதை நல்லபடி விவரம் அறிந்தவர்கள் துணையோடு செய்ய, அந்த 'விடுமுறைக் களங்கள்' விரைவில் பயணிகளை ஈர்த்து பணத்தைக் குவித்தன.

'நிலப்பரப்பு நிர்வாகம்' கற்ற வர்ஷி, வேலைக்கு விண்ணப்பித்ததும், அவளை ஆவலாய் சேர்த்துக்கொண்டார்கள்.

மும்பை அருகிலும், கர்நாடகத்திலும் சிறு தீவுகளைத் தேர்ந்தெடுத்து– அரசின் அனுமதியுடன் அதை வெளிநாடு சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற விதத்தில் அமைத்ததில் ஆரம்பித்தது அவர்களின் வெற்றி. பொன்னிற மணல், நீலக் கடல், பசும் தென்னைகளோடு கிடந்த அந்த ஆளண்டா தீவுகள்– மிக வசதியான குடில்கள், உணவகங்கள், நீச்சல் குளம், விளையாட்டு அரங்குகளுடன் பயணிகளை வரவேற்கின்றன.

வளைத்தளத்தில் அதற்கான விளம்பரங்களையும் வர்ஷி நேர்த்தியாய் வடிவமைக்க, அங்கு வந்து தங்கிய பலர் தங்கள் அனுபவத்தை 'ஆஹா, ஓஹோ... பேஷ் பேஷ்' என்று விவரித்து பதிவு செய்ய, கூட்டம் முண்டியது. குற்றாலத்தில் ஒவ்வொரு அருவியாய் போய் தலையை நீட்டிவிட்டு பஜ்ஜியும், பழங்களும் சாப்பிடும் வர்க்கமில்லை இது. 'பணம் ஒரு பொருட்டே இல்லை; எனக்கு என் பணத்திற்கேற்ற அபூர்வ அனுபவம்தான் தேவை' எனும் மேல் தட்டு மக்களுக்கான விடுமுறைக் களம்.

'மீன் பிடிக்கலாம், படகு ஓட்டலாம், மலை ஏறலாம்'– என்று இவர்கள் விரித்த ஆசை வலையில் ஆர்வமாய் வந்து சேர்ந்த கொழுத்த

மீன்கள்.

மூத்தவர் மித்தல், அலுவலகத்துக்கு வருவது இரண்டு மணி நேரங்கள்தான். அதற்குள் வேண்டிய திட்டங்களை, திருத்தங்களைத் தந்துவிடுவார். மற்ற பொறுப்பெல்லாம் இளைய மித்தலிடம்தான்.

"அண்ணா, மூன்றாவது 'ரிஸார்ட்'டை நாம் சீக்கிரம் ஆரம்பிக்கணுங்கறார், வர்ஷி. நீ தென்னிந்தியாவில் ஒரு இடத்தைத் தேர்வு செய்யலாம்னது அவருக்குப் பிடிச்சிருந்தது. ஆனா, இன்னும் எந்த இடத்தையும் புள்ளி குத்தலையே?" இளைய முகேஷ் மித்தல் ஆதங்கப்பட்டான்.

"நாலைந்து இடங்கள் எடுத்து வச்சிருக்கேன். ஒரு தரம் போய் பார்த்தால்தான் முடிவெடுக்க முடியும்."

'பாஸ்', 'சார்' எனும் பதங்கள் அங்கே ஏற்கப்படாதவை. ஆக, இயல்பாய் பெயர் சொல்லியே அழைத்து பேசுவதால் சுலபமாக இருந்தது.

"ஒருவேளை தமிழ்நாட்டில் அழகு இடங்கள் இல்லையோன்றது அண்ணனின் சந்தேகம். தமிழ்ப் பெண்ணான நீ, வீம்புக்கு 'எங்க பக்கம் போகலாம்'னு சொல்லிட்டாலும், வட இந்தியா அளவுக்கு அம்சமான ஊர்களைக் கண்டெடுக்க முடியாமல் திணறுவதாய் நினைக்கிறார்."

முகேஷ் மித்தலின் கிண்டல் புரிந்தாலும், வர்ஷிக்கு கோபம் கொப்பளித்தது.

"தெற்கு, அழகில் சளைத்ததே இல்லை– 'சட்'டுன்னு போய் நேரில் பார்த்துவிட்டு வர, யாரும் நம்ம அலுவலகத்தில் தயாரா இல்லை. அமைதியான கிராமப்புற, மலைப்பாங்கான இடங்களைப் பற்றி நாம் இங்கிருந்தபடி விசாரிப்பதும் சரியில்லை. ராஜசேகரன் என்பவர் மட்டுந்தான் தன் நிலத்தைப் பற்றி பிரமாதமாய் நமக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பினார்."

"அந்த ஊர் பேர்... 'தேன் முகடு' இல்லையா?"

"அமிர்த மலையாம்....தேனிங்கற ஊர் பக்கம் இருக்கும் மலைப்பகுதி. அதன் உச்சிக்கு பேர் 'தேன் முகடு'. படிக்காத பாமர மலைவாழ் மக்கள், தேன் சேகரித்து விற்று வாழ்றாங்களாம். பாதைகூட சரிவரப் போடப்படாத பகுதி. வெள்ளைக்காரங்க வந்து பார்த்தால், அந்த பூலோக சொர்க்கத்திலேயே தங்கிடுவாங்கன்னு தடபுடலாய் எழுதி இருக்கார்."

"மேலும் தள்ளிப்போட வேணாம்னு பார்த்தால், கொஞ்சம் தமிழ் தெரிந்த நம்ம ஆள் திடீரென்று வேலையை விட்டுட்டான்..."

"நான் வேணும்னா போயிட்டு வந்துடவா முகேஷ்?" என்று முந்திரிக்கொட்டையாய் கேட்டாள் வர்ஷி.



"பொதுஜன புழக்கமில்லாத மலைப்பகுதிக்கு பெண்ணான நீ எப்படித் தனியே போவாய்...?"

இதைக்கேட்டதும் சிலிர்த்துவிட்டாள் அவள்.

"மும்பையின் உள்ளூர் ரெயில்களில் 33 சதவிகிதமேனும் தொற்றிக்கொண்டு விரைவது பெண்கள்தான். வேலை முடிந்து வீடு திரும்புபவர்கள், இரவு– மறுநாள் சமையலுக்கான காய்கறிகளை வாங்கிக்கொண்டு போவதும், காலையில் புதுமலர் போல பளிச்சென்று வேலைக்குக் கிளம்புவதும் எத்தனை உற்சாகமான காட்சி? தவிர, இப்போது விமான கட்டணங்கள் அதிகமில்லை. கைக்குள் ஒரு அலைபேசியோடு 'உள்ளங்கையில் உலகம்' என்று அனைவரும் இருக்கும் இந்த நாளில் ஆண், பெண் என்று ஏன் பிரித்துப் பேசுவது?"

மனதில் உள்ள அத்தனையையும் இவள் கொட்டித்தீர்த்த பின்பும் முகேஷ் உடனே தலையாட்டிவிடவில்லை.

"உங்கப்பா சம்மதிப்பாரா?" என்று நழுவிக்கொண்டான்.

"என்னை வேலைக்கு அனுப்பினதே அவர்தானே?"

அரசு மின் துறையில் அதிகாரியாய் இருந்த அப்பா, இவளை எதிலும் ஊக்குவிப்பவர்தான்.

"எனக்குத் தமிழ் தெரியும். அங்கே என்னால் சுலபமாய் சமாளிக்க முடியும்" சற்று அலட்சியம் கலந்தே அறிவித்தாள்.

"அதெல்லாம் சரி... அம்மா இல்லாத பெண்ணை, பெயர் தெரியாத ஊருக்கு அனுப்ப உங்க அப்பா கண்டிப்பாய் யோசிப்பார்.

அதேநேரம், மிஸ்டர் ராஜசேகர் தன் மலைக் கிராமத்தை வந்து பார்க்கச் சொல்லி அனுப்பிய மின்னஞ்சல்களில் குறிப்பிட்டிருந்த தொலைபேசி எண்ணை தொடர்புகொள்ளவே முடியலை. 'உள்ளங்கை உலகத்தில்' இன்னும் பல கிராமங்கள் அடங்கவில்லை வர்ஷி! தொடர்பு வசதிகள் இதற்கு மேலும் நுணுக்கமாகணும்.

'எனக்கு ரெண்டு, மூணு நாள் ஒதுக்க முடியும்னு' யாரேனும் நம் ஆண் ஊழியர் சொன்னால், நீ அவர்களோடு உன் தமிழ்நாட்டின் அந்த மலைப்பகுதிக்குப் போகலாம். எனக்கு ஆட்சேபனை இல்லை."

ஆனால், முகேஷின் 'ஆணை', 'ஆட்சேபனை'க்கெல்லாம் தான் கட்டுப்பட வேண்டியதில்லை என்று காட்டிக்கொள்வது போல, கோயம்புத்தூருக்கான விமான சீட்டை எடுத்துவிட்டாள், வர்ஷி.

முதலாளியையும், தன் அப்பாவையும் தனது வழிக்கு கொண்டு வந்துவிட முடியும் என்கிற நம்பிக்கையில் செய்த காரியம் அது! துணிந்து முடிவு எடுத்துவிட்டாலும், பயணத்தில் ஒருவித பயத்துடனேயே இருந்தாள்.

# 2

மும்பையில் இருந்து இரண்டே மணி நேரத்தில் கோவை வந்து இறங்கியபோது வெகு உற்சாகமடைந்தாள். தன் தோற்றத்தை மேலும் சீராக்கியவள், அங்குள்ள உணவகத்தில் 'கமகம' வென்று பரிமாறப்பட்ட தென்னிந்திய காப்பியை ருசித்துப் பருகினாள். வடக்கே பெரும்பாலும் தேநீர்தான்.

மொறு மொறுவென தயாராகிக்கொண்டிருந்த வடை, நாக்கை எச்சில் சுரக்க வைத்தாலும்... மலைப்பாதையில் ஏறும்போது, இந்த எண்ணெய்ப் பதார்த்தம், வயிறைக் குமட்டினால் வம்பு என்று அதைத் தவிர்த்தாள்.

சக்கரங்கள் பொருத்தப்பட்டதால் ஒரு நாய்க்குட்டி போல தன் பின்னே உருண்டு வந்த பெட்டியுடன் அச்சிறு விமான நிலையத்தின் வாசலில் நின்று நோட்டமிட்டாள். விமானம் தரை இறங்கிய அரை மணி நேரத்தில், அங்கு கையில் பெயர் எழுதிய அட்டைகளுடன் பயணிகளைக் கூட்டிப் போக வந்திருந்த கூட்டம் வடிந்திருந்தது. ராஜசேகரன் தந்திருந்த அலைபேசி எண்ணை பல முறை அழுத்தியும் பயனில்லை.

மெள்ள தனக்குள் தலைதூக்கிய எரிச்சலை அமுக்குவதற்காக 'தேன் முகடு' பற்றிய கற்பனையில் ஆழ்ந்தாள். கணினி மூலம் இவள் பார்வைக்குக் கிடைத்த படங்கள் எல்லாமே அற்புதமானவை. 'கன்னிக்காடு' எனுமளவில் மனிதனின் கைபடாத அழகு பூமி.

தனக்கு மலை முகட்டில் ஏறக்குறைய எட்டு ஏக்கர் இருப்பதாய் தெரிவித்திருந்தார் ராஜசேகரன். இரு முறை இவளுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டவர், உற்சாகமாய்தான் இவளுக்கு அழைப்பு தந்திருந்தார்.

'என் நிலத்தை நேரில் பார்த்துவிட்டால், அப்படியே அள்ளிக்குவீங்க மிஸ் வர்ஷி. நீங்க நிலப்பரப்பு நிர்வாகம் பற்றி படித்திருப்பதாய் சொன்னீங்க. இங்கே அதற்காய் அதிகம் சிரமப்படவே வேண்டாம். திரும்பிய இடமெல்லாம் சிற்றருவிகளும், பழத் தோப்புகளும், மலர்க்காடும்தான். நடுவே பயணிகளுக்கான குடில்களை அமைத்துவிட்டால் போதும்' என்று ஆசை வார்த்தைகள் வேறு!

தான் வரப்போவதைத் தெரிவித்த பிறகும் 'வருக... வருக' என்ற ரீதியில் கணினி மூலம் கடிதம் எழுதியவருக்கு இப்போது என்ன ஆனது?



கோவை விமான நிலையத்தில் தன்னை சந்திப்பதாய் சொன்னவர் ஏன் வரவில்லை? வரக்கூடாத இக்கட்டு என்றால், தகவலேனும் அனுப்பலாமே? அல்லது நம்பகமான ஓட்டுநருடன் ஒரு வாகனம்?

பொறுமிய புத்தியைத் திசை திருப்பினாள்.

'அந்த மலையின் ஓங்கிய மரங்களில் நிறைய தேனடைகள் தொங்குமாமே? மலைவாழ் மக்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்பவர்கள்– ஆக, விதவிதமான மூலிகைகளும்கூட அவர்களுக்குப் பரிச்சயமாகி இருக்கும். மூலிகைத் தேநீரும், தேனிட்ட பணியாரமும், புட்டு மாவும் தந்தால் வெளிநாட்டு பயணிகளும்கூட தேனீக்கள் போல் இந்த தேன்மலையில் வந்து அப்பிக்கொள்வார்கள். அப்பிரதேசத்து வன அழகு கெடாத வகையில் மூங்கில் குடில்கள் அமைக்கலாம். சிற்றருவிகளை கீழே குளமாய் வெட்டிவிட்டால் நீச்சலடிக்க தோது. அம்மலை மக்கள் ஆடல், பாடல் ஓரளவு ரசிக்கும்படி இருந்தால்– மாலை வேளை பொழுதுபோக்குக்கு அதுவே போதும்'... அவளின் கற்பனை விரிந்துகொண்டே இருந்தது.

மித்தல் சகோதரர்களுடன் இரு ஆண்டுகள் பணி புரிந்திருந்தது, சுயமாய் ஒரு களத்தை உருவாக்கிவிடலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. இந்த சவாலை ஆர்வத்துடன் எதிர்நோக்கியவளுக்கு ஆரம்பம் சற்றே சலிப்பை தந்தது.

'விடுமுறைக்காக தேன் முகட்டுக்கு வருபவர்கள், இது அத்தனையும் இயற்கைதானா... அல்லது மனித கைகள் அதைச் சற்று சீரமைத்து இருக்கின்றனவா? என்று குழம்பி ரசிக்கணும்...' – இப்படி யோசித்தபடியே நடந்தாள்.

மாலை மணி ஐந்தாகிவிட்டது. இனியும் இப்படி வெறுமனே நடப்பதில் அர்த்தமில்லை. இங்கிருந்து 'அமிர்தமலை', இரண்டு மணி நேரப் பயணம் என்றாரே? இப்போது கிளம்பினால்தான் முழுக்க இருட்டும் முன் அங்கு போய் சேரலாம்.

வெளியே உள்ள வாடகை கார் வரிசையில் போய் தன் விசாரணையை ஆரம்பித்தாள் வர்ஷி.

யாரும் இன்முகத்துடன் பதில் தரவில்லை.

"நீங்க என்ன ஆராய்ச்சியாளரா?"– பதில் கேள்வி வந்தது.

"இல்லை... வேலை நிமித்தம் அங்கே போகிறேன்."

"யாரைப் பார்க்கணுமுங்க?"

"மிஸ்டர் ராஜசேகரனை."

இப்போது அவர்கள் பார்வை சற்று படிந்தது. பவ்வியமாய் கேட்டார்கள்.

"அம்மணி எங்கே இருந்து வந்திருக்கீங்க?"

"மும்பை."

1,500 மைல்களுக்கு அப்பால் இருந்து வந்தவள் என்ற கரிசனையுடன் அவள் சொன்னதைக் கேட்டுக்கொண்டவர்கள்,

"மலைக்குப் போகலாம்... ஆனா, மழை வரும்போல இருக்குதுங்க" என்றபோது இவளுக்கு தலையில் அடித்துக்கொள்ளலாம் போல இருந்தது.

மும்பையிலும் மழைக்கென்ன குறை? அது பாட்டுக்கு அடித்து ஊற்ற, மக்கள் குடையோடு தங்கள் வேலையைச் செய்துகொண்டிருப்பார்கள். அடுக்குமாடி கட்டடங்களும், ஜனங்களுமாய் நெரியும் மும்பையில் தண்ணீர் பிரச்சினையே எழாததன் காரணம் இப்படி அடிக்கடி பொழியும் மழைதானே!

இவர்களோ மழை பெரும் பிரச்சினை என்பது போலல்லவா பேசுகிறார்கள்? வேண்டாத விருந்தாளியின் வருகை போல மழையைக் குறிப்பிடுவது ஏன்?- யோசிக்கையில்...

இவள் மேல் இரக்கம் கொண்டது போல நெருங்கி வந்து பேசிய ஒரு முதிய ஓட்டுநர் விளக்கினார்.

"அது கடும் பாதைங்க. மழை வலுத்து, பாதையில் மரக்கிளை விழுந்தா, நாம சிக்கிடுவோம். எங்க கார் பழைய மாடலுங்க. 'பவர் ஸ்டியரிங்'கெல்லாம் இடையாது. அந்த குறுகின பாதையில் வளைச்சு திரும்ப முடியாது... தவிர, டயறு பொத்தலானாலும் ரோதனை."

"நான் என்னதான் பண்ணுறது பெரியவரே?"

"கோயம்புத்தூருல தங்கிட்டு, காலையில கிளம்புங்க அம்மணி." குழப்பத்துடன் யோசித்தாள்.

"காலையில் இளவயது டிரைவர் ஒருத்தனை ஏற்பாடு பண்ணித் தர்றேன். மலையில் சீக்கிரம் இருட்டிடும்."

இவள் சம்மதிக்க இருக்கையில்தான் அந்த டப்பா வேன் வந்து சேர்ந்தது.

"முத்தையா, என்ன இந்த பக்கம்?"- வயதான ஓட்டுநர், அவனைப் பார்த்து விசாரித்தார்.

"பார்சலு ஒண்ணு இங்கே தர வேண்டியிருந்தது அண்ணே... டீயும் குடிச்சாச்சு. இதோ கிளம்பிட்டேனுல்ல?"

"எங்கே போறே?"

"தேன் முகடுக்கு."

அந்த பதில், இவள் காதில் தேனாய் பாய்ந்தது.

அதிர்ஷ்டம் தன் பக்கம் இருப்பது போன்ற ஒரு குஷியில், அறிமுகமற்ற



அப்புதிய ஓட்டுநரிடம் கேட்டாள்.

"எப்போ போய் சேருவீங்க?"

"விரட்டினா ஒண்ணேமுக்கா மணி நேரந்தானுங்க. இல்ல, மழை பிடிச்சுக்குமில்ல?"

"நானும் வரலாமா?"

"தேன் முகட்டுக்கா... இந்த நேரத்துலா?"

"அவங்க ராஜசேகரன் சாரைப் பார்க்க வந்திருக்காங்க- மும்பையில் இருந்து..."

"சீக்கிரமாய் போய் சேர்ந்தால், என் வேலையை முடிச்சுட்டு திரும்பிருவேன்... அதான்." இழுத்தாள்.

"சரி... ஏறிக்கோங்க."

தயங்கினால் மனம் மாறிவிடுவானோ என்ற வேகத்தில் இவள் ஏறி அமர, வாகனம் குதித்து வேகமெடுத்தது!

அலுங்காமல் பறந்து வந்தவளை, அந்த வேன் வேண்டிய மட்டும் குலுக்கி எடுத்தது . அவளிடம் சொன்னது போல சீக்கிரம் ஊர் கொண்டு சேர்க்கும் அவதியில் இருந்தான் அவன்.

பேசாமல் தூங்குவதுபோல பாவனை செய்திருக்க வேண்டும் இவள். ஆனால், தான் போகப்போகும் இடம்பற்றி அறியும் ஆவலில் முத்தையாவின் வாயைக் கிண்டினாள்.

"என்ன வேலையா நீங்க தேன் முகடு போறீங்க?"

"சரக்கு இருக்குதுங்க. காலா காலத்துல கொண்டு சேர்த்துட்டா, கை நிறைய காசு கிடைக்கும்."

"அப்ப நாளைக்குத்தான் திரும்புவீங்க இல்ல?"

"அது கடவுளுக்குத்தானுங்க வெளிச்சம். இது மழ மாசம். வானம் குமுறுதுல்ல? மலையிலே மழையோடு பேய்க் காத்தும் சேர்ந்துக்கும். மலையையே புரட்டிப் போடறாப்பல அடிக்குமுங்க...?

"ஓ... அதுதான் மற்ற யாரும் காரை எடுக்கலையா?"

"பாதையில மரம் விழுந்தால்... திரும்ப முடியாதுங்களே!"

"பாதை மூடிருமா?"

"போக்குவரத்தெல்லாம் அதோட சரிங்க. மேலே சாப்பிட கொள்ள கடைகூட கிடையாதுல்ல?"

இவளுக்குள் படபடத்தது. உள்ளே பயக்காற்று கிளம்பியதன் விளைவு!

மேலே போய் ஊர் சேர்ந்ததும், அங்கேயும் அந்த ராஜசேகரன் இல்லாவிட்டால்... எங்கே தங்குவது... எப்படி திரும்புவது?

குமுறும் வானம் கொட்ட ஆரம்பித்து, மரம் ஏதும் விழுந்து தொலைத்தால் அம்மலையில் எப்படி சமாளிப்பது?

"சாப்பிட, தங்குறதுக்கு மலை மேலே விடுதி... ஓட்டல் ஏதும் கிடையாதா?"

"இதென்ன ஊட்டி, கொடைக்கானலுன்னு நினைச்சிங்களா?" - அறிவித்தவன், சட்டென வேனின் வேகத்தைக் குறைத்தான்.

"என்ன?"

குனிந்து அண்ணாந்து பார்த்தவன், "மேலே பாருங்க... தேனடை... எவ்வளவு பெரிசா இருக்கு."

அவனைப் போலவே கழுத்தை எம்பி பார்த்தவளின் கண்களுக்கு, மரக்கிளையில் கறுப்பாய் அப்பிய தேனடை பட்டது. சிறு பயமும் அவளைப் பற்ற, கைகளைக் கட்டியவள்- ஒடுங்கி உட்கார்ந்துகொண்டாள்.

"இங்கே கிடைக்கிற தேன், மூலிகையைக் கொண்டுதான் இங்குள்ள ஜனங்க பசியாறிக்கணும்."

"அதாவது இதை விற்று வர்ற காசில் கிடைக்காதுங்க. படிப்பறிவு இல்லாத இதுகளை ஏமாத்திடுவாங்க. மலைத்தேன் வெளியே கொள்ளை விலைன்னாலும், இவங்களுக்கு கொஞ்ச காசுதான் கிடைக்கும். உயிரைப் பணயம் வச்சுதான் இவங்க இந்த தேனை எடுக்கறாங்க."

பாமர மக்களுக்காய் பரிதாபப்பட்டாலும், தன் பிரச்சினைக்குத் திரும்பினாள் வர்ஷி.

"அப்ப நான் எங்கதான் தங்கி... சாப்பிடறது?"

"அதானுங்க சொல்றேன். எளிய ஜனங்க இவங்களால ஓட்டலெல்லாம் வச்சு நடத்த முடியாது. அப்படி வச்சாலும் வாங்கறது யாரு?"

கேட்ட டிரைவர் முத்தையா, லாவகமாக வண்டியைச் செலுத்தினான்... ஒரு கண்ணால் அவளைப் பார்த்தவாறே!

## 3

"இங்கே உலகத்தின் எல்லா பகுதியில் இருந்தும் சுற்றுலா பயணிகள் சீக்கிரம் வரப்போறாங்க. அதற்குத்தான் நான் வந்திருக்கிறேன்."

"நல்லதுங்க" என்றான் அவன், விழிகளை மட்டும் அவள் புறமாய் உருட்டி.

"சாலையும் மோசந்தான், இதை முதலில் சீராக்கணும்."



"நல்லதுங்க."

"எம் பக்கமாய் திரும்பாமல் பேசுங்க முத்தையா! இல்லைன்னா, நாம ரெண்டு பேரும் உங்க வேனோடு சமாதியாக வேண்டியதுதான்" என்று அவள் கறாராய் சொன்ன பிறகே அவன் திரும்பிப் பார்ப்பதை குறைத்தான்.

மின் விளக்கே இல்லாத மலைப்பாதை குண்டும் குழியுமாய் போக, இவள் தன்னையே நொந்துகொண்டாள்.

'பெண் புத்தி, பின் புத்தி'- அதாவது 'பின்' (குண்டூசி) போன்ற கூர்மையான புத்தி என்றெல்லாம் பள்ளிக்கூடப் படிப்பின்போது தமிழ்ச் சங்க பேச்சுப் போட்டியில் பேசி, பரிசுபெற்றவள்தான். ஆனால், நடக்கப்போவது எதையும் முழுக்க யோசிக்காமல், சிந்தனையே இன்றி தான் பண்ணிய அசட்டுத்தனத்தில் குறுகி உட்கார்ந்திருந்தாள்.

'அப்பாவின் பேச்சையேனும் கேட்டிருக்க வேண்டும். மாறாக அவரிடமே சற்று அதட்டலாய் வேறு பேசிவிட்டேன்'- நடந்ததை எண்ணி இப்போது மருகினாள்.

"கவலைப்படாதீங்க மேடம். ஓட்டல் ஒண்ணும் கிடையாதுன்னாலும், நான் உங்களை ராஜசேகரன் சார் வீட்டிலதான இறக்கி விடப்போறேன்? அங்க உங்களை நல்லா கவனிச்சுக்குவாங்க."

"மிஸ்டர் ராஜசேகரனுக்கு எத்தனை வயசிருக்கும்...? பெரிய வயசுக்காரரா?" இவள் கேட்க, வாய்விட்டுச் சிரித்தான் ஓட்டுநர்.

"என்னங்க... இப்படி கேட்டுட்டீங்க? சாரை நீங்க பார்த்ததில்லையா?"

"போனில் பேசினதுதான்..."

"சிறு வயசுங்க. உங்களைவிட நாலைஞ்சு வயசுதான் மூப்பாய் இருப்பாரு."

ஊசி மேல் உட்கார்ந்தது போல இவள் உடம்பு பதற்றமாய் துள்ளியது.

'கடவுளே... என்ன ஒரு இக்கட்டில் வந்து சிக்கிக்கொண்டேன்?' என்ற பதைப்புடன்-

"அவர்கூட வேறு யார் இருக்கறாங்க?"- கேட்டாள்.

"நான் என்னத்த கண்டேன். ஆனா, கண்டிப்பா நீங்க தங்கிக்கொள்ள சம்மதிப்பாங்க. கவலைப்பட வேண்டாம்."

அதற்கு மேல் இவள் கேள்வி கேட்க துணியவில்லை. காரணம், 'பதில்கள் மேலும் கலவரப்படுத்தும் போலவே!' என்ற கலக்கம் மேலோங்கியது. இதயம் எம்பித் துடித்தது.

மழை வலுக்க ஆரம்பித்தது. மலையையே குலுக்கி எடுத்துவிடும்

வேகத்தில் வீசியது காற்று. இனி முழுக் கவனத்துடன் ஓட்ட வேண்டும் என்று முடிவெடுத்தது போல வேலையில் உன்னிப்பாக இருந்தான் முத்தையா.

முழுதாய் இரண்டரை மணி நேரம் கழித்த பின்– வேகம் குறைந்த வாகனம், ஒரு கட்டடத்தின் முன் நின்றது. அரை இருளிலும் அது பெரிதான, வசதியான வீடு என்பது தெரிய– தன் பெட்டியை எடுத்து தலைக்கு மேல் பிடித்தபடி இறங்கினாள் வர்ஷி.

ஆனால், வீட்டுக்குள் பிரகாசமான வெளிச்சமில்லை.மசமசப்பான மஞ்சள் ஒளிதான்.

காரில் இருந்து இறங்கி, படியேறி வீடு நுழைவதற்குள் நனைந்திருந்தாள். மெல்லிய பருத்தி குர்தா, மேனியோடு ஒட்டிக்கொள்ள– தடுமாற்றமாய் வாசலுக்கு வெளியவே நின்றாள். வீட்டின் உள்ளே யாரோ பேசும் சத்தம் கேட்டது. இதனால் மனதுக்குள் மகிழ்ந்தாள்.

'ஆனால் வெளியே வந்து அவர்கள், தன்னை இந்த உடையில் பார்த்தால்? மானம் போய்விடும். சேலை அல்லது துப்பட்டாவுடன் கூடிய சல்வார்தான் இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் மானம் காத்திருக்கும். ஈரத்தை உதறிவிட்டு போர்த்தி நிற்க வசதி'– நினைத்துக்கொண்டாள்.

இவளது மெல்லிய உடலை கவ்விப் பிடித்திருந்த உடை, அவளை மேலும் கவர்ச்சியாக வெளிக் காட்டியது.

திடும்மென 'புஸ்' என்ற சீறல் ஒலியோடு– வெள்ளி நிற வெளிச்சமாய் வாசலுக்கு வந்தது 'பெட்ரோமாக்ஸ்' விளக்கு. சில பழைய திரைப்படங்களில் பார்த்து, அப்பாவிடம் கேட்டு அறிந்துகொண்ட பழங்காலத்து ஒளி சாதனத்தை வியப்புடன் பார்த்தாள். உயரமான அந்த விளக்கை, அதைவிட சற்றே உயரமான சிறுமி பிடித்தபடி வர, அவளைத் தொடர்ந்து ஒரு பெண்மணி வந்து எட்டிப் பார்த்தாள்.

வந்தவரை இவளால் முழுக்க பார்க்க முடியாவிட்டாலும், அவள் முகத்து வெறுப்பு புரிந்தது! சொல்லாமல் கொள்ளாமல்– அறிமுகமற்ற ஒரு இளம்பெண், மழை இரவில் இப்படி நனைந்து கவர்ச்சியாகிவிட்ட உடையுடன் வந்து நின்றால்... எரிச்சல் வரும்தான்!

கைகுவித்தவள், "வணக்கங்க. நான் வர்ஷி. மும்பையில் இருந்து மிஸ்டர் ராஜசேகரனைப் பார்க்க வந்திருக்கிறேன். அவரிடம் ஏற்கெனவே சொல்லி இருந்தேன். என்னை அழைக்க கோயம்புத்தூர் வருவதாய் சொன்னார்... ஆனா வரலை."

"உள்ளே வாங்க"– வேறு வழியில்லாத வரவேற்பு!

வீட்டினுள் போனபின், அவர் ஏறக்குறைய அறுபது வயதுள்ள பெண் என்பது உறைத்தது. மற்றொரு அறையில் சிறு பிள்ளைகளின் கூச்சல் கேட்டது, வர்ஷிக்கு ஒரு விதத்தில் ஆறுதலாக இருந்தது. 'ஆக, தான்

இளம் வயது ஆணுடன் தனியே இங்கு தங்க நேராது; கவுரவமான குடும்பம் இங்கே வசிக்கிறது' என்ற நிம்மதி.

"இரும்மா" என்றவர், மறுபடி உள்ளே போக... விளக்கு வைத்திருந்த சிறுமியும், நிழல்போல அவரைத் தொடர்ந்து காணாமல் போனாள்.

வர்ஷிக்கு திடும்மென நடுங்கியது. கூடத்தில் அரிக்கேன் விளக்கின் மஞ்சள் ஒளியும், அது உருவாக்கிய நிழல்களும் மிரட்டின. 'நிற்பதா, அமருவதா?' என்பதை அறியாமல் பெட்டியுடனேயே நின்றவளுக்கு, மறுகணம் ஒரு துவாலை தரப்பட்டது.

"துடைச்சுக்கோங்க."

தந்த சிறுமியிடம் நன்றி சொன்னாள்.

பெட்டியைக் கீழே வைத்தவள், முகத்தோடு தலையைத் துடைத்துவிட்டு துவாலையால் தன்னைப் போர்த்திக்கொண்டாள்.

இவளுக்கு கடுமையான பசி. ஆனால், இந்த நேரத்தில் இவளை யாரும் எதிர்பார்க்கவில்லையே? இதனால் அங்கு சாப்பிட ஏதாவது இருக்குமா என்ன?

உடை மாற்ற முடிந்தால் சவுகரியம்... ஆனால் எங்கே போய்?

"உங்க பெட்டியை உள் அறையில வைக்கச் சொன்னாங்க அம்மா. வந்து கை- கால் கழுவிக்கிறீங்களா?"- சிறுமி உத்தரவிட்டாள்.

நன்றியோடு தலைமுடியைக் கவ்விய 'கிளிப்'பை அகற்றியவள், ஈரக் கேசத்தைப் பிரித்து கோதினாள்.

அதேநேரம் வெளியே வந்த ஓட்டுநர் முத்தையா- வாயெல்லாம் பல்லாக, "அப்ப நான் கிளம்பறேம்மா... அம்மணி வயிறை நிரப்பிட்டாங்க. இனி போய் படுக்க வேண்டியதுதானே" என விடைபெற- இவள் அவசரமாய் தன் பையில் துழாவி, சில நூறு ரூபாய் தாள்களை எடுத்துத் தந்தாள். பிகு செய்யாமல் வாங்கிக்கொண்டவன் வெளியேற, இவள் தனக்காய் தரப்பட்ட அறைக்குள் தஞ்சமானாள்.

இவளது பெட்டியை அங்கிருந்த முக்காலியில் வைத்த சிறு பெண், அறையோடு ஒட்டி இருந்த சிறுஅறைக்குள் போய் குழாயைத் திறந்துவிட்டபடியே பேச்சுக் கொடுத்தாள்.

"முதல்ல குளிச்சிடுங்கக்கா, இல்லைன்னா உடம்பு அசதி போகாது."

"இல்ல... இந்த குளிருல..."

"வெந்நீதான். சூரிய ஒளியில சூடாக்குற வசதி உண்டுல்ல இங்க? அதனால பயப்படாம குளியுங்க."

அண்டாவில் நிரம்பிக்கொண்டிருந்த வெந்நீரை எடுத்து மேலுக்கு ஊற்றினாள். உடலோடு மனதுக்கும் இதம்தான். துடைத்து, வேறு உடை

[illegible] உறைத்தது. நொறுக்குவதற்காய
கைப்பையில் ஒரு 'பிஸ்கெட்' பொட்டலம்கூட எடுத்து வராத தன் 'பின்' புத்தியை மறுபடி எண்ணி தன்னையே நொந்துகொண்டாள்.

அப்போது மரத்தட்டு ஒன்றை சிறுமி கொண்டு வந்தாள். அதில் இருந்த பாத்திரங்கள் அவள் வயிற்றில் பால் வார்க்க, அவசரமாய் திறந்து பரிமாறிக்கொண்டாள்.

இளம் சூடான ரவா இட்லி, தாராளமாய் எண்ணெய் விடப்பட்ட பொடி, துவையல், பழம், சிறு குடுவையில் கற்கண்டு பால். அத்தனையையும் ரசித்து– சுவைத்தாள். காலி பாத்திரங்களைக் கழுவி, அதே மரத்தட்டில் வைத்தபோது, கார் ஒன்று வீட்டின் முன் வருவது தெரிந்தது.

அதற்கு எதிரொலிபோல குழந்தைகள் சிரிப்பும், பேச்சுமாய் முன் அறைக்கு ஓடும் சத்தம்.

'வந்திருப்பது குழந்தைகளின் அப்பா ராஜசேகரனா? முத்தையா சொன்னதின்படி அவருக்கு முப்பது வயதுக்குள்தானே இருக்க வேண்டும். அதற்குள் இரு குழந்தைகளுக்கு தகப்பன் ஆகிவிட்டாரா? அவரது தாயை சந்தித்தாகிவிட்டது. அப்படியானால் மனைவி?

இப்படி வசதியற்ற மலைக் கிராமத்தில் இந்த குடும்பம் ஏன் வசிக்கிறது?

அதெல்லாம் அவர்களது பிரச்சினை. இப்போது தன் கேள்விக்கு இந்த ராஜசேகரன் பதில் சொல்ல வேண்டும். 'வா... வா' என்று அழைத்துவிட்டு, தான் வரும் விதம்– நேரம் பற்றி இவள் தெரிவித்த பிறகும், இவளைச் சந்திக்க வராமல், தகவலும் கூட தராதவனை ஒரு பிடி பிடித்துவிட வேண்டும். இவனுடன் வியாபார கொடுக்கல்– வாங்கல்கூட தேவையே இல்லை.

முதல் கோணல் முற்றிலும் கோணல்தான். அடிப்படை மரியாதையோ, நேர்மையோ அற்ற இவனை மற்ற காரியத்தில், முக்கியமாய் காசு விஷயத்தில் எப்படி நம்புவது? இவன் வீட்டு சாப்பாட்டை உண்டதற்காய் துளி மரியாதையைத் தர வேண்டியது இருக்கும்... மற்றபடி அவனை அழ வைத்துவிட வேண்டும்' என்ற முடிவோடு எதற்கும் தயாராய் நின்றாள் வர்ஷி!

## 4

இவளது துணிவுக்கு வாழ்த்து சொல்வதுபோல சிறிய உறுமலைத் தொடர்ந்து வீட்டில் ஆங்காங்கே விளக்குகள் கண் திறந்து ஒளி



பாய்ச்சின.

இவளுக்குப் புரிந்தது.

வந்தவன் 'ஜெனரேட்டரை' இயக்கி இருக்கிறான். இதுவரை 'டீசல்' இல்லாததாலோ அல்லது இங்குள்ள மற்றவர்கள் அதை இயக்க அறியாததாலோ எண்ணெய் விளக்குகளைப் பொருத்தி வைத்திருப்பார்கள் போலும்.

தாழ்ந்த குரலில் பேச்சு சத்தம் தொடர்ந்தது.

'தனது வருகையைப் பற்றி ராஜசேகரனிடம் தெரிவிக்கிறார்கள்... இதோ இப்போது அலறி அடித்தபடி வருவான்' என்று காத்திருந்தவள், கையில் இருந்த உணவுப் பாத்திரங்களை அங்கிருந்த மேசை மீது வைத்துவிட்டு மிடுக்காய் நின்றாள். ஆனால், அந்த மிடுக்கு கரையும் வரை அவன் அங்கு வரவே இல்லை. கடுப்புதான் மிஞ்சியது.

'பயண அலுப்பு தீர சாப்பிடுகிறான் போல... சாப்பிட்டுவிட்டுதான் வரட்டுமே'– தன்னையே ஆசுவாசப்படுத்த முயன்றாள்.

சில நிமிடங்களுக்குப் பின் அறைக்கதவு தட்டப்பட்டது. இவள் அனுமதிக்காக காத்திராமல் உள்ளே நுழைந்தான்.

அவனை காட்டமாய் ஏறிட்டவள், தன்னையும் அறியாமல் எழுந்தாள். உயரமும், கம்பீரமான முகமும், உயர்ரக உடைகளும் அச்சூழலுக்குப் பொருந்தாது போல் தோன்றின. புருவங்களைச் சுருக்கி இவள் பார்த்ததுபோலவே அவனது கூர் பார்வையும் சில நொடிகளில் இவளை அளவிட்டது.

'நல்லவேளையாக தான் நனைந்த உடையோடு நிற்கையில், இவனது பார்வையில் படவில்லை' என்று நினைத்தவள், அவனது மன்னிப்புக் கோரலை எதிர்பார்த்திருக்க,

"என்னைப் பார்க்க வந்தீங்க போல?" என்றான், அமர்த்தலாய்.

இவளது அப்பா அடிக்கடி 'திண்ணக்கம்' என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது உண்டு. அதற்கான அர்த்தம், 'திமிரான அழுத்தம்' என்றும் அவர் விளக்கி இருந்தாலும் அதன் முழு அர்த்தமாய் தன் முன் நிற்பவனைக் கண்டாள் வர்ஷி.

ஆனாலும், எடுத்ததுமே எகிறக்கூடாது. தன் பசியை ருசியாய் தீர்த்ததோடு– அடைக்கலமும் தந்த வீடு, இது. தவிர, வந்திருப்பது வியாபாரம் பேச... இதிலும் 'பின்' புத்தியாய். இருந்துவிடக்கூடாது என்ற முடிவுடன் புன்னகைக்க முயன்றாள்.

ஆனால், அவன் முகம் இறுகியே இருந்தது!

"நீங்க மிஸ்டர் ராஜசேகரன்தானே...?"

"ம்... ம்."

திண்ணக்கமேதான்!

"இப்படியொரு சூழலில் உங்களை சந்திப்பேன்னு நினைக்கலை. ரொம்ப வித்தியாசமான இடம் இது..." ஆரம்பித்தாள்.

"முதன் முறையாக பார்ப்பவர்களுக்கு அப்படித்தான் இருக்கும்."

"அப்படி முதல் முறையாய் வரும் எனக்கு- நீங்க நேரில் வராவிட்டாலும், விமான நிலையத்துக்கு ஒரு 'டாக்ஸி'யாவது அனுப்பி இருக்கலாம்." அமர்த்தலாய் குத்திக் காட்டினாள்.

"முத்தையாவின் வேனில் வந்திங்க போல?"

'இவன் விடாக்கண்டன்'– எரிச்சலை மறைத்தவள், பேச்சைத் தொடர்ந்தாள்.

"நீங்க தயங்கினாலும், நான் எடுத்த காரியத்தை முடிப்பதுன்னு கிளம்பி வந்துட்டேன்."

"ரொம்ப சிரமப்பட்டு..."

"இருக்கட்டும். நாம வியாபாரத்தை, வந்த காரியத்தைப் பேசி முடித்தால், நான் சீக்கிரம் இங்கிருந்து கிளம்பலாம்."

"சரி, பேசுங்க."

அவன் பேச்சும், பேசிய முறையும் இவளுக்கு மிக விசித்திரமாய் இருந்தாலும், விஷயத்துக்கு வந்தாள்.

"தேன் முகட்டில் உங்க நிலத்தை எங்களுக்கு விற்பதற்காய் நீங்க அனுப்பிய படங்கள், எங்க 'பாஸ்' மித்தலுக்குப் பிடிச்சிருந்தது. அதை நேரில் பார்ப்பதற்காகதான் நான் வந்தேன்."

"இப்படியொரு நாளில்... இந்த நேரத்தில்?"– என்றான், மொட்டையாய்.

'இதுவரை தன்னிடம் மன்னிப்பு கேளாதவன், தன்னை மன்னிப்பு கேட்க வைத்துவிடுவான் போலவே?'– இவளுக்குக் கொதித்தது.

"நாம கணினியில் தொடர்பு கொண்டபோது அதுபற்றி நீங்க எதுவும் சொல்லவில்லை. ரொம்ப ஆர்வமாய் வரவேற்றீங்க."

"இங்கே நிலம் வாங்குவதுதானே உங்க நோக்கம்...?"

"இதென்ன ஏதும் அறியாதது போலொரு பாவனை? வந்து பார்த்தால் எந்தத் தொகையும் தர தயாராய் இருப்பீர்கள் என்று சொன்னீர்களே..." சற்று கடுப்பாகவே இவள் பேச, அவன் முகத்தில் எந்த உணர்வுமே இல்லை.

'கம்பீரமும், நாகரீகமுமான இவன் முகத்தில் சற்று மலர்வு இருந்தால் ஆள் அழகன்தான். ஆனால், இவ்வளவு காட்டுத்தனமானவனின்

பாவம், மனைவி எப்படி இவனோடு குடித்தனம் பண்ண குழந்தையையும் பெற்றாளோ?'

"நாளை காலையில் நிலத்தைப் போய், அதன் அளவு- வளம் எல்லாம் பார்த்து, சில படங்களையும் எடுத்துக்கொண்டால் எங்க முதலாளி மித்தலுடன் கலந்து பேசி, வாங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம்."

"அதாவது உரியவர்கள் அதை அனுமதித்தால்?"

இவள் திடுக்கிட்டாள்.

'தான் சரியான நபரிடம்தான் பேசுகிறோமா?' என்ற சந்தேகம் அப்போதுதான் முளைவிட்டது அவளுக்குள்!

'கோபத்தில் ஒரு காரியத்தைச் செய்வதும், புயலில் கப்பல் விடுவதும் ஒன்றுதான் என்பாரே அப்பா? அதுபோல பெண்ணான என்னால் ஆகாதது உண்டா? என்று சிலிர்த்துக்கொண்டு கிளம்பியதில் இருந்து இதோ இவனோடான பேச்சு வரை எல்லாம் அர்த்தமற்ற அசட்டுத்தனம்தானோ? கண்மண் தெரியாமல் எங்கோ மிதந்துகொண்டு இருக்கிறேனோ?'- இவள் நினைக்கும்போதே ஒருவர் அந்த அறைக்குள் நுழைந்தார்.

"என்னப்பா விக்ரம், சாப்பிட்டுகிட்டே பேசலாமேப்பா?"

முதிய பெண்மணி அழைத்ததும் வர்ஷிக்கு 'சுருக்'கென்றது.

'அவன் முழுப் பெயர் வருண் ராஜசேகரன்தானே? இந்த விக்ரம் வேறு ஒருவனோ?'

மனதோடு தன் கால்களும் துவண்டது போலிருந்தது வர்ஷிக்கு! இதுவரைத் தான் பேசியது யாருடன்?

வெகு சாமர்த்தியமாய் தன்னிடம் இருந்த விவரத்தைக் கறந்தவனைக் கோபமாய் ஏறிட்டாள்.

"உங்க பேர்?"

"விக்ரம்."

"ராஜசேகரன்னு பொய் சொன்..."

"மன்னிக்கணும். அதுதான் என் முழுப்பெயர், விக்ரம் ராஜசேகரன். இந்தப் பக்கத்தில் ராஜசேகரய்யான்னாதான் தெரியும்."

"என்னோடு கணினியில் தொடர்புகொண்டது நீங்கள் இல்லையா...?"

"இல்லை..."

"அப்படின்னா... என்னை ஏமாற்றி, நான் வந்த காரணத்தைத்



தொரிஞ்சுக்கிட்டீங்க.

"இந்த நிலத்தைக் காப்பாற்ற எதுவும் செய்யலாம், தப்பில்லை" என்று ஏதோ போராட்ட வீரன் போல பேசினான்.

இவள் உள்ளூரப் பொறுமி,

முதியவளோ... "முதல்ல சாப்பிடுப்பா!" என்றாள், மறுபடியும்.

"நீங்க சாப்பிட்டீங்கன்னு தெரியும்... உங்க பெயர்தான் தெரியலை" என்றான் அவன், இவளிடம்.

"வர்ஷி."

"என்னோடு உட்கார்ந்தீங்கன்னா நாம தொடர்ந்து பேசலாம்" என்றவன் நடக்க, வேறு வழியின்றி தொடர்ந்தாள் இவள்.

'மேலும் வாய் தந்து மாட்டிக்கொள்ளவா? தவிர, இவனுக்கு இந்த நிலம் விலையாவதில் இஷ்டமில்லை போலவே! இருக்கட்டும். தன்னுடன் வியாபாரம் பேசிய அந்த வருண் ராஜசேகரன் எங்கே?'

இது பற்றி இவனிடமே கேட்டுவிட்டாள்.

அதைக் கேட்டதும் அவனது முகம் இறுகியது.

"இது அவன் வீடில்லை."

"தேன் முகடு இதுதானே?"

"இது மொத்தமும் என் வசத்தில் உள்ள சொத்து."

தன் புத்தியை மறுபடி கடிந்துகொண்டாள், அப்பேதை.

அந்த வருண் சொன்னதை மட்டுமே நம்பி இவ்வளவு தூரம் வந்தது முட்டாள்தனமாய் பட்டது. 'அதனால்தான் இந்த விக்ரம் தன்னிடம் அத்தனை இளக்காரமாய் பேசினதோ?'

"ஆரம்பத்தில் இருந்து விவரங்களைச் சொன்னால் நல்லது." என்றவன் சாப்பிட ஆரம்பிக்க, இவள் மறுத்தாள்.

"வியாபார விஷயத்தை வேற்று ஆளுடன் நான் பேச முடியாதே."

"இந்த நிலத்தை வாங்க ரொம்ப ஆர்வமாய் மும்பையில் இருந்து வந்திருக்கீங்க, பாவம்."

'ஓட்டுநர் முத்தையா மும்பை விவரத்தை இங்கே சொல்லி இருக்க வேண்டும்.'

"உங்களை அழைத்துப் போக விமானநிலையத்துக்கு யாரும் வரவில்லை என்றபோதாவது சற்று எச்சரிக்கையாகி, கோவையிலேயே தங்கி இருக்கலாம்."

பதில் சொல்ல வழியின்றி மேசையில் இருந்த தண்ணீரை எடுத்துப் பருகினாள்.

"உங்க நிறுவனம் இந்த வேலைக்கு ஒரு ஆணை அனுப்பி

... வசீகரமானவனாய்...

"இப்போ ஒன்றும் மோசம் போயிடலை. நாளை காலையில் நா[illegible] கிளம்பிடறேன். அந்த வருண் எங்கே இருப்பாருன்னு சொன்னா ஒ[illegible] முறை அவரை மட்டும் பார்த்துட்டுறேனே..."

"அவன் நேரான ஆளாய் இருந்தால், உங்களைக் கோவையிலே[illegible] சந்திச்சி இருக்கணும்..."

"ம்ம்... அவர் உங்க தம்பியா?"

"என் கூடப் பிறந்தது அக்கா மட்டும்தான்."

மேலும் பேச்சைத் தொடர்வதில் அர்த்தமில்லை. இது முழுக்க ஒரு அந்நியனின் வீடு. இங்கு வந்து உட்கார்ந்துகொண்டு, அவர்களது விருந்தோம்பலை அனுபவிப்பது- முறைப்பது சரியில்லை.

எழுந்து நின்றாள்.

"மன்னிக்கணும். தவறான தகவலை நம்பி இவ்வளவு தூரம் வந்துட்டேன். உங்களுக்குச் சிரமமும் கொடுத்துட்டேன்."

"சிரமமில்லை. அம்மாவுக்கு சந்தோஷம்தான்."

"நிச்சயம் இருக்காது... ஏன்னா, அவங்களுக்குத்தான் எதிர்பாராத விருந்தாளியால் அதிக சிரமம்."

"இங்கே இருக்கிற அவங்க பேரன், பேத்தியைக் கவனிக்க ஒரு ஆளை ஏற்பாடு பண்ணுவதாய் சொல்லி இருந்தேன். அதற்காக நீங்க வந்ததாய் நினைச்சாங்க போல."

பெரியவர் குறுக்கிட்டார்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. கேலி பேசுறான்ம்மா. உன்னைப் பார்த்தால் குழந்தைகளுக்கான ஆயா போலவா இருக்கு?"

"பக்கா பட்டணத்துப் பெண்."

இவளது அடர்நீல ஜீன்ஸ், மெல்லிய வெள்ளை மேலாடை- அதற்குப் பொருத்தமான நீலம்- வெள்ளை கலந்த செருப்புகளை மறுபடி ஒரு நோட்டமிட்டாள்.

## 5

**வெ**குநேரம் உறக்கம் வராமல், படுக்கையில் புரண்டபடியே கிடந்தாள் வர்ஷி.

'தான் விக்ரமை திண்ணக்கமான காட்டான் என்று நினைத்ததுபோல



அவன் தன்னை என்னவென்று முடிவு கட்டினான்?

அசடு, அவசரக்குடுக்கை, கூடவே அகங்காரம் வேறு என்பதாகத்தான் இருக்கும்!'

ஏளனமாய் பேசினாலும் கரிசனையால் ஒரு மாத்திரையைத் தந்தவன், "இதைப் போட்டுக்கோ. சளி, காய்ச்சலைத் தவிர்க்கக்கூடும்" என்றபோது, இவள் மறுத்தாள்–

"எனக்கு மழை பழக்கம்தான்"– என்றபடி.

"காதலும், மழையும் ஒன்றுதான்–

நனையும்போது சந்தோஷம், நனைத்த பிறகு ஜலதோஷம்!"– என்றவன் விளக்க, அவசரமாய் மாத்திரையை வாங்கிக்கொண்டாலும், அதை விழுங்குவதாய் இல்லை அவள்.

ஆனால் தூக்கமின்மையோடு சில தும்மல்களும் சேர்ந்து கொள்ள, அதை விழுங்கியவள்... சீக்கிரமே உறங்கியும் போனாள்.

**கா**லையில் அவள் விழித்தது, மெள்ள கதவுத் தட்டப்படும் சத்தம் கேட்டுத்தான்.

முடியைக் கோதியபடி அறைக் கதவைத் திறந்தவள் கண்கள் ஆச்சரியம் காட்டின.

"காலை வணக்கம் ஆன்ட்டி."

சின்ன பொம்மை போல நின்ற அச்சிறுமிக்கு ஆறு அல்லது ஏழு வயது இருக்கலாம். அவள் கையில் இத்தனை பெரிய மரத்தட்டை தந்துவிட்டிருக்கிறார்களே! அவசரமாய் அதை வாங்கிக்கொண்டவள், பதிலுக்குக் காலை வணக்கத்தையும் தெரிவித்தாள். குறுமேசையில் இருந்த கைக்கடிகாரத்தை எதேச்சையாய் பார்த்தவள் பதைத்து போனாள். மணி ஒன்பதே கால்!

அந்நிய வீட்டுக்குள் வந்து எப்படி இவ்வளவு நேரம் தூக்கத்தில் கிடந்திருக்கிறாள்?

இப்போது விக்ரமின் பார்வையில் அவள் ஒரு சோம்பேறி வேறு!

"நன்றி செல்லம், நானே வந்திருப்பேனே..."

"காலையில ஒன்பதுமணி வரைக்கும்தான் உணவு மேசையில் 'டிபன்' இருக்கும். அதான் பாட்டியம்மா உங்களுக்குக் கொண்டு போகச் சொன்னாங்க."

"ஓ.கே.! உன்னோட பேர் என்னடா?"

"ரம்யா."

சிறு கூச்சமும், பெருமையுமாய் சொன்ன சிறுமி– பார்வைக்கும் ரம்யமாகத்தான் இருந்தாள். ஆனால் சற்று மெலிந்து, வெளிறித்

இச்சிறுமியிடம் தனக்கான உணவைத் தந்துவிட்ட பெரியவரின் மீது வர்ஷிக்கு சற்று எரிச்சல் எழுந்தது. வீட்டில் வேலைக்காரர்கள் இரு... சின்னப் பெண்ணை 'உணவுத் தட்டைச் சுமக்க வைத்துவிட்டார்க... என்ற ஆற்றாமை.

"நன்றி ரம்யா. நான் சாப்பிட்டு தயாராகிட்டு, உன்னை வந்... பார்க்கிறேன், சரியா?"

"ம்ம்... பாட்டியம்மாவும் அப்படித்தான் சொன்னாங்க. அங்கே... நிற்காதே, கொடுத்ததும் வந்திடுன்னு."

மறுபடி இவளுக்குள் சுருக்கென்று கோபம் தலை நீட்டிய... 'வேண்டாதவற்றைப் பேசி பிள்ளைகளின் குழந்தைத்தனத்தை... கலைத்துவிடுவது பெரியவர்கள்தான்' என்ற யோசனையுடன் குளிக்க... சென்றாள்.

உடல் அலங்கார வேலைகளை முடித்து உடனே போய் ரம்யாவிட... பேச்சுத் தர வேண்டுமென்று ஆவலில் இருந்தாலும், அழையா... விருந்தாளியான தான் இப்படி அநாவசிய உரிமை பாராட்டி நேரத்தை... கடத்தக்கூடாது என்பதும் புரிந்தது.

துருவிய கேரட், வெங்காயம் தூவிய ஊத்தப்பமும், மணக்கும் மல்லிச்... சட்னியோடு சூடான காப்பியும், தங்க நிற பேரிக்காய் ஒன்றும் தனக்காக... அனுப்பி வைத்திருந்த பெரியம்மாவிடம் போய் மனதார நன்றி சொல்லி... காலை தாமதமாய் எழுந்ததற்காக வருத்தமும் தெரிவித்துவிட்டு கிளம்ப... வேண்டியதுதான். அந்த 'திண்ணக்க' மனிதனின் கண்ணில் படாமல்... கிளம்ப முடிந்தால் ரொம்ப நல்லது!

தன் படுக்கையைச் சீராக்கியவள், நேற்றிரவு தூக்கம் வராதபோது 'டர்க்கி' துவாலையை வளைத்து, முறுக்கி தான் செய்திருந்த அன்னப்பறவை வடிவத்தை அதில் வைத்தாள். நீல நிற படுக்கை விரிப்பில் 'புஸு புஸு' துவாலையில் உருவான பறவை, நீரில் மிதக்கும் அன்னம் போலவே தோன்றியது. இது மாதிரியான ரசனையான கை வேலைகளை அவள் கற்றுக்கொண்டது, அவர்களது ஓட்டல் பணியாளர்களிடம் இருந்துதான்.

தன் பெட்டியை அடுக்கி மூடியவள், பொம்மை அன்னத்திடம் குனிந்தாள்.

'அந்தக் காலத்தில் உன்னைத்தானே தூதாய் அனுப்பினார்களாம்? நீ சொன்னாலாவது விக்ரமுக்குப் புரியுமோ... என்னவோ? அவன் கடுப்பாகும்படி நான் எந்தத் தப்பான திட்டத்தோடு இங்கே வந்துட்டேன்? நிலம் யாருடையதாய் இருந்தாலும், அதில் ஒரு 'ரிசார்ட்' கட்டப்பட்டால் இந்த கிராமம் சுபிட்சமாகுமே? பண்டமாற்றம் மூலம் வாழும் இந்த மக்கள் கையில் காசு நிறைய புழங்கும். வரும் விருந்தினரிடம் எப்படிப் பேசிப் பழகணும்னு பயிற்சி எடுத்துக்கொண்டால், இவர்களுக்கு வெளியூரிலும் வேலை கிடைக்கும்...'

தனியே இருந்தாலும் வாய்விட்டு பேசியவள், சற்று சங்கோஜத்துடன் நிமிர்ந்தாள். இங்கு விடுமுறைக்களம் ஒன்று உருவானால் கிராமத்து மக்கள் முன்னேறலாம் என்பது உண்மைதான் என்றாலும், அதை விக்ரம் புரிந்துகொள்ள வேண்டுமே!

மும்பையின் கடற்புரத்தில் இவளது மேற்பார்வையில் உருவான விடுமுறைக்களம் இப்போது வெகு பிரபலம். வெறுமனே அலை புரண்ட அந்தத் தீவில் காசும் புரளுகின்றது. பெரும்பாலும் ஐரோப்பியர்களே அதிகம் அங்கு தங்குவதற்கு வருவதால், அத்தீவு மக்களும் ஆங்கிலம்-பிரெஞ்சு பேசப் பழகி, வெளியுலகில் சகஜமாய் நடமாடுவதோடு, தங்கள் பிள்ளைகளையும் மும்பைப் பள்ளிக்கூடங்களில் சேர்த்து இருந்தார்கள்.

'அந்த வருண் ராஜசேகரன் எங்கே போய் மறைந்தான்? அவன் இந்த மலையின் உரிமையாளனாய் இல்லாவிட்டாலும், சூடாய் நான்கு கேள்விகளைப் போட்டு வறுக்காமல் இங்கிருந்து கிளம்புவதா? அவனுக்கு இந்த விக்ரமோடு ஏதோ தொடர்பு இருப்பதாய்த்தான் தோன்றுகிறது. விக்ரம் அதைப் பற்றி சொல்ல விரும்பாவிட்டாலும், பெரியம்மாவிடம் விசாரித்துப் பார்க்கலாமா?'

இவள் பெட்டியைக் கையில் எடுத்தபோது, மறுபடி எட்டிப் பார்த்தாள் குட்டி ரம்யா.

"ஹையா... அந்த வாத்து அழகா இருக்கு, ஆன்ட்டி."

"கழுத்து நீண்டிருக்குதே, அதனால இது வாத்து இல்லை... அன்னம்."

"ஓ... அந்தக் கதை எனக்குத் தெரியுமே! வாத்துக் குஞ்சுகளோடு ஒரு குட்டி அன்னமும் வளரும். தான் ரொம்ப அசிங்கமாய் இருப்பதாய் நினைச்சு கவலைப்பட்ட அது, ஒரு நாள் திடீர்னு அழகாயிடும்."

"ம்ம்."

"அதேபோல வளர்ந்ததும், நானும் உங்களைப் போல அழகா ஆகிடுவேனா?"

"இப்பவே உன் பேர் சொல்வதுபோல நீ அழகுதான். நல்லா சாப்பிட்டு, நிறைய ஓடி ஆடணும். அவ்வளவுதான்."

"சரி."

கூச்சமாய் சிரித்தாள் அந்த குட்டி அழகி.

இன்னுமொரு சின்ன குட்டி இங்கே உண்டு போலவே. நேத்து ராத்திரி உங்க பேச்சு கேட்டுது?"

"ஆமா, என் தம்பி ராகுல். அவனுக்கு ரெண்டு வயசுதான்."

"ரெண்டு பேரும் பாட்டியைத் தொந்தரவு படுத்தாமல், ஒழுங்கா சாப்பிடணும்."

"எனக்குப் பசிக்கிறதில்லை. வீட்டிலேயே உட்கார்ந்திருக்கேனே. ஆனா, ராகுல் நொறுக்குத்தீனி எல்லாம் சாப்பிட்டு குண்டு குண்டா இருப்பான். நான் மெலிஞ்சு அசிங்கமாய் இருக்கறதால சமையல் ஆ... திட்டுவாங்க."

"அளவில் இல்லை அழகு. பெரும்பாலும் குணத்தில்தான். உருண்டை லட்டு இனிப்பா இருப்பது போல, குச்சி குச்சியான சீனி சேவு சுவைதானே?"

"அதென்ன சீனி சேவு?"

"மும்பையில் வளர்ந்த எனக்கே இதெல்லாம் தெரிந்திருக்கிறது. இங்குள்ள உனக்கு இது பற்றி ஏன் தெரியலை?"

"நாங்க டெல்லியில வளர்ந்தோம் ஆன்ட்டி."

"ஓஹோ, விடுமுறைக்காக பாட்டிம்மா வீட்டுக்கு வந்து இருக்கீங்களா?"

சிறுமியின் முகம் மாறியது.

"சரி... சரி, பாட்டியம்மா கூப்பிடுவாங்க. நான் கிளம்பறேன்..." அறையில் இருந்து வெளியேற முயன்றாள்.

"நானும் வர்றேன். அவங்களுக்கு நன்றி சொல்லிவிட்டு கிளம்ப வேண்டியதுதான்."

"நான் உங்களோடு பேசிட்டு இருந்தேன்னு சொல்லிடாதீங்க ஆன்ட்டி."

"அதனால் என்னடா?"

"இல்ல... பாட்டியம்மா கோபமாய் இருந்தாங்க."

வர்ஷிக்குள் குற்ற குறுகுறுப்பு. 'எதிர்பாராத விருந்தாளியாய் தான் வந்ததும், நேரத்தோடு எழும்பாததும் பெரியவரை எரிச்சல் படுத்தி இருக்குமோ? நன்றியோடு, மன்னிப்பும் கோரிவிட வேண்டியதுதான்'.

"அதோ... அதுதான் பாட்டியம்மாவின் அறை" சுட்டிக் காட்டிவிட்டு சிறுமி நழுவ, இவள் தயக்கமாய் நடந்து சென்று மூடிய அறைக் கதவின் முன் நின்றாள்.

உள்ளே இருந்து விக்ரமின் குரலும் கேட்க, கதவைத் தட்டத் தோன்றாமல் நின்றாள்.



"குழந்தைகளை வத்சலா என்னிடம் அனுப்பிட்டா. நீ என்னடான்னா ...ங்களை இங்கே இழுத்துட்டு வந்திட்டே விக்ரம். இப்ப பாரு என்ன ...ச்சுன்னு..." அலுத்துக்கொண்டிருந்தாள் அந்தத் தாய்.

"எல்லாம் நல்லதுக்குத்தானம்மா. இந்த நிலையில் நம்ம உதவி ...ங்குள்ள மக்களுக்குத் தேவை இல்லையா?"

"எனக்கு முடியலையேப்பா. ரம்யாவும், ராகுலும் சரியாய் ...ாப்பிடறதுகூட இல்லை. அம்மாவைப் பத்தின ஏக்கம் போல. ...வங்களை இந்தக் காட்டில் வைத்து எப்படி சமாளிக்கிறது?"

வர்ஷியின் மனம் விரைவாய் கணக்குப் போட்டது. ஆக, டெல்லியில் ...ளர்ந்த குழந்தைகளை அவர்களது தாய்- தகப்பனின் வீட்டுக்கு அனுப்பி வைத்திருக்கிறார். இங்கே ஏதோ தடுமாற்றம், கணவன்– ...னைவிக்குள் தகராறு போல...

"கடவுளாய் பார்த்து உங்க உதவிக்கு ஒரு பெண்ணை வேறு அனுப்பி இருக்காரேம்மா. சமாளிச்சுடலாம்."

"விளையாறியா விக்ரம்? மும்பை 'மாடல்' போலிருக்கிற அந்தப் பெண்ணுக்கு விஷயம் தெரிந்தால் என்ன ஆகப்போறதுன்னு நான் கலங்கிட்டிருக்கேன். நீ கலாட்டாவாய் பேசறே."

கேட்ட வர்ஷிக்குள் குலுங்கியது.

'பேச்சு தன்னைப் பற்றிப் போலவே?

தனக்கு தெரிவிக்கப்பட போகும் விஷயம் என்னது?'

படபடக்கும் மனத்துடன் கதவைத் தட்டினாள்!

## 6

கதவைத் திறந்தது விக்ரம்தான்.

இவள் கையில் இருந்த பெட்டியைக் கவனியாதவன் போல, "நல்லா தூங்கினீங்க போல" என்றான்.

இதழோரம் ஓடியது கிண்டல் சிரிப்பேதான்.

அதைக் கவனியாதவள் போல,

"ஆமா... நல்ல தூக்கம்" என்றவள்– பெரியம்மாவை நோக்கி, "சிரமத்தின் ஊடே என்னை நல்லா கவனிச்சதுக்கு நன்றி அம்மா. கீழே இறங்கும் ஏதேனும் ஒரு வாகனம் பார்த்து விட்டீர்களானால் கிளம்ப நான் தயார்..."

விக்ரமின் கிண்டல் புன்னகை மேலும் விரிந்ததைக் கண்டு தடுமாறி

பேச்சை நிறுத்தினான் அவன்.

"நம்ம வேலையை மட்டும் கவனிப்பது நல்லதுதான் அம்மா ஆனால், அக்கம்பக்கம் பார்ப்பதும் அவசியம்."

இளையவள் குழம்பி நிற்பதைக் கண்ட விக்ரமின் தாயார் இதம விளக்கினார்.

"காலையிலேயே வீட்டுக்குள் விளக்குகள் எரிதேயும்மா. வெளி பார்த்தியா? கடும் பனிமூட்டம். பொதுவாய் மழை இறங்கினால், தங்காது. இப்போதான் காலநிலையெல்லாம் விசித்திரமாய் மாறி வருதே! இந்த நிலையில் நீ கீழே இறங்குவது ஆபத்து..."

"நான் எப்படியாவது போகணுமேம்மா..."

"நடந்து போகலாம்தான். ஆனா, அதற்கு நீங்க போட்டிருக்கு செருப்பு தோதில்லை வர்ஷி."

இடக்காய் சொன்னவனைக் காட்டமாய் பார்த்தாள்.

மும்பையின் சாலையோரக் கடைகளில் விதவிதமான காலணிக கொட்டிக் கிடக்கும். விலை குறைவு என்பதால் பெண்கள் தங்க உடைகளுக்கேற்ற நிறத்தில் அள்ளிக்கொள்வார்கள். மலைப் பகுதிய நடந்து திரிவதற்குத் தோதாய் இவள் திடகாத்திரமான ஒரு காலணியை எடுத்து வைத்திருந்தாலும், இப்போதுதான் அதற்குத் தேவை இல்லையே! நேற்று போட்டிருந்த அதே நீல- வெள்ளைச் செருப்புதா உடைக்குப் பொருத்தமாய் மெல்லிய பாதத்தில் இருந்தது.

இளையவர்களுக்கு இடையே மோதிய முறைப்பை உணர்ந் பெரியவர் மறுபடி குறுக்கிட்டார்.

"இப்போதுதாம்மா தகவல் வந்தது. சாலையில் மரம் விழுந்திருக்காம் நேற்று அடிச்சது பேய் காற்றில்லையா? பெரிய மரம் கிளைகளோ விழுந்திருப்பது ஒரு ராட்சசன் தலைவிரி கோலமாய் கிடப்பது போல இருக்குதுன்னு செல்லா விவரிச்சா."

வர்ஷியின் மனசும் முறிந்தது!

"நாளைக்கு மரத்தை வெட்டி, பாதையைச் சரி ஆக்கிடுவாங்கல்லையா?" கேட்டாள், அச்சத்தால் மெலிந்த குரலில்.

"அதற்கு ஒரு வாரமாகும்"– அலட்சியமாய் பதிலளித்தான் விக்ரம்.

கோபமும், கவலையும் இவள் கண்களுக்குள் குடை விரித்தன.

"என்ன இப்படி சொல்றீங்க?"

'பொறுப்பற்று பேசுறீங்க' என்று சொல்ல வந்ததை, அவனது தாய் அருகில் இருந்ததால் மாற்றிப் பேச வேண்டியதானது.

"யாரும் மேலே வர முடியாது, இங்குள்ளவர்கள் அவசரத்துக்கு இறங்க முடியாதுங்கறது– அதுவும் ஒரு வாரத்துக்கு என்பது பெரும் பிரச்சினையாச்சே?"



"இது மலை கிராமம்மா. அப்படியே உடனே மரத்தை வெட்டி அகற்றினாலும், இரண்டாம் நாள் வேறு ஒரு மரம் விழக்கூடும். இந்தக் காற்று ஓயும் வரை காத்திருந்து, மொத்தமாய் வந்து சிராக்கிட்டுப் போவாங்க. வந்து வந்து இறங்க முடியாதில்லையா? தவிர இதுபோக, வேறு பல மலை ஊர்களும் சுற்றிலும் இருக்குதே! மின்சாரம் தடைபடாமல் இருந்தாலே இந்தக் கிராமங்களுக்கு எல்லாம் பெரும் நிம்மதி. நாம சூரிய ஒளியில் இருந்து சக்தி எடுப்பதால் பரவாயில்லை. இப்படி சூரியனும் தலைகாட்டாத காலத்துக்கு 'ஜெனரேட்டர்'ரும் உண்டு."

"அதெல்லாம் இந்த ஒரு வாரத் தங்கலின்போது, வர்ஷிக்கு புரிஞ் சிடும்"– என்றான் அவன்.

இந்தப் பதிலில் சிறு நக்கல் வெளிப்பட்டதை உணர்ந்தாள். 'ஏதேதோ கனவுகளுடன் வந்த நீ, இங்குள்ள கஷ்டங்களைப் புரிந்துகொள்'– என்பதுபோல இருந்தது அந்தப் பதில்.

'இவனுடன் விருந்தாளியாய் இங்கே ஒரு வாரம் தங்குவதா?'

இவள் முக வெளிறலைக் கண்ட பெரியவர் ஆறுதல் படுத்தினார்.

"நல்ல நேரம்... நேத்து நீ வரும்போது விபரீதம் ஏதும் நேரலை. அதற்குக் கடவுளுக்கு நன்றி சொல்லும்மா. இது பாதுகாப்பான இடம். ஆக, நிம்மதியாய் இரு."

"ஆனால் மும்பையில் நான் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கே! இங்கு மூணு நாள்தான் ஆகும்னு நினைச்சேன். அப்புறம், அப்பாகிட்ட என்ன பதில் சொல்றது?"

"ஓ... அப்பா இருக்காங்களா?" என்றவனின் கழுத்தை நெரிக்கலாம் போலிருந்தது வர்ஷிக்கு!

'ஏதோ இவன் மட்டுமே குடும்பஸ்தன் போலவும், மற்றவர்கள் எல்லாரும் நாடோடிகள் எனவும் அல்லவா பேசுகிறான்?'

"அம்மா இருக்காங்களா?" இழுத்தார், பெரியவர் மெள்ள!

"இப்ப இல்லை. நான் பள்ளிக்கூடம் முடிச்ச நேரம் இறந்துட்டாங்க. அப்பா ரொம்ப பிரியமானவர் என்பதால் சமாளிச்சுட்டேன். வெளியூர் போயிருக்கும் அப்பாவும் நாலாம் நாள் திரும்பிடுவாங்க."

"உன் விலாசம், அப்பாவின் 'செல்போன்' எண் இரண்டும் கொடு வர்ஷி. இங்குள்ள நிலையைப் பற்றி அவருக்குத் தகவல் அனுப்பிடலாம்."

சுலபமாய் அவன் தன்னை ஒருமையில் கூப்பிட ஆரம்பித்ததைக்

கவனித்தாலும், உதவ வருபவனை வார்த்தைகளால் உதைக்க மனமி
அவன் கேட்ட விவரங்களைத் தந்தாள். ஆனாலும், இங்கே சில நாட்
அழையாத விருந்தாளியாக இருக்க மனமில்லை அவளுக்கு!

"மரம் முறிந்த இடம் வரைக்கும் என்னை நீங்க கூட்டிப் போயிடு
வேறு யாரேனும் மறுபுறம் வந்து என்னைக் கீழே கொண்டு போ
விட முடியாதா?"

"எந்த டிரைவரும் இப்போது மலையேற மாட்டாங்க. மரம் முறி
சேதி அவர்களை எட்டி இருக்கும்..."

"எப்படி... எப்படி சேதி அவர்களை எட்டும்?"

இதற்கும் பெரியவர் பதிலளித்தார்.

"அவர்களுக்கிடையே பலவிதமான சமிக்ஞைகள் உண்டும்மா. வ
சொல்லவும், வராமல் இருக்கவும், ஆபத்துக் காலத்துக்காகவும் இ
உள்ளவர்களுடன் சங்கேத மொழியில் குறிப்பு அனுப்பிடுவாங்க. சி
அடிப்பது, முரசு தட்டறது, சங்கு ஊதல்னு உண்டு."

வர்ஷிக்கு நம்ப சிரமமாய் இருந்தது. ஆனால், அவர்கள் பொ
சொல்லவில்லை என்பதும் புரிந்தது.

"இந்த விஞ்ஞான யுகத்தில் இப்படி ஒரு ஊர் இருப்பது ஆச்சரியமா
அதேநேரம் மனசுக்குக் கஷ்டமாய் இருக்குதும்மா."

"இதற்கே மனசு வாடினால் எப்படி...? மற்ற விஷயங்களை எல்லா
எப்படி சமாளிப்பேங்கறது தெரியலை. சரி, இது உனக்கான விடுமு
வாரம்னு எடுத்துக்கோம்மா. இங்குள்ள நூலகத்தில் பல புதி
புத்தகங்கள், பத்திரிகைகள் உண்டு."

"வெளியே நடந்து, சுற்றிப் பார்த்துட்டு வரலாமில்லையா?"

விக்ரமின் முகம் சட்டென சுருங்கியது.

"அது வேண்டாம்னு நினைக்கிறேன். இது உனக்குப் பரிச்சய
இல்லாத இடம். பனியும், காற்றும் தடுமாற வைக்கும். ஆக, வீட்டிலே
இருக்கறது நல்லது."

'மங்கலான வெளிச்சமுள்ள இந்த வீட்டுக்குள்ளேயே ஒ
வாரமா...?'- யோசிக்கையிலே வர்ஷிக்கு அலுத்தது. 'இந்தச் சின்
கிராமத்தில் அப்படி என்ன ஆபத்து... அல்லது தான் தொலைந்
போய்விட எப்படி சாத்தியம் இருக்கிறது?'

'சுற்றி இருக்கும் நிலத்தை நோட்டமிட்டுவிட்டால், அதை விரை
பேச முயலுவாளோ என்ற அச்சம்தான் காரணம்...

இவ்வளவு பின்தங்கிய இந்தப் பகுதியை முன்னேற விடாம
இவர்கள் ஏன் முட்டுக்கட்டை போடுகிறார்கள்?'

ஆழ மூச்செடுத்தவள், அவன் கண்களை ஊடுருவினாள். "மிஸ்ட



க்ரம், சின்ன வகுப்பில் முயல், ஆமை கதையை நமக்குச் சொல்ல...
ரமும் படிச்சோம். ஆனால், பக்குவப்பட்ட பிறகுதான் அது
முயலாமையால்' தோற்பது என்பது புரிகிறது. முயற்சி திருவினை
ஆக்கும்றதை ஏற்றுக்கொள்ளுது..."

"வடக்கே வளர்ந்து, வாழ்ந்தாலும் தமிழ் மறக்கலை போல? அதே
மாதிரி வந்த இடத்தில், சூழ்நிலையைப் புரிஞ்சு- இருக்கறதை அங்கே
ஏற்றுக் கொள்ளவில்லையா வர்ஷி?"

சொல்லிவிட்டு விக்ரம் போய்விட, இவளின் கொதிப்பு அடங்க
வெகு நேரமாயிற்று!

ஆனால், அவன் இருப்பிடத்தில் இருந்துகொண்டு வார்த்தைகளால்
அவனை விளாச முடியவில்லை.

'நமக்குள்
உடன்படிக்கை
ஏற்பட்டது...
எப்பொழுது
போரிடுவதென்று'- முன்பு அவளைப் புன்னகைக்க வைத்த
புதுக்கவிதை நினைவுக்கு வந்து ஆசுவாசப்படுத்த முயன்றது.

'நினைத்தபடி அவனுடன் போருக்கு நிற்க முடியாது.
அதற்கான நேரம் வரும்வரை பொறுத்திருக்க வேண்டும்.
அதுவரை சும்மா இருக்கவும் முடியாதே'

கடைசியில், குழந்தைகளைத் தேடிப் போனாள் அவள்.

வெறுமனே சாப்பிட்டுவிட்டு, குழந்தைகளுடன் விளையாடுவது
என்பது முடிகிற காரியமா? ஆக, அந்த நாளை சுவாரசியப்படுத்துவதற்காக
அங்கே குடுமிப்பிடி சண்டை ஒன்று நடந்துகொண்டிருந்தது.

தான் பெரியவள் என்ற தோரணையில் ரம்யா தன் தம்பியை அதட்ட,
அந்தக் குட்டிப் பயல் எம்பிக் குதித்து அக்காளின் சடையை பற்றி
இழுத்திருந்தான். தொடர்ந்த அடியும், அலறலும் குஸ்தி சண்டையாய்
உருவெடுக்க, வர்ஷி ஓடிப்போய் அவர்களை பிரித்துவிட்டாள்.

"அடடா... ரொம்ப இனிப்பான பிள்ளைங்கன்னு உங்களை
நினைச்சேனே! காரமாய் இருக்கறீங்களே... வேண்டாம் விட்டிரு
ராகுல்..."

ஒரு புது நபரைப் பார்த்ததாலும், அவள் தன் பேரைச் சொல்லி
அழைத்ததாலும் திகைத்த பொடியன், அக்காவை விட்டுவிட்டு அழ
ஆரம்பித்தான்.

கண்ணீர் வடியாத கள்ள அழுகைதான், அது!

# 7

சிறிது நேரத்துக்கெல்லாம் குழந்தைகளுக்கும், வர்ஷிக்கும் பரஸ்ப
பிடித்துப் போனது. பிள்ளைகள் ஒரே இடத்தில் அடைந்து கிடப்ப
அவர்கள் பசி இல்லாமல் இருப்பதற்கான காரணம் என்று யூகித்த
அவள்.

"முதல்ல உங்க அறையைச் சுத்தம் செய்யப் போறோம். அப்பு
விளையாட்டு" என்றாள்.

அவள் இட்ட பணிகளை இரு பிள்ளைகளும் ஓடியாடி செய்தார்க
அந்த வேலை அவர்களுக்கு அலுத்த நேரமாய் அவர்களை
விளையாட்டுக்கு மாற்றினாள். தாழ்வாரத்து தூண்களுக்குப் பின்னா
மறைந்தும், வளைந்து ஓடியும் ஆடியது அவர்களுக்கு அத்தனை சிக்கி
அலுக்கவில்லை.

குழந்தைகளுக்கான தட்டில், வர்ஷி மதியம் உருட்டி வைத்த பருப்
காய்கறிகள் சேர்ந்த சாதம் கலபமாய் காலியானதில் பெரியம்மாவுக்
ஆனந்தமான ஆச்சரியம்.

"பிள்ளைகளை வளர்ப்பதற்கும் ஒரு வயசு வேணும். அந்த வயதை
தாண்டிய எங்கிட்ட விட்டுட்டு இந்த வத்சலா வேடிக்கைப் பார்க்கறா...
பொருமினார்.

இந்த சந்தர்ப்பத்தை விட்டுவிடாமல் விசாரித்தாள் வர்ஷி.

"வத்சலாங்கறது...?"

"இவங்க ரெண்டு பேரோட அம்மா."

"அதாவது உங்க மருமகள்?"

"இல்லையில்லை. மகள்ம்மா. விக்ரமின் அக்கா."

விழிகளை அகல விரித்து, அந்த விவரத்தை உ
வாங்கிக்கொண்டாள்.

"அவங்க எங்கே இருக்காங்க?"

"டெல்லியில்தான். தலைநகரில் வளர்ந்த பிள்ளைங்க ரெண்டு
இந்தக் காட்டில பொழுது போகாமல் என்னைத் திண்டா
விட்டுடுதுங்க."

"விடுமுறைக்கு இது நல்ல மாற்றம்னு நினைச்சி இருக்கலாம்."

மேலும் விவரங்களைப் பெற பதமாய் தூண்டிலை வீசினா
இளையவள். அதில் கிடைத்த தகவல் வருத்தமாகவும் இருந்தது.

விக்ரமின் தாயார் பெயர் பரிமளம். குடும்ப சொத்துகள்



ன்னையில் இருப்பதோடு, பூர்வீக நிலமாகிய அமிர்த மலையையும்
ர் தகப்பனாரின் மறைவுக்குப் பிறகு பராமரிப்பது அவர்களது ஒரே
னான விக்ரம். அவனுக்கு ஏழு வயதுக்கு மூத்த வத்சலா, நவீன
டை- அலங்காரம் பற்றி படித்ததோடு, அதில் திறமையையும்
ட்டியதால் வட இந்தியாவுக்குப் போனாள். அங்கு பரிச்சயமான
ரவிந்தனுடன் காதலாகி, அவனையே மணந்தும்கொண்டாள்.
க்குறைய பத்து ஆண்டுகளுக்கு பிறகு அவர்களது தாம்பத்தியத்தில்
ரிசல். மேற்படிப்புக்காய் பாரீஸ் போகும் ஆசைக்கு கணவன் போட்ட
ட்டுக்கட்டை வத்சலாவை எரிச்சல் மூட்டியது.

'குழந்தைகளைப் பெற்று வளர்த்ததில் பல வருஷங்களை வீணாக்கிவிட்ட
ன் இனியேனும் தொழிலில் முனைப்பு காட்டினால்தானே உண்டு?'-
ற பொறுமலுடன் பிள்ளைகளை பாட்டி வீட்டில் விட்டுவிட்டு,
யல்நாட்டுக்குப் பறந்துவிட்டாள். அதுவரை சென்னையில் இருந்த
ரிமளாவை, ஏதோ பிரச்சினை என்று சொல்லி இந்த மலை நாட்டுக்கு
ட்டிக்கொண்டு வந்தோம். தற்போது அவர்கள் வாழ்க்கை சற்று
க்கலில்தான் உள்ளது."

"இங்குள்ள பிரச்சினைக்கு நீங்க என்ன தீர்வும்மா தர முடியும்? தவிர,
ங்களுக்கோ... குழந்தைகளுக்கோ ஏதோ ஒண்ணுன்னால் மருத்துவ
சதி ஏதும் இல்லாத இடத்தில் எப்படி சமாளிப்பீங்க?" - நிஜமான
ங்கலாய்ப்புடனேயே கேட்டாள் வர்ஷி.

"இதைத்தான் நானும் சொன்னேன்! ஆனா, இங்குள்ள பிரச்சினை
பருசு. பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் சொல்ல என்னைப் போல
ருத்தி தேவைங்கற நோக்கம் விக்ரமுக்கு இருக்கு..."- பேசியவரின்
ண்கள் வேறு எவரையோ பார்த்த பாவனையில் மலர்ந்தன.

"வா செல்லா, என்னை அங்கேயே பம்மி நிற்கறே?"

திரும்பிப் பார்த்த வர்ஷி சற்று திகைத்துதான் போனாள்.

அத்தனை அழகாய் இருந்தாள் அந்த செல்லா!

இறுகக் கட்டிய கூந்தலுடனும், வெளிறிய பருத்திச் சேலையுடனும்
ட்சியளித்தாள். காது, கழுத்தில் சுத்தமாக பொன் ஆபரணங்களே
ல்லை. பவளத்தோடு கறுப்புப் பாசி, கண்ணாடி வளையல் ஆகியவை
அவள் அழகை மெருகூட்டின.

"சொன்னேனில்லை... வர்ஷின்னு! இந்தப் பொண்ணுதான் அது.
து செல்லா. இங்கேயே பிறந்து வளர்ந்தவ. தேன் எடுக்கறதுல
திறமைசாலி."

"ஓஹோ...?"- வர்ஷி சினேகமாய் புன்னகைக்க, எதிரில் நின்ற
பெண்ணின் முகத்தில் இணக்கமில்லை!

"ரொம்ப ஆபத்தான வேலையில்ல அது?"

"அரசு பூச்சியியல் துறை, வீட்டில் வச்சு வளர்க்கத் தோதாய் அடு... தேனி முறையை இவளுக்குச் சொல்லித் தந்திருக்காங்க. அது ... மூலிகையையும் பயிரிட்டு விற்பா."

"அதென்ன அடுக்குத் தேனி?"

தன்னைப் பார்த்துக் கேள்வி கேட்கப்பட; அப்போதுதான் செல... வாய் திறந்தாள்.

"அது அடுக்கடுக்கான கல்லுகளுக்கு நடுவே கூடு கட்டுகிற தே... பூ நிறைஞ்ச இடத்துல கல்லை அடுக்கிட்டா, சுலபமாய் தேனெடு... நிரப்பிடும்."

"ஓஹோ... ஆனாலும் அதை நீங்க எப்படி எடுப்பீங்க?"

"அதற்கான இயந்திரமும் அரசே தந்திருக்கு. சேதமில்லாம தேனை... பிரிச்சு எடுத்துரலாம், ஒரு பெட்டியில..."

தொடரக்கூடாது என்று எண்ணியவள் போல வா... மூடிக்கொண்டாள் செல்லா. அதைப் பார்த்து பரிமளம்மா வாய்விட்... சிரித்தார்.

"கடகடன்னு விவரமெல்லாம் கொட்டுவியே செல்லா. ஏ... நிறுத்திட்டே? ஒரு பெட்டி மூலம் ஆறு மாதத்துக்கு நாலைஞ்சு லிட்... தேன் சேகரிக்கலாம்ன்றதை ஏன் சொல்லாமல் நிறுத்திட்டே? ம... தேன் ஒரு லிட்டர் ஐநூறு ரூபாய் வரைப் போகும். செல்லாவுக்கு எழு... படிக்கத் தெரியும் என்பதால் அரசு அதிகாரிகள் இவளை நம்பி ... விஷயங்களைக் கற்று தந்திருக்காங்க."

"ஆனா, படிப்பு உள்ளவங்க எல்லாரையும் எளிதில் ந... முடியறதில்லீங்களே அம்மா."

கசப்புடன் சொன்னாள் செல்லா.

'சற்று மலர்வாய் நின்றால் தேனில் வடித்த சிலை போலிருக்... இவளின் முகத்தின் கசப்பு மாறவே இல்லை. தவிர, தன்ன... சந்தேகத்துடன் இவள் பார்ப்பது ஏன்?

புதிதாய் வருபவர்களை எல்லாம் கடுப்பாய் கண்காணித்தா... இங்கு சுற்றுலாப் பயணிகள் வருவதும், நிம்மதியாய் தங்குவது... சிரமம்தான். அதோடு, விக்ரம்தான் நிலத்தை விற்பதாக இல்லை என்று... சொல்லிவிட்டானே.'

அதுவரை இவள் உரித்துத் தந்த மாதுளை முத்துகளில் விதவிதமா... வடிவங்களை தட்டில் அமைத்துக்கொண்டிருந்த பிள்ளைக... கொட்டாவி விட,

"ம்... உண்ட மயக்கம்! கொஞ்ச நேரம் படுக்கலாமா? வாங்க" என்...



...ழந்தைகளைக் கிளப்பிய வர்ஷியை, வெகு கலக்கத்துடன் கவனித்தாள் ...செல்லா.

பதற்றமாய் அவள் பரிமளாவின் காதில் ஏதோ சொல்ல, வர்ஷிக்கு ...ரிச்சலானது. 'புதியவர்கள் முன்பு இப்படி அநாகரீகமாய் ரகசியம் ...பசலாமா? பேசுவது தன்னைக் குறித்துதான்...'

"என்ன செல்லா? எனக்குந்தான் சொல்லேன்."

இந்த நேரடித் தாக்குதலை எதிர்பாராத மற்ற இருவரும் சற்று ...யர்ந்தாலும், செல்லா சுதாரித்துவிட்டாள்.

"அறியாதவககூட பிள்ளைகளை தனிச்சு விட வேண்டான்னேன்."

'உதவ நினைத்த தனக்கு இந்த அவமானம் தேவையா?'– எழுந்த ...பொறுமலை விழுங்கிய வர்ஷி புன்னகையுடன்,

"சரி... படுங்க செல்லம். நான் ஏதேனும் ஒரு புத்தகம் எடுத்து ...வாசிக்கிறேன்"– என்றபடி தன் அறைக்குக் கிளம்பினாள்.

அன்று மாலை, சிறுவருக்கான 'சி.டி.'யைப் போட்டுவிட்டு, தானும் ...ட்கார்ந்து பார்த்தவள் அவர்களது இரவு உணவையும் சுமூகமாய் ...முடித்த வைத்துவிட்டுக் கிளம்ப தயாரானாள்.

அன்று முழுக்க விக்ரமைப் பார்க்கவில்லை. நிம்மதியாய் இருந்தாலும், தான் எப்படியேனும் கிளம்புவது பற்றி பேச வேண்டியதும் அவனிடம்தானே?

இன்றும் எளிதில் தூக்கம் பிடிக்கவில்லை. அரிக்கேன் விளக்கின் ...மஞ்சள் ஒளி வேறு மருளச் செய்தது.

'திடுக்'கென எழுந்து உட்கார்ந்தாள்.

'கதவை யாரும் தட்டினார்களோ?

வெளியே யாரோ நிச்சயம் நிற்கிறார்கள்...

விக்ரமா...? அல்லது செல்லாவா?

தன்னைக் கண்காணிக்க வந்திருக்கிறாளோ?'

அச்சத்தை மீறிய ஆத்திரத்துடன் கதவைத் திறந்த வர்ஷியின் முகம் மறுநொடி கனிந்தது.

"அடடா... என்ன ரம்யா?"

அழத் தயாரா இருந்தாள் சிறுமி.

"ஆன்ட்டி வாங்க... அங்க ராகுல் தவளைய முழுங்கிட்டான்!"

இப்போது இவளுக்குள்ளும் கலங்கியது.

"என்ன... தவளையவா?"– என்றவள், சிறுமியைப் பின்தொடர்ந்தாள்.

"ஆமாம்... உங்க பாட்டி எங்கே?"

"அவங்கிட்ட சொல்ல பயமா இருக்கு."

சிறுமி சொல்வது போல பெரியவர் பாவம். ஒரு நாளின் அசதியுட படுத்த பிறகு இப்படியொரு அதிர்ச்சி- எழுப்புதல் அதிகப்படிதான்

பிள்ளைகளின் அறையில் நீல நிற விடிவிளக்கு ஒளிர்ந்தது. பய உட்கார்ந்திருந்த ராகுலின் தலையைக் கோதியவாறு விவரம் கேட் வர்ஷியின் முகம் மறுபடி புன்னகையில் கனிந்தது.

## 8

"ஓ... பொம்மைத் தவளையா?"

நிம்மதிப் பெருமூச்சு விட்டவளிடம், சிறு நெல்லி அளவில் இரு விதவிதமான பொம்மை மிருகங்களைக் காட்டினார்கள் குழந்தைக

"ராகுல் என்னிடம் கதை சொல்லக் கேட்டான். பாம்பு இப்ப வளைஞ்சு வளைஞ்சு வந்து தவளையை விழுங்கிடுச்சுன்னு சொன்னே அவன் குட்டித் தவளையை எடுத்து முழுங்கிட்டான்."

"தம்பி அதை வாயில் போட்டதைப் பார்த்தியா ரம்யா?"

"ம்... அப்ப இடிச் சத்தம் கேட்டுதுல்ல? கண்ண மூடிட்டேன். வாயில போட்டான்னு..."

தான் விழுங்கினானா, இல்லையா என்று விளக்க முடியாத சின் ராகுல் அழ ஆரம்பித்திருந்தான்.

அவனை சமாதானம் பண்ணி, படுக்கையை உதறிப் போட்டு தேடியதில் குட்டித் தவளைக் கிடைத்தது.

"ஹைய்யோ... இதுதான்."

ரம்யா குதித்தாள்.

"நல்லது போ. பெரியவங்களை எழுப்பலை, நீ. தவிர, இந்த அள தவளை, ராகுல் தொண்டைக்குள் போய் இருக்காதுன்னு யூகிச்சே சரி... இப்ப என்ன கதை வேணும்?"

பட்டாம்பூச்சிகளின் கதை ஒன்றைச் சொல்லிவிட்டு வர் அங்கிருந்து கிளம்பும்போது, ஏதோ ஒரு அசவுகர்யத்தை உணர்ந்தாள் யாரோ தன்னைக் கண்காணிப்பது போல உள் மனம் உறுத்தியது.

தூக்கி வந்திருந்த கைவிளக்கு, இருட்டை விரட்டுவதற்கு பதில் அந் இருட்டை பயங்கரமாக சித்தரித்துக் காட்டியது. நிழல்களின் ரகசி அசைவுகள் மிரட்டின. ஓடிப் போய் அறைக்குள் நுழைந்தவள், தாழிட் பிறகும் வெகு நேரம் மூச்சிரைத்தது.



இரவில் வெகு தாமதமாக உறங்கி இருந்தாலும், காலை விரைவாகவே ிப்பு தட்டியது.

மலை எங்கும் பனி மூடி இருந்தது. வீட்டின் கதவைத் திறந்ததும், கமாய் உள்ளே நுழைந்த குளிர்காற்று வெகு சுகமாக தெரிந்தது. த்தனை தூய்மையான காற்று வேறு எங்கே கிடைக்கும்?

உடம்பு சூடான பானம் கேட்க, பரிச்சயப்பட்ட சமையலறைக்குள் ந்து தனக்கு காப்பி தயாரித்துக்கொண்டாள். அனுபவித்து குடித்து, னை சற்று சிராக்கியவளுக்கு வெளியே போக வேண்டும் போல ருந்தது. ஆனால், விக்ரம் 'வெளியில் தனியாக எங்கும் செல்ல ண்டாம்' என்ற பின், 'எப்படிப் போவது?' என்ற தயக்கத்துடன் டின் உள்ளேயே நடந்தவள் மறுபடி வாசலைத் திறந்தாள். வெளியே வளிச்சம் கூடி தெரிந்தது. பனிக் காற்று தன்னை வருந்தி அழைப்பதாய் இறங்கி நடந்தாள்.

பச்சைச் சாறு பிழியப்பட்டது போலிருந்தது அப்பிரதேசம். ம்கூட ஒரு பசுங்குளுமை. புல்லில் நடந்த தன்னை ஒரு மிதக்கும் த்தாவரம் போல உணர்ந்தாள். மும்பை வீட்டின் பால்கனியில் நான்கு தொட்டிகள் வைத்து அதன் செடிகளைப் பராமரித்து ரசித்தவளின் ன்னே, பெரும் விருந்தாய் விரிந்திருந்தன பசும் தாவரங்கள்.

பட்டணத்து மரங்கள் அசையவே யோசிக்கும்; இங்கோ ஒரே த்துதான். உடலில் சால்வையை இறுகச் சுற்றிக்கொண்டாள். காற்றின் ளத்துக்கு ஏற்ப சலங்கை ஒலி போல கேட்ட சத்தத்தில் தேடலாய் ந்தாள். அருகே ஏதோ ஒரு ஓடை இருக்கிறது. அதன் சத்தமே த்தனை இனிமையெனில் அதைப் பார்க்காமல் விடுவதா?

விரைவில் அவள் கண்களுக்கு கிடைத்த காட்சி ஏமாற்றமாக ில்லை. நாலடி உயரப் பாறையில் இருந்து குதித்து உற்சாகமாய் லசலத்துக்கொண்டிருந்தது அந்த ஓடை. அதனுடன் சேர்ந்து ஓட வண்டும் போல் தோணவே, ஜில்லென்று இருந்த புல் தரையில் ஓட ஆரம்பித்தாள் வர்ஷி.

மனித சஞ்சாரமே இன்றி அழகு மட்டும் கொட்டிக் கிடக்கும் இந்த டம், கோடி ரூபாய் கொடுத்தாலும் கிடைக்காது. பூர்வீகச் சொத்தாக அடைந்த விக்ரம், அதை விற்காமல் இருப்பது நியாயம்தான் என்றுகூட அந்த நிமிடம் பட்டது. ஆனாலும், இங்கே பூரண அமைதி இல்லாமல், ஏதோ ஒரு பிராண்டல் உள்ளே அரிக்கிறதே... அது எதனால்?

ஓடை மறுபடி சில அடி பாய்ந்து குளமாய் தேங்கி இருந்தது வேறு ஒரு அழகைக் காட்டியது. ஓடி வந்த களைப்பு தீர குளத்தின் கரையோரமாய் அமர்ந்தாள். ஒரு வாய் நீர் எடுத்துப் பருக, அது தித்தித்தது.

எல்லாவற்றையும் மீறி, 'இங்கிருந்து கிளம்பு' என்ற எச்சரிக்கை
உள்ளே அடித்தது.

இந்த உள் உணர்வுக்கு என்ன காரணம் என்பது அப்போது வர்ஷி
விளங்கவில்லை.

''பேய் வீடு' என்றிருப்பது போல இந்த கிராமத்தை ஏதோ
அமானுஷ்யம் பிடித்திருக்கிறதோ? அதனால்தான் யாரோ தன்ன
கண்காணிப்பது, பின்தொடருவதும் போன்ற அவதியா?'

மூச்சை இழுத்துவிட்டு மனதை அமைதிப்படுத்த முயன்றா
மூலிகைக் காற்று அவளுள் புகுந்து மயக்கியது. 'சதா பட்டண
இரைச்சலில் வளர்ந்த தனக்கு இந்த அமைதியும், தனிமையும் புதிய
அதை ஏற்க முடியாத மருட்சியில் மனம் சஞ்சலிக்கிறது. வே
எதுவுமில்லை.'

அந்த சமாதானத்தில் மனம் தேறியது. புது அமைதியை, காற்
கூச்சல்– நீரின் ஓட்டத்தைத் தவிர வேறு சப்தம் இல்லாத இயற்கைக்
பழகியவளுக்கு இன்னும் இரண்டு கை நீரை அள்ளிப் பருக வேண்
போல இருந்தது.

எம்பிக் குனிந்தவளின் இதயம் ஒரு கணம் நின்றது. நீரில் தெரி
இவள் முகத்துக்குப் பின்னே வேறு ஒரு முகம்!

கோரமான அது... மனித முகம்தானா?

மரத்தின் சலசலப்பை மீறி எழுந்தது இவளது அலறல்!

எழுந்து ஓடவும் முடியாமல், அப்படியே குறுகி அமர்ந்துவிட்டா
நெருங்கும் அந்த உருவம் தன்னை இந்த குளத்தில் தள்ளிவிடுமோ
அல்லது கொன்று தின்றுவிடுமா? மீண்டும் மீண்டும் அலறியவ
இருவர் பேச்சு சத்தம் கேட்டு, மெள்ள கண் திறந்தாள்.

"ஓடிருங்க அம்மணி... எழுந்திருச்சு ஓடுங்க..." என்றபடி அ
உருவத்தோடு மல்லுக்கட்டிக் கொண்டிருந்தாள் செல்லா.

தட்டுத் தடுமாறி எழுந்தவள்– வந்த வழியே ஓட ஆரம்பிக்க– செல்ல
அந்த உருவத்துடன் அதட்டலாய் பேசியதும் காதில் கேட்டது.

"அந்தப் பொண்ணு அப்பாவி. அவ உங்க பேத்தியைக் கொல்லல
அவுங்க வேற ஆளுங்க. அப்பாவு... இப்படி உக்காருங்க நீங்க."

பாதுகாப்பான ஒரு தூரம் போனவள், நின்று கவனித்தாள். செல்ல
ஆசுவாசப்படுத்தி இருந்தது ஒரு மனிதனைத்தான். தலையும், முகமு
ரோமம் மூடி இருந்தபடி காட்சி அளித்தார், அந்த வயசாளி. இடுப்பி
ஒரு அழுக்கு வேட்டியும், மேலே இருண்ட கம்பளியுமாய் நின்ற அ
உருவம் ஆவேசம் அடங்கி, உட்கார்ந்து அழ ஆரம்பித்தது.

"இந்தப் பொண்ணு நம்ப ராஜசேகரண்ணன் வீட்டுல தங்கி இருக்கு



...ந்தக் கல்லை அது தலையில நீ போட்டு கொன்று இருந்தியானா,
...ண்ணனுக்கு பதில் சொல்றது யாரு... ம்? ஆத்திரப்படுறதுக்கு முன்
...ராசிக்கணும்."

"அவனுக யோசிச்சானுகளா? என் வாரிசை அள்ளிக் கொடுத்துட்டு
...ஏதோதிச்சுப் போய் நிற்கிறனே... அது பத்தி அத்தினி படிச்சவனுங்க
...ரேனும் யோசிச்சானுகளா?"

பேசிவிட்டு ஊளையிட்டு அழுத அந்த முதியவரைப் பார்க்க
...ஷிக்கு நெஞ்சு கரைந்தது.

'என்ன நடக்கிறது இங்கே?

பரிமளா அம்மாகூட சொல்லவில்லை. தன்னை இங்கு
...ருப்பவர்களுக்கு ஆறுதல் கூற மகன் அழைத்து வந்ததாக?'

கோரையாய் வெளுத்து மண்டி இருந்த பெரியவரின் முடியைக்
...தாதியபடி நின்ற செல்லா, இவளைப் பார்த்து போகும்படி சைகைக்
...ட்ட, மனமின்றி நகர்ந்தாள். ஆனால், சற்று தூரம் செல்வதற்குள்
...திரே வந்த வேகமான காலடி சத்தம் கேட்டு மரங்களுக்குப் பின்னே
...ம்மினாள். இவளது சிவப்பு சால்வை காட்டிக் கொடுத்துவிட,
...விக்ரமின் குரல் இவளை வெளியே இழுத்தது!

"வர்ஷி... நான்தான்."

தப்பு செய்த குழந்தை போல மறைவில் இருந்து வெளிப்பட்டாள்.

அதற்குள் இவளைத் தொடர்ந்து வந்திருந்த செல்லா,

"வெளியே போக வேண்டாம்னு அம்மணிகிட்ட நீங்க
...சொல்லலீங்களா?" என்று கேட்க,

"சொன்னா கேட்டாத்தானே?" என்றான் விக்ரம்.

இப்படியான அபாயம் இருக்குமென்று கண்டாளா இவள்?
...சொல்வதைத் தெளிவாய் சொல்லி இருந்தால், வெறுமனே வீட்டுக்குள்
...டலாவி இருந்திருக்கலாம்.

இவளை ஒதுக்கிவிட்டு இருவரும் பேசலானார்கள்.

"அதென்ன கூச்சல்?"

"அம்மணிதான், அப்பாவு இவங்களைத் தாக்க முயற்சிக்க,
அரண்டுட்டாங்க."

"நீ தனியாய் சமாளிச்சுட்டியா, செல்லா?"

"ஆண்டவன் புண்ணியத்துல அப்பாவு அடங்கிருச்சு. அவரு பட்ட
வேதனை சாமானியமா? இவங்க உங்க வீட்டு விருந்தாளிங்கவும் ஓரளவு
கேட்டுக்கிச்சு."

"அவர் மட்டுமா! அவர் போல வேதனையில் இன்னும் எத்தனை

பேர்... ஆறாத வருத்தமில்லையா அது?"

தான் ஒருத்தி அருகில் இருப்பதை மறந்தது போல அவர்கள் இருவரும் பேசியபடி போனதில் இவளுக்குள் எரிந்தது! காலை சற்று எட்டி வைத்து அவர்களைப் பிடிக்க முயல, வலது பாதத்தில் ஏதோ 'சுருக்'கென்று ஏறியது.

"ஐயோ"– மறுபடி தொண்டை கிழிய கத்தினாள் வர்ஷி. தன்னைக் கடித்தது எது என்பதாய் இவள் பார்வை குனிந்து துழாவியது. பக்கத்து புதரில் வளைந்து, மறைந்தது பாம்பு ஒன்று.

இவளுக்கு அச்சத்தில் கண்கள் இருண்டன.

துவண்ட இவளை இருவருமே ஓடி வந்து தாங்கிக்கொண்டார்கள்.

"என்னாச்சு?"

எங்கே யாரோ கேட்பது போல இருந்தாலும் அவசரமாய் விவரம் தந்தாள்.

'அப்போதுதானே அவர்களால் தன்னைக் காப்பாற்ற முடியும்?'

"பாம்பு... பாம்பு கடிச்சிடுச்சு..."

இவள் காட்டிய இடத்தைப் பார்த்த இருவருமே சிரித்தார்கள்.

"இது முள்ளுதான். பாதத்தில் முள் ஏறி இருக்கு."

பாதத்தில் இருந்து ஏதோ உருவப்பட, "உஸ்..." என்று இவள் முகம் சுளித்தாள்.

"இவ்வளவு தைரியசாலி... தனியே கிளம்பலாமே?"

விக்ரமின் கிண்டலில் இவளுக்கு அழுகை முட்டியது.

'மரணத்தில் இருந்து தப்பிய தன்னைப் பார்க்க இவர்களுக்கு வேடிக்கையாய் இருக்கிறதோ?'

கண்ணாய் பார்த்துக் கொள்ளும் தகப்பனின் நினைப்பு வர– அவளையும் மீறி 'கரகர'வென கண்ணீர் வழிந்தது கன்னங்களில்...


## ராணி முத்து சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

### வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1,225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை–600 007.

## 9

அன்று காலை நேர்ந்த அச்ச அனுபவத்தை மீறியபடி தான் பட்ட அவமானமே வர்ஷியைப் பிடுங்கித் தின்றது.

'தான் அழுது எத்தனையோ மாதம்... ம்ஹூம் வருடங்கள் ஆகியிருக்க, இவன் முன் அழுது நிற்க வேண்டி வந்துவிட்டதே' என்ற மறுகல்! பரிமளம்மா இவளை ஓடியாடி கவனித்துக்கொண்டாலும், அவளோ தன் அறைக்குள் முடங்கிக்கொண்டாள். ஆனாலும், பெரியவர் விடவில்லை.

"பேருக்கு ஒரு தோசை சாப்பிடம்மா. இந்தா இந்த பாலையாவது குடிச்சிடு."

மறுக்க முடியாமல் இவள் அதைப் பருக முயல, பெரியவரின் பேச்சு தொடர்ந்தது.

"உன்னை வெளியே போக வேண்டாம்னு விக்ரம் சொன்னது இதற்குத்தான்."

'இங்குள்ள மக்கள் பலரும் அரைக் கிறுக்கர்கள் என்பதை பக்குவமாக எடுத்துச் சொல்லி இருந்தால் போதுமே?'– மனதுள் கறுவினாள்.

"சென்னையிலுள்ள வேலைகளை எல்லாம் அப்படியே போட்டுவிட்டு, என்னையும் இங்கே கூட்டிட்டு வந்ததுக்கு காரணம் எல்லாம் அவனது இளகின மனசுதான். பிறர் கஷ்டம் பார்க்கப் பொறுக்க மாட்டான். தங்கமான குணக்காரன்."

கேட்டவளுக்குப் பொறுக்கவில்லை.

'ஆனாலும் தாய்க்குத் தன்னுடையது பொன் குஞ்சுதானே?'

வாயை இறுக்கிக்கொண்டு இருந்தவளின் முகபாவத்தைக் கொண்டே இளையவளின் மனஓட்டம் புரிந்துகொண்ட மூத்தவர் முறுவலித்தார்.

"விக்ரம் உன்னிடம் கொஞ்சம் சிடுசிடுப்பாய் நடந்துகொண்டதாய் நினைக்கிறே... அப்படித்தானே? இங்குள்ள நிலைமை, நீ வந்த நேரம் அப்படிம்மா. ஆனா, என் மகன் குணம் தங்கம்தான். எப்படீன்னு சொல்றேன் கேளேன்" என்று சிறுமிக்குக் கதை சொல்வது போல பேசலானார் அந்தத் தாய்...

"இரும்பை சூடுபடுத்தினால் அது குளிர ரொம்ப நேரமாகும். வெள்ளி சற்று குறைந்த நேரத்தில் குளிரும். ஆனால், தங்கம் அதிகமாய் சூட்டெடுத்தாலும் 'சட்'டுன்னு குளிர்ந்திடும். கோபம் உடனே அடங்கி சாந்தமாகறதுதான் 'தங்கக் குணம்.'"



பெரியவரின் சாதுர்யமான விளக்கத்தில் இவளது கடுப்பு கரைந்தது. விக்ரமின் குணத்தை மெச்ச முடியாது என்றாலும், காலை நேரம் வீட்டில் தன்னைக் காணவில்லை என்றதும் தேடி வந்தவனும் அவன்தானே?

"செல்லா எப்படி அந்த நேரம் அங்கே வந்தான்னு தெரியலைம்மா."

பெரியவரின் முகத்தில் நிறைய தயக்கம்.

"அசதியாய் இருப்பே. கொஞ்ச நேரம் தூங்கி எழுந்திரிம்மா." அசதிதான் போலும். இவள் உறங்கி எழுந்தபோது, ஏறக்குறைய மதியம். குளித்து தயாராகி, பிள்ளைகளுக்கு உணவு தர இவள் கிளம்ப, அங்கே ஏக ஆர்ப்பாட்டம்.

"வாம்மா... நேத்து உன்கிட்ட சமர்த்தா சாப்பிட்டதுங்க, இப்ப மறுபடி அழிம்பை ஆரம்பிச்சாச்சு."

புகார் செய்தார் பரிமளம்மா.

"நேத்து ஓடியாடி சாப்பிட வைச்சேன்ம்மா. அதான்..." என்றவள், குழந்தைகளிடம்,

"முழுசாய் சாப்பிட்டால், நாமெல்லாம் சேர்ந்து 'கேக்' செய்யலாம்" என உற்சாகம் அளித்தாள்.

இனிப்பு கலந்த இந்த பேச்சினூடே சாப்பாட்டுத் தட்டுகள் காலியாகின.

"'கேக்' செய்ய 'மைக்ரோவேவ் ஓவன்' அடுப்பு தேவையே வர்ஷி. இங்கே அதெல்லாம் கிடையாது."

"குக்கரில் மணல் போட்டுக்கூட செய்யலாம்மா. இங்கே மாடுகள் இருப்பதால் பால், வெண்ணெய்க்கு குறைவில்லை. வெண்ணெய், சர்க்கரை, மாவுகளை பிள்ளைகளை விட்டு கடையச் செய்தால், பிறகு தாங்கள் செய்ததை ஆசையாய் சாப்பிடுவாங்க. பொழுது சுவையாய் போகும்... அவ்வளவுதான்."

நன்றியோடு இவளுக்கானவற்றை எடுத்துத் தந்தார் பெரியவர். இவள் அலங்கார விளக்குக் கேட்கவும் மூத்தவர் விழித்தார்.

"அதெல்லாம் இங்கே ஏதும்மா? 'எஸ்டேட்' வேலைகளுக்காய் நாங்க அவ்வப்போது வந்து தங்கும் வீடு, இது. பண்டிகை ஏதும் இங்கு கொண்டாடியதில்லை, எல்லாம் சென்னையிலதான்."

"இல்ல... இனிப்பு செய்யறதோடு, வீட்டையும் அலங்காரம் பண்ணினால் பிள்ளைகளுக்குக் குஷியா இருக்கும். குளிர் காலத்தில் பண்டிகை கொண்டாடுவது நம் மனசை உற்சாகப்படுத்தும்."

ஒப்புக்கொண்டார் பெரியவர்.

"அப்ப இதுகளுக்கு இன்னைக்கு நல்ல துணிமணி போட்டு

விடறேன். சமையல்கார வேணியை கொஞ்சம் சீடை போட்டுத் தரச் சொல்றேன்."

எங்கிருந்தோ ஒரு பாக்கெட் பலூன் வர, அவை முன்னறையில் விம்மி வண்ணமயமாய் ஆடின. கோலப்பொடி தாழ்வாரமெங்கும் இறைபட்டது. ரொம்ப அம்சமான கோலங்கள் உருப்பெறவில்லை என்றாலும், தாங்கள் இட்டவை எல்லாமே அம்சமாய் தோன்றியது அங்குள்ள பெண்களுக்கு!

காற்றில் ஒரு பலூன் மிதந்து வர... அதைத் துரத்தியும், தட்டியும் ஆடியதில் வீடு சிரிப்பால் நிரம்பியது. எதிலும் பங்கு கொள்ளாமல் தூண் ஓரமாய் நின்று கவனித்திருந்த செல்லா முகத்தில் சிறு புன்முறுவல், மொட்டு விட்டிருந்தது. யாரும் கெஞ்சாமலேயே பிள்ளைகள் பலகாரங்களை அள்ளி எடுத்து உண்டார்கள்.

வழக்கமாய் மாலையின் இருளோடு அவர்களுக்குள் கூடும் சோர்வு, அன்று கண்ணிலேயே படவில்லை.

ஒரு மூங்கில் கூடையுடன் வந்த செல்லா, வர்ஷியிடம் அதை நீட்ட....

"என்னது...?" என்றபடி வாங்கிக்கொண்டவளின் முகத்தில் மகிழ்வும், வியப்பும்.

"ஹைய்யோ... இந்த மண் விளக்குகளைத்தான் அம்மாகிட்ட கேட்டேன்... இல்லைன்னு சொன்னாங்க..."

"நாங்க விசேஷ நாளன்னைக்கு இதைத்தானே ஏத்துறது வழக்கம். பெரியவங்ககிட்ட நீங்க கேட்டது என் காதில விழுந்தது. அதான் எடுத்துட்டு வந்தேன்."

"ரொம்ப நன்றி."

"அதெல்லாம் எதுக்கு? பிள்ளைக சந்தோஷமா இருக்கிறதுதானே நமக்கு வேணும்? வந்த நாளு முதலா அதுக இப்படி சிரிச்சு, ஓடிக் களிச்சு நாங்க பாக்கலியே."

"பஞ்சு எடுத்துத் தரேன் செல்லா. எண்ணெய், சமையலறையில் இருக்கும். ஊற்றித் திரி போடுறியா? அதுக்குள்ள நான் பிள்ளைங்க முகம் துடைச்சு, வேற துணி உடுத்தி விடறேன். பிறகு, அதுக வந்து விளக்கு ஏத்தட்டும்?"

இளம் பெண்கள் இருவரும் தங்களுக்கிடையே பிரித்துக்கொண்ட வேலையில் மும்முரமானார்கள். புது விதமாய் தலை வாரி, நல்ல ஆடைகளை உடுத்திக்கொண்ட குழந்தைகளின் உற்சாகம் மேலும் கொப்பளித்தது.

"நீங்களும் 'ஜிகு ஜிகு'ன்னு சேலை கட்டிக்கோங்க ஆன்ட்டி"–



உரிமையாய் உத்தரவிட்டாள் ரம்யா.

"நான் சேலையெல்லாம் கொண்டு வரலியே."

"அம்மா சேலைகூட இங்கிருப்பதாய் சொன்னீங்களே? அதை 'ஆன்ட்டி' கட்டிக்கட்டும்."

"இல்லை செல்லம். வேற ஒரு 'பளிச்' நிற உடை வேணும்னால் மாற்றிக்கிறேன்."

"ரம்யா சொன்னது போல, என் மகள் வத்சலாவின் சேலைகள் சிலது இங்கே இருக்கும்மா வர்ஷி. அவள் உன்னோட அளவில்தான் இருப்பா, ஆக ரவிக்கைக்கூட உனக்கு கச்சிதமா பொருந்தும்னு நினைக்கிறேன்."

வர்ஷி மறுப்பாய் தலையாட்டும்போதே சிறுமி ரம்யா கெஞ்சினாள். "ப்ளீ...ஸ் ஆன்ட்டி."

"நாளை அல்லது நாளன்னைக்கு அதைக் கட்டிக்கலாம். ஏன்னா... சேலைக்கு ரவிக்கையைச் சரி பார்த்து, உள்ளாடைகளையும் தயார் பண்ணணுமே! முதல்ல இப்ப மண் விளக்கை ஏற்றி வரிசையாய் வைத்து, நம்ப வீட்டை 'ஜிகு ஜிகு'ன்னு ஆக்குவோம்."

மெழுகுவர்த்தியில் ஏற்றிய சுடரை, ஒவ்வொரு அகல் விளக்குக்கும் மாற்றியபோது, பிள்ளைகளின் முகங்களில் அத்தனை வெளிச்சம்.

ரம்யாவின் திருப்திக்காய் ஆழ்ந்த சிவப்பு நிற குர்தா ஒன்றுக்கு மாறி இருந்தாள். அதன் மங்கலான தங்க வண்ண வேலைப்பாடு, அந்த கோலாகலச் சூழலுக்கு பொருந்தியது.

பிரம்பு நாற்காலியில் அமர்ந்தபடியே, குழந்தைகளின் கைவேலையில் வீடு அம்சமாகி இருந்ததைக் கண்குளிரப் பார்த்துக்கொண்டு இருந்தவர்களிடையே பேச்சு சகஜமாய் உருண்டது.

"நல்லவேளை, நேத்து போல இன்னைக்கு பேய்க் காற்று வீசவில்லை. இல்லைன்னா இப்படி முத்து முத்தாய் சுடர் நின்று எரியாது."

"ம்... இருந்தாலும் எப்போ இங்கன காத்தும், மழயும் ஓங்கும்னு சொல்லிக்க முடியாதுங்க."

"ரெண்டு நாள் தங்கினதே எனக்கு ஒரு மாசம் போல மலைப்பாய் இருக்குது செல்லா. எப்படி உங்களுக்கு பொழுது போகுது?"

"உடம்பு வத்த வேலை பார்த்தால்தான் எங்க வயிறு நிரம்பும். அதுக்கே பொழுது போதாதே?

இதைக்கேட்டதும் வர்ஷி தன் குரலைத் தணித்தாள்– "அது போக, இங்கே வேறேதோ விபரீதம் இருக்கிறதாயும் எனக்குப் படுது, செல்லா. இந்த இருட்டா... இல்லை புதுச் சூழலா தெரியலை. இங்கே ஏதோ ஒரு அசவுகரியம்– புரியாத பயம்... யாரோ என்னைக் கண்காணிப்பது

போல..."

செல்லாவின் முகம் இளகியது.

"புரிஞ்சுக்கிட்டீங்களா... இல்ல என்னைய ஆழம் பார்க்கிறீங்களா?"

"புரியலையே..."

"நேத்து ராவுல நீங்க பிள்ளைக அறைக்குப் போய் திரும்பும்போதுதான?"

வர்ஷி ஒரு ஆச்சரிய மவுனத்துடன் இருந்தாள்.

"உங்கள பின்தொடர்ந்தது நான்தான்."

"என் பின்னாடியே வந்தது நீயா? உன் வீட்டுக்குப் போகலியா செல்வா?"

"எங்களுக்காக ராஜசேகர அண்ணன் தன் குடும்பத்தோடு வந்து இந்தக் காட்டுல கிடக்கிறப்போ, அவுகளைப் பாதுகாக்கறது எங்க கடமை இல்லையா அம்மணி?"

"இங்கே காவலுக்காய் தங்கினே சரி. எனக்கு என்ன ஆபத்து நேரும்னு என் பின்னால் வந்தே?"

அதுவரை பிரகாசமாய் இவளில் படுத்திருந்த செல்லாவின் வண்டு விழிகள், சற்று சரிந்து தரையை அளவிட்டன.

"ஆபத்து உங்களுக்கு இல்லை. உங்களால ஆபத்து வந்திருமோங்கிற சந்தேகம்தான். பிள்ளைங்க அறைக்கு நடுராவுல நீங்க போனீங்களே அதான்.."

"நல்லதுக்கு காலமில்லை"–சற்று சினத்துடனும், மீதி சிண்டாலாகவும் சலித்தாள் வர்ஷி.

"ரம்யாதானே என்னைத் தேடி வந்து அவளுடைய அறைக்கு என்னைக் கூட்டிப்போனது?"

"முழுக்க பார்க்கலீங்க. அரவம் கேக்கவும், குழந்தைகளோடு நீங்க இருக்கிறதைப் பார்க்கவும் அதிர்ச்சி ஆயிடுச்சு... தப்பு ஏதும் நடக்கலை என்றாலும், உங்க பின்னாலேயே வந்தேன். காலையில நீங்க வெளியே போனதை சின்னவர்கிட்ட சொன்னதும் நான்தான்."

"சொல்லிட்டு என்னை பின்தொடர்ந்தே வந்தாச்சு, அப்படித்தானே? நன்றி செல்லா. அப்போதைய பதற்றத்துல நான் உனக்கு நன்றி சொல்லாம விட்டுட்டேன்..."

அந்தக் கேள்வியை கேட்பதற்கு இதுதான் சரியான நேரம் என்று முடிவு செய்தாள் வர்ஷி. 'எல்லோரும் மூடுமர்மமாய் குறிப்பிடும் விஷயம் என்ன...? வருண் ராஜசேகரன் இவர்களுக்கு உறவா... அவன்



இப்போது இருப்பது எங்கே?'

இதையெல்லாம் கேட்டுவிட வாய் திறந்தவள், வந்து நின்றவனின் முக பாவனையைப் பார்த்து அத்தனையும் மறந்து எழுந்து நின்றாள்.

'விக்ரமின் முகத்தில் ஏன் இந்த வெறுப்பும்... ஆத்திரமும்?'

## 10

'விட்டுக் கொடுத்தால்தான் வெற்றி வரும்' என்பது அவளுக்கும் தெரியும்.

குரங்காட்டி குரங்குகளைப் பிடிப்பதே அவற்றின் விடாக்கொண்டான் குணத்தை வைத்துதானே? கூண்டுக்குள் கைவிட்டு அள்ளிய பழத்தை விட்டுவிட மனதின்றிதானே மந்திகள் மாட்டிக்கொள்கின்றன?

ஆனாலும் என்னவோ விக்ரமிடம் விட்டுத் தர மனமில்லை. சிலவற்றைக் கண்டும் காணாமல் விட்டு, அடுத்த படிக்குப் போவதுதான் புத்திசாலித்தனம். அதையே பிடித்துத் தொங்கினால் சிக்கல்தான்!

பரிமளம்மா, விக்ரம் இருவரும் தன் அப்பாவிடம் பேசி மகள் இங்கே பாதுகாப்பாய் இருப்பதாயும், ஒரு வாரத்தில் மும்பை வருவதாயும் தகவல் அனுப்பியதாய் சற்று முன்பு சொன்னபோது கூட நன்றியால் நிரம்பிய தனது மனம் இப்போது கொதிப்பது ஏன்?

அது அவன் தப்புத்தான்!

அகங்காரமும், ஆத்திரமுமாய் அவன் பேசிய பேச்சுதான் இதற்குக் காரணம். இந்த வீட்டுக்கு ஒத்தாசையாய் இருந்த தனக்கு நன்றி தெரிவிக்காவிட்டாலும் ஏன் அப்படி சீறினான்?

"என்ன ஆர்ப்பாட்டம் இங்கே? பண்டிகை மாதிரி கோலம்–அலங்காரம்னு இருக்க இதுவா நேரம்? ஊரே துக்கத்தில் இருக்க–விளக்கேற்றி, பேச்சும் சிரிப்புமாக இருக்கறது... ச்சே... செல்லா உனக்குக் கூடவா புரியலை?"

சுடர் தாங்கிய அகல்களை விதவிதமாய் அமைத்து அழகு பார்த்திருந்த பிள்ளைகள் தங்கள் மாமாவின் கோபத்தில் விதிர்த்து போக, வர்ஷிக்கும் ஏதும் விளங்கவில்லை.

"பக்கத்து வீட்டில் யார் இருக்காங்க? அவங்க சூழல் என்ன?ன்னு அறியாமல் சுயநலத்தில் மூழ்கி இருப்பது பட்டணத்துப் பழக்கம். அது இப்ப இங்கே இறக்குமதி ஆயாச்சு..."

அவன் குறி வைப்பது தன்னைத்தான் என்பது புரிய, வாய் திறந்தாள்

வர்ஷி.

"பிள்ளைகளுக்குப் பொழுது நகரலை. அவங்களுக்கு ஒரு மாற்றமாய் இருக்கட்டுமேன்னு..."

"இங்கே வந்தது நமக்கு மாற்றம் வேண்டி இல்லை. இங்கு நேர்ந்த மாற்றங்களுக்கு நாம மருந்தாக முடியுமான்னுதான்"- அழுந்தச் சொன்னான்.

"எனக்குப் புரியலை. எல்லாம் மூடுமந்திரமாய் இருக்குது."

இவளும் கோபத்துடன் ஆரம்பிக்க, செல்லா அவசரமாய் இடை புகுந்தாள்.

"நீங்க பட்டணத்துப் பிள்ளைகளை இங்க இழுத்துட்டு வந்துட்டீக. அதுக பொழுது போகம வாடிக் கிடக்கவுந்தான்..."

"அதுக்குள்ள நீயும் கட்சி மாறியாச்சு போல?"- அவனது நக்கலில் செல்லா நத்தையாய் சுருங்கினாள்.

'என்ன நிலை என்று சொல்லுங்களேன்'- என்று வர்ஷிக்கு கத்த வேண்டும் போல இருந்தது. ஆனாலும் அமர்த்தலாய்-

"இங்கே அசம்பாவிதமாய் என்ன நடந்துவிட்டது?" - கேட்டாள்.

"எல்லாத்தையும் வர்றவங்களிடம் எல்லாம் விளக்கிட்டிருக்க முடியாது. சூழ்நிலை புரிஞ்சு நடந்துக்கணும்."

மறுபடி வழவழப்பான பதில்தான் வந்தது.

விவரம் சொல்லாமல் வார்த்தைகளால் வறுத்து எடுப்பவனிடம் என்னத்தைப் பேச?

ஆனால், விக்ரம் விடவில்லை.

"இழவு வீட்டின் அண்டை வீட்டுக்காரங்க சங்கீதம் கேட்பதில்லை, சமைப்பதும்கூட இல்லை. அது நாகரீகம்."

"நான் வேண்டாத விருந்தாளிதான். ஆனால், என்னிடம் இப்படிப் பேசுவது நாகரீகம்னு நினைக்கிறீங்களா விக்ரம்?"

சூடாய் கேட்டுவிட்டு தன் அறைக்குப் போனவள், பதற்றம் தாளாமல் படுத்துவிட்டாள்.

அசட்டுத்தனமாய் தான் வந்து சிக்கிக்கொண்டது வெறுமனே சிநேகமற்ற கிராமப்புறம் அல்ல, மர்மங்கள் புதைந்த பூமி. இயல்பாய் நடப்பவரையும், ஏதேதோ பயங்கரங்கள் இடறி தடுமாற வைக்கும்.

நல்ல வேளை... குழந்தைகள் ஆசைப்பட்டது போல தான் ஜிலு ஜிலுப்பாய் ஒரு சேலையில் நிற்கவில்லை. மேலும் கேவலமாகி இருக்கும். இரண்டு குவளை நீர் பருகி, உலர்ந்த நெஞ்சை நனைத்துக்கொண்டாள். இரவு சாப்பிடப் போக வேண்டாமென முடிவெடுத்தாள். யார் முகத்திலும் விழிக்க மனமில்லையே அவளுக்கு!



பரிமளம்மா சம்பவ இடத்தில் இருந்திருந்தால், அவன் அத்தனைக் காரமாய் பேசி இருக்க மாட்டான்.

'வத்சலா சேலைகள் எல்லாம் அருமையாக இருக்கும். எடுத்துக் காட்டவாம்மா?' என்று கேட்டவரிடம் போய் 'பசி இல்லம்மா' என்றுவிட்டு சில உதவிகளையேனும் செய்து வருவதுதான் முறை.

ஆனால், மங்கலான மஞ்சள் விளக்கை அணைத்துவிட்டு, இருட்டுக்குள் தஞ்சமாகத்தான் தோன்றுகிறது. ஆனாலும், மறுநாள் விழித்து மறுபடி இவர்களது முன்புதானே உலவ வேண்டும்?

விக்ரமை நினைத்தாலே மனதில் தீயாக சுட்டது.

'துக்கம்', 'வேதனை' என்று ஏதோ சுற்றி வளைப்பதை விட்டுவிட்டு, தன் கலவரத்துக்கான காரணத்தைச் சொன்னால் போதாதா? ஆனாலும், பெரியவரை- குழந்தைகளை நினைத்து எழுந்தாள். உடைக்குப் பொருத்தமாய் இட்டிருந்த பெரிய பொட்டைக் கழுவிவிட்டாள். கருஞ்சிவப்பு குர்தி உடையில் இருந்து பழைய வெள்ளை உடைக்கே மாறினாள்.

பலகாரங்களைத் தாராளமாய் தின்ற குழந்தைகளுக்குப் பசிக்காது. பாலாவது குடிக்க வைத்து, கதை சொல்லி படுக்க வைக்க வேண்டும் என்ற யோசனையுடன் தன் அறைக் கதவைத் திறந்தவள் திடுக்கிட்டுப் போனாள்.

அலற நினைத்துத் திறந்த வாயின் வழியே வந்தது வெறும் காற்று மட்டும்தான்!

"மன்னிக்கணும். கதவைத் தட்டப் போனேன். அதை உணர்ந்தது போல நீயே திறந்துட்டே..."- என்று வெகு இயல்பாய் பேசியபடி நின்றது விக்ரம்தான்.

அப்படியே கதவை அறைந்து மூடிவிடப் பரபரத்த கைகளை அடக்கி இறுகினாள்.

மரியாதை நிமித்தம் ஒருவரைப் பார்த்ததும் முகத்தில் படர விடும் முறுவலைத் தடுத்து, இடது பக்கச் சுவரைப் பார்த்தபடி நின்றாள்.

"அம்மா சாப்பிட வரச் சொன்னாங்க."

அவனுக்கு பதில் அளிக்காமல் நடந்தாள், உணவு அறையை நோக்கி.

பரிமளம்மா முகம் மலர,

"வாம்மா வர்ஷி. நீ வார்ப்பதுபோல தோசை உருவாக்க முயன்றேன்... ஆனால், வந்ததைப் பாரு..."- உற்சாகமாய் பேசினார்.

"வெள்ளைப் பல்லி போல இருக்குல்ல ஆன்ட்டி?"- ரம்யா

கிளுகிளுத்தபடி கேட்க, ராகுல் முகம் கோணியது.

"உவ்வே..."

'தவளையை முழுங்கினியே... பல்லி வேணாமா?'

இயல்பாய் பேச முயன்ற வர்ஷி, சமையலறைக்குப் போனாள். நட்சத்திரம், மீன், தொப்பி, மோதிரம் என்று ரகரகமாய் அவள் சுட்டு வைத்த தோசைகள் மளமளவென்று காலியாகின.

இதய வடிவில் இவள் எடுத்து வந்ததை 'டக்'கென்று எடுத்துக்கொண்டது விக்ரம்!

"இந்த இதயம் எனக்கு" - என்றவன் சொன்னதில் இவளுக்கு மேலும் எரிந்தது.

"ஆமா மாமா... எங்களுக்கு வயிறு வீங்கிடுச்சு. ராகுலுக்கு மூச்சே விட முடியலை" என்று ரம்யா எழ, ராகுலுக்குக் கைக் கழுவிவிட நகர்ந்தாள் இவள்.

"நீ சாப்பிடலையே வர்ஷி"- விக்ரம் சொல்ல, அவன் தாயாரும் பரபரத்தார்.

"பார்த்தியா... ஏதோ தோசை வார்க்கவே நீ வந்ததுபோல நானும் உட்கார்ந்து இருக்கேனே... சரி, உனக்கும் ரெண்டு தோசை ஊத்து."

"இல்லம்மா... பலகாரம் சாப்பிட்டது பசியே இல்லை."

"அப்ப பாலேனும் குடி வர்ஷி. இல்லைன்னா சரியான தூக்கம் இல்லாமல் நீ ராத்திரி நடமாட, செல்லாவும் உன் பின்னேயே வந்திட்டிருப்பா."

விக்ரம் சொல்ல, இவள் விரைப்பாக பதில் அளித்தாள்.

"செல்வாக்கு என் மேல் இருந்த சந்தேகம் தீர்ந்திடுச்சு. அம்மா, நான் பிள்ளைகளுக்கு உடம்பு கழுவி படுக்க வச்சுடறேன்."

"கதை... பத்து கதை" என்று குதித்த ராகுலை, அள்ளியபடி நடந்தவளை இடித்தபடி ரம்யாவும் வெளியேற, அக்காட்சியை விக்ரமின் கண்கள் கூர்ந்து கவனித்தன.

"கடவுளாத்தான் வர்ஷியை இங்கே அனுப்பினது"- பெரியம்மா சொன்னது வர்ஷியின் காதை எட்டியது.

ஆனால், இந்த இக்கட்டில் சிக்கிக்கொண்டதற்கு யாரையும் கை காட்ட முடியாது என்ற மருகலுடன் தன் வேலையில் மூழ்கினாள்.

மேலும் மேலும் தன்னிரக்கத்திலேயே மனம் சுழலுவதைத் தவிர்ப்பதற்காய் ஒரு பத்திரிகையை எடுத்துப் புரட்டினாள்.

'கஸான்கா' என்ற விநோதத் தலைப்பின் கீழிருந்த பகுதியைக் கண்கள் மேய்ந்தன. அது ஒரு வேடிக்கைக் கதை...



பின்தங்கிய ஒரு நாட்டுக்கு வருகை தரும் அமெரிக்க பிரமுகர் பேசுகிறார்...

"என் நாட்டில் இருந்து உங்களுக்கு வாழ்த்துதலைக் கொண்டு வருகிறேன்."

ஆங்கிலம் அறியாத பழங்குடி மக்கள் கோஷம் இடுகிறார்கள். "கஸான்கா" என்று.

"உங்களுக்குப் பொருளாதார வளர்ச்சியும் கொண்டு வருகிறேன்."

"கஸான்கா"- ஆரவாரப் பதில் தொடருகிறது.

"எங்கள் நட்பையும், அதன் மூலம் பெரும் லாபத்தையும் நீங்கள் அடையப் போகிறீர்கள்."

"கஸான்கா!"

மக்கள் தன் பேச்சை உற்சாகமாய் ஏற்றுக்கொண்ட பெருமிதத்தோடு, மேடையில் இருந்து குதித்து இறங்குகிறார் அமெரிக்கர்.

பழங்குடி இனத் தலைவன் எச்சரிக்கிறான்.

"பார்த்து... கவனம். 'கஸான்கா'வை மிதித்துவிடப் போகிறீர்கள்" என்று!

தன் சஞ்சலத்தை மறந்து முறுவலித்தாள் வர்ஷி.

புரியாமையை வேடிக்கையாய் விளக்கியது கதை.

இங்கேயும் அதே நிலைமைதான்!

தான் செய்வதை விக்ரம் தப்பாய் புரிந்துகொள்ள... அவனையும், இந்த பூமியின் ரகசியத்தையும் தன்னால் அறிந்து கொள்ள முடியாத அவதி...

சற்று நேரம் கழித்துதான் என்றாலும், உறக்கம் ஒரு வழியாய் அவளிடம் வரத்தான் செய்தது.

## 11

தொடர்ந்த இரு நாட்களை, இவள் அந்த வீட்டின் ஒரு அங்கம் போல வெகு இயல்பாகவே கழித்தாள். இரவில் தன் வெள்ளை நிற குர்தியைத் துவைத்து, மறுநாள் காலையில் குளித்ததும் அதையே போடுவதும் பழக்கமாகி இருந்தது.

அன்று போட்டுக் கழட்டிய சிவப்பு மேலாடையோடு 'பனீர்' மஞ்சளில் மற்றொன்று இருந்தாலும் ஏனோ அதைப் போட மனமில்லை.

பிள்ளைகளுக்கு படிப்பு, பாட்டு கற்றுத் தந்ததோடு அவர்களுக்காய் சமைப்பதில் நாள் மெள்ள நகர்ந்தது.

சமையல்கார வேணி இவளது உதவியை நன்றியோடு ஏற்றுக்கொண்டாள்.

"உங்க உதவி இல்லாட்டா அல்லாடி இருப்பேங்க அம்மணி. எங் கைக்குள்ள இருந்த குட்டியோட உடம்பு சரியில்லாம போயிருச்சு. நான் இங்க வந்த அன்னைக்கு 'பெட்ரோமாக்ஸ்' விளக்கைத் தூக்கியபடி ஒரு சின்னப் பெண் வந்தது ரொம்ப ஒத்தாசையாய் இருந்தது."

"அவளேதாங்க! உடம்பு அசதி... காய்ச்சலுன்னா இப்ப மேலெல்லாம் கொப்பளம் கண்டிருச்சாம்... என்ன ஏதுன்னு புரியலை."

"இங்க ஒரு டாக்டர் கண்டிப்பாய் தேவை. கீழேயும் போக முடியாமல், தேவையான மருத்துவ உதவியும் இல்லாமல் கேட்கவே எனக்குக் கஷ்டமா இருக்குது வேணி."

செல்லா கொண்டு வந்திருந்த மாங்காய்களை ஊறுகாய் போட்டு நிமிர்ந்தவளுக்கு மேலெல்லாம் எரிய, குளிக்கப் போனாள். பின்னர் தளர்வான இரவு உடைக்கு மாறியவள், தன்னைத் தேடி வந்த பரிமளம்மாவின் கையில் இருந்தவற்றை ஆச்சரியமாய் பார்த்தாள்.

"உனக்காகத்தாம்மா எடுத்துட்டு வந்தேன். வத்சலா சேலைங்க. கல்யாண நேரம் வாங்கினவள், ரெண்டு தரம்கூட இதைக் கட்டலை. உன்னை ஒரே உடையில பார்த்து எனக்கு அலுத்திருச்சு. அதான் இந்தச் சேலைகளை எடுத்துட்டு வந்தேன்."

"வேண்டாம்மா..."

"வேற சேலை வாங்க, கடைங்க இங்கே கிடையாதும்மா."

"முக்கிய தேவையான ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடமே இல்லாதப்ப... மற்றதை எதிர்பார்க்க முடியுமா?"

"செல்லாவுக்கு ரெண்டு சேலைகளைத் தந்தேன். இந்த சூழ்நிலையில் அவளும் கட்டிக்க பிரியப்படலை..."

அதற்கு மேல் தொடர விரும்பாத பரிமளம்மாவின் கைகளை இளையவள் இறுகப் பற்றினாள்.

"நான் வந்த நேரம் சரியில்லைன்னு புரியுது. ஆனால், விவரம்தான் என்னன்னு தெரியலை. மூடுமந்திரமாய் ஏதேதோ பேசுறீங்க. கடந்த அஞ்சு நாட்களாய் கண்ணைக் கட்டிவிட்டது போல இந்த புது சூழலில் சுற்றி வர்றது, எனக்கு மிரட்சியாய் இருக்கும்மா."

"ஏதும் தெரியாம வந்த நீ, அதிகம் தெரிஞ்சுக்காமலே திரும்பிடறதுதான் நல்லது. இந்தக் கொடுமையைப் பற்றித் தெரிஞ்சு என்ன ஆகப்போகுது?"



"சரி, வருண் ராஜசேகர் உங்களுக்கு உறவுதானே?"– படபடவென்று கேட்ட வர்ஷியை கனிவுடன் பார்த்தார் மூத்தவர்.

'பளீரென்ற நிறமும், தெளிவான முகமுமான இந்தப் பெண்ணுக்கு அருமையான குணமும்கூட!' என்று நினைத்தவர்–

"நீ இங்கே முதல்ல வந்ததும், உன்னையும் நாங்க சந்தேகப்பட்டோம்..."

"இல்லம்மா, வருண் ராஜசேகர் சொல்லித்தான் நான் வந்தேன். ஆனால், வந்து இறங்கினால் அப்படியொரு ஆள் இருப்பதாகவே தெரியலை. அவரை உங்களுக்குத் தெரியணும். அவர் எங்கேம்மா?"

கால்வாசி கூந்தல் நரைத்திருந்தாலும் பரிமளம்மாவின் முகம் இளமையாகவே இருந்தது. அதுவும் அவர் தயங்கி– தடுமாறிப் பேசியதில் ஒரு இளம்பெண்ணின் சாயல்.

"ம்... அவன், விக்ரம் அப்பாவின் தம்பி மகன்."

"ஒன்றுவிட்ட தம்பி. இவர்களுக்குள் சொத்துத் தகராறு போல...?"

"உனக்கு எப்படி தெரியும் வர்ஷி?"

"உலக நடப்புதானே?"

"சரியாய் சொன்னம்மா. மனுஷனின் வசதிக்காய் உருவான பண்டமாற்று சாதனம், இன்னைக்கு அவனை ஆட்டி வைக்குது. விக்ரமின் தாத்தா, அதாவது என் மாமனார் சொல்லுவார்...

'நம் வாழ்க்கைக்கும்– பணத்துக்குமான தொடர்பு, தண்ணீருக்கும், ஓடத்துக்கும் உள்ளது போல இருக்க வேணும். ஓடம் மிதக்க தண்ணீர் தேவை. ஆனால், அதே நீர்.. ஓடத்துக்குள் புகுந்தால் அது மூழ்கிடும்'னு..."

வர்ஷி புன்னகைத்தாள். "இது சம்பந்தமாய் நானும்கூட ஒரு முல்லா கதை வாசிச்சேன்ம்மா...

முல்லா, ரங்கராட்டினத்தில் பல முறை ஏறிச் சுற்றிக்கொண்டிருப்பார். சோர்ந்த பின்பும் தண்ணி குடிச்சு தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு ராட்டினத்தில் சுற்றுபவரைக் கண்ட ஒருவர் கேட்டார்..."ஏன் இப்படி அவஸ்தையோடு சுற்றுவானேன்?"ன்னு.

முல்லா சொன்னாராம்... "என் விதிங்க, என்ன செய்ய? நான் இந்த ராட்டினக்காரனுக்கு கொடுத்த கடனை சரிகட்ட எனக்கு வேறு வழி தெரியலையே"ன்னு!"

இரு பெண்களும் சேர்ந்து சிரித்தார்கள்.

"போனால் போகட்டும்னு விடாமல், பணம் நம்மை ஆட்டிப்படைக்க விட்டுடறோம். இந்த மலைப்பகுதி எங்க மாமனாருக்கும் முந்தைய

காலத்திலேயே இந்த குடும்பத்தின் சொத்தாய் இருந்திருக்குது. தங்களால் இயன்றளவு இங்குள்ள பழங்குடிகளுக்கு உதவி இருக்காங்க.

ஆனால், முழுக்க இங்கேயே தங்க முடியாததால், எதிர்பார்த்த அளவில் அமிர்தமலை முன்னேறலை. ஆசிரியர்களோ, மருத்துவர்களோ இங்கே நீண்ட நாள் தங்க விரும்பாததால் அவங்க கட்டி வைத்த சில கட்டடங்கள் பாழடைஞ்சு நிற்குது. விக்ரம் அதைச் சீர்படுத்தி, சில குடும்பங்களை அங்கே குடியேற்றினான். சொல்ல வந்தது என்னன்னா... எங்க மாமனார் தன் இரண்டு மகன்களுக்கும், ஒரு மகளுக்குமாய் பிரித்து தந்த இந்த பூமியை, கடனில் சிக்கிய என் கொழுந்தன் தன் பங்கை எங்களிடமே விற்றுவிட்டார்."

தன்னுள் குடைந்த கேள்விகளுக்கான விடைகள் ஒருவழியாய் கிடைத்த நிம்மதியில் கவனமாய் கேட்டுக்கொண்டிருந்தாள் வர்ஷி.

பல தலைமுறைகளாய் பணமும், பூமியும் உள்ள இந்தக் குடும்பம் இப்போது பணப் பித்து இல்லாமல் அமைதியாக வாழ்வது புரிந்தது.

"விக்ரமின் அத்தையிடம் ஒரு பங்கு நிலம் இருந்ததாய் சொன்னீங்க."

"அதிகமில்லை என்றாலும் சில ஏக்கர்கள் இருந்தன. அவளின் ஒரே மகள் வெளிநாட்டுக் குடியுரிமை பெற்று போய்விட, அண்ணியும் ஆஸ்திரேலியா போயாச்சு. பரம்பரைச் சொத்தில் தனக்குப் பங்கு இல்லாமல் செய்துவிட்டார் தன் அப்பான்னு வருண் அவர்களிடம் புலம்ப, அண்ணியும் தன் பங்கு நிலம் அவனுக்குத்தான்னு சொல்லி இருக்காங்க."

"வருண் இதை நல்லபடி பாதுகாத்துப் பராமரிக்கக் கூடியவரா?"

"இல்லைன்றதுதான் பிரச்சினைம்மா. அவனும் எங்கொழுந்தனைப் போல 'தாம்தூம்'ன்ற செலவாளி. வேண்டாத சகவாசங்கள். சொத்து இன்னும் வருண் கைக்குப் போகலை. அதற்குள் அதை பல பேரிடம் விற்க அவன் திட்டம் போட்டாச்சு!"

"ஆனாம்மா... இந்த இடம் எங்களிடம் வந்தால், நாங்க நல்லபடி முன்னேற்றுவோம். மக்களுக்கு நிலையான வருமானம் நிச்சயம். கூடவே கடை, கண்ணின்னு ஏகப்பட்டது வர... இடமே வித்தியாசமா ஆகிடும்."

"கடையும், கூட்டமும் வந்தால் குப்பைதாம்மா சேரும். இவங்களோட உழைப்பை உறிஞ்சுட்டு போயிடுவாங்க."

"சுத்தமான பராமரிப்பு எங்க பொறுப்பும்மா. நீங்க முகேஷிடம் பேசினால்..."

பரிமளம்மா முகம் இறுகியது.



"இனி ஜனங்க யாரையும் நம்ப மாட்டாங்க வர்ஷி. இந்த எளியவர்களை ஆசைக் காட்டி அறிச்சவங்களை ஏதும் செய்ய முடியாது போலிருக்குது. சட்டம் வலியவனுக்குத்தான் அரணாய் நிற்குது. மேலும் மேலும் இவங்க ஏமாறாமல் பாதுகாத்தால் போதும்ன்ற நிலை..."

பெருமூச்சுடன் மூத்தவர் பேச, இவளுமே பெருமூச்செறியத்தான் முடிந்தது.

இதுதான் சிக்கல் என்று யாரும் தனக்குப் பிரித்துக் காட்டாமல், மேலும் மேலுமாய் நூலைச் சுற்றிக்கொண்டே போக, தலை– வால் புரியாத குழப்பம்தான் மிச்சம்.

"இந்த நிலம் வருண் ராஜசேகரனுடையது இல்லை. அவர் அத்தையினது. தகாதவர்களுக்கு விற்றால் பிரச்சினைன்னு அஞ்சுறீங்க. ஆனால், அதற்காக சரியான வளர்ச்சியை முடக்க வேண்டாமேம்மா? உழைத்து உயரும் வாய்ப்பு வந்தால், அதைப் பயன்படுத்தவதுதானே நியாயம்?"

"உழைக்க இந்த மக்கள் தயங்கலை வர்ஷி. 'உண்டு கெட்டது வயிறு; உண்ணாமலேயே கெட்டது உறவு'ம்பாங்க. அதாவது கண்டதையும் உண்பது வயிறைக் கெடுக்கும். உறவுக்காரங்க வீட்டில் கை நனைக்காவிட்டால், உறவு அழியும். இதைத் தொடர்ந்து வரும் வரிகளை என் மாமனார் இந்த மக்களுக்கு அடிக்கடி பாடுவார்...

'**உழைத்துக் கெட்டது தரித்திரம்;**

**உழைக்காது கெட்டது வாழ்வு**'."

"அரும் கருத்து அழகாய் சொல்லப்பட்டு இருக்குது. ஆனால், இவங்களின் கடின உழைப்புக்கான பலன் கிடைத்தது போல இல்லையே? அடிப்படைத் தேவையான கல்வி, மருத்துவ உதவி கூட இல்லாத இந்த வாழ்வைத்தான் இவங்க தொடரணுமா? நியாயமில்லை..."

சற்று காட்டமாய் வர்ஷி சொன்னதைக் கேட்ட மூத்தவரின் முகம் மறுபடியும் மாறியது.

## 12

'**ம**னிதர்கள் இல்லாத உலகில் பறவைகள் வாழ்ந்துவிடும்; ஆனால், பறவைகளற்ற உலகில் மனிதர்களால் வாழவே முடியாது'– இதை நான் சொல்லலை, சலீம் அலி சொன்னது.

ஒற்றையடிப் பாதையில் நடந்தபடி விக்ரம் சொல்ல, மவுனமாய்

பின்தொடர்ந்தாள் வர்ஷி.

சலீம் அலி சிறந்த பறவை ஆய்வாளர் என்ற அளவில் இவளுக்குத் தெரியும். என்றாலும் சில முக்கிய தகவல்கள், ஏன் ரகசியம் என்றே வைக்கலாம். வெளியாக இருந்த தருணத்தில் பரிமளம்மாவுடனான தன் பேச்சில் இடைப்புகுந்து வெட்டியவனிடம் சற்று வெறுப்புதான்.

"வீட்டிலேயே அடைஞ்சு கிடப்பது சிரமம் வர்ஷி. எனக்கு வேலை இருக்குது. கூடவே பொழுது போவதோடு, கிராமத்தைப் பார்த்தது போல இருக்கும்" என்று விக்ரமிடம் இருந்து வந்த அழைப்பு இவளுக்கு ஆச்சரியம்தான். ஆனால், மேலும் விவரங்களை அறியும் முன் கிளம்ப மனமின்றி– அழைப்பை நிராகரிக்கும் முன்பே, பரிமளம்மா வாய் திறந்தார்.

"கிளம்பும்மா. காற்றாடப் போய் வர்றது உடம்புக்கும் ஆரோக்கியம். இங்கே செல்லா, குழந்தைகளை பின்புறத் தொட்டிக்குக் கூட்டிப் போய் குளிக்க வைக்கப் போறாளாம். ஆக, அதுங்களுக்கும் பொழுது போயிடும். ஆங்... இந்த சேலையில் ஒன்னை உடுத்திக்கோ" என்றார்.

அவர் படுக்கையில் வைத்த சேலைகள் கண்ணைப் பறித்தன. பழுத்த தங்க நிறத்தில் சிவப்பும், தங்கமுமான புட்டாக்கள். மற்றொன்று பளீர் நீலமும், பச்சையுமாய் மயிலின் சாயலில்.

அவற்றை ஒரு பார்வை பார்த்தவன்,

"சேலை எல்லாம் கட்டிட்டு காட்டுப் பாதையில் நடக்க முடியாது"– மறுத்தான்.

"இல்ல, வர்ஷி ஒரே குர்தாவையே போட்டுக்கிறாளேன்னுதான் சொன்னேன்..."

"அன்னைக்கு நல்ல சிவப்பில் ஒண்ணு போட்டிருந்தியே! அதைப் போட்டுக்கிட்டு கிளம்பு, அஞ்சே நிமிஷத்துல..." என்று இருவருமே வெளியே போய்விட, இவளுக்குள் கோபம் கொப்பளித்தது.

இந்தக் கவனிப்பெல்லாம் நாடகம். ஏதோ ஒரு ரகசியத்தைத் தன்னிடம் இருந்து மறைப்பதற்காய், மர்மத்தை இவள் கண்டு கொள்ளாதிருக்க காட்டப்படும் கவனத் திருப்பல்கள்.

வேண்டுமென்றே தனது மஞ்சள் குர்தியை எடுத்துப் போட்டவள், நடப்பதற்கு வசதியான 'ரீபாக்' காலணியுடன் தயாரானாள்.

தலைமுடியைச் சிக்கெடுத்தபடி கண்ணாடி எதிரே போனவள் சற்று நிதானித்தாள். முகம் பளீரிட்டது, கூந்தலின் பளபளப்பும் கூட முன்பில்லாதது. இங்குள்ள தூய காற்று, தண்ணீரோடு ஓய்வும் இந்த மாற்றத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும்.



கழுத்து வியர்த்து பிசுபிசுக்காமல் இருப்பதற்காய் சிவிய கூந்தலை சற்று உயர்த்தி கட்டி வைத்தாள். உதடுகளின் ஈரப்பசையை பாதுகாக்க துளி அளவு 'ஜெல்.'

தன் காமிராவுடன் அவள் வெளியேற, வாசல் பக்கம் விக்ரம் காத்து நிற்பது தெரிந்தது. இவளைப் பார்த்தவனது கண்களில் வெளிச்சம் கூடியது. இவளது காலணிக்கு மெச்சுதலாய் ஒரு தலையசைப்பு! அவற்றைக் கவனியாதது போல வர்ஷி உட்புறம் போய் பரிமளத்திடம் சொல்லிக்கொண்டு, அவனைத் தொடர்ந்தாள்.

அவன் பேசினான்தான். ஆனால், தந்த விவரங்கள் எல்லாம் பறவைகளைப் பற்றி!

மரக்கிளையின் கூடுகளைக் காட்டியவன்–

"பறவைகள் தங்கள் இணையைத் தேர்ந்தெடுப்பதில் மிகக் கவனமானவை. கூடு கட்டும் பொறுப்பு ஆணுடையது. பெண் அதை சோதித்து, கூடு சரி இல்லைன்னா அதில் வாழாது. மட்டுமல்லாமல் அதைக் கட்டிய ஆண் பறவையையும் நிராகரிச்சுடும். இதுதான் உண்மையான பெண் உரிமைன்னு எனக்குத் தோணும்... ம்..."

அலட்சியமாய் இருப்பதுபோல காட்ட முயன்றவளுக்கு அது முடியவில்லை. ஆர்வமாகவே கவனித்தாள்.

ஒரு தாழ்ந்த மரத்தில் அசைந்த சில காலிக் கூடுகளைக் காட்டியவன்,

"அதெல்லாம் நிராகரிக்கப்பட்ட தாஜ்மகால்கள்!"– என்றபோது அவளையும் மீறி உதடுகள் புன்னகைத்தன.

"கவுதாரிகள் கூட்டுக் குடும்பமாய் வசிக்கும். இப்போது மனுஷர்களுக்கு அது சாத்தியப்படுவதில்லையே..." என்று அவன் சொன்னபோது மட்டும், இதுதான் தருணம் என இடைபுகுந்தாள்.

"சொத்து, பணம் மேலுள்ள பேராசைதான் அதற்குக் காரணம். ஒருத்தர் உழைத்து சம்பாதிப்பதை உரிமையாய் அனுபவிச்சுடணும். வாரிசுக்கென்று சேர்த்து வைத்தால்... பிள்ளைகளிடையே பிரச்சினையும், பிரிவினையும்தான்..." என்றாள் படபடப்பாய்.

இயற்கையைவிட்டு, மனித சுபாவம் பற்றிய பேச்சுத் தாவலில் விக்ரம் சற்று திகைத்தாலும், பாதையில் இருந்த ஒரு கடும் குழியை அவளுக்குச் சுட்டிக்காட்டி, உதவிக்கு கையையும் நீட்டினான்.

இவளோ தன் பேச்சிலேயே கருத்தாய் தொடர்ந்தாள்.

"பேராசை பெருநஷ்டம் என்பதில் முக்கியமான நஷ்டம் குடும்ப உறவும், அதன் பாசமும்தான். உங்களுக்கு இதில் உடன்பாடு இல்லைன்னு நினைக்கிறேன்..." சீண்டலாய் கேட்டாள்.

"இந்த கிராமங்களில் கூட்டுக் குடும்பங்கள்தான். இப்ப நாம போகும் வீட்டில் பெரிய அசம்பாவிதம். அதில் மொத்த குடும்பமும் நிலைகுலைஞ்சு கிடக்குது."

"ஓ... என்னாச்சு?"

"ரெண்டு வயசு பெண் குழந்தை இறந்திடுச்சு. கிடைத்ததைக் கொண்டு எளிமையாய் வாழ்ந்தவங்க. கொஞ்சம் ஆசைப்பட, நஷ்டமானது சின்ன உயிர்."

"இங்கே காரணம் அறியாமைன்னு நினைக்கிறேன். தடுப்பு ஊசிகளை முறையாய் போட்டிருக்கணும்."

"பொதுவாய் பூரண ஆரோக்கியம் உள்ளவங்க. ரசாயனம் கலக்காத உணவு, உழைப்பு, தூய காற்றோடு ஆசைகளால் அலைக்கழியாத மனசு கொண்டவங்க..."

"ம்..."

இது அவள் ஒத்துக்கொள்ள வேண்டிய விஷயம்தான்!

"இவங்களின் அறியாமை வேறு. எல்லாரும் தங்களைப் போல நல்லவங்க, உபகாரிகள்னு எண்ணும் அறியாமை."

யாரோ இவர்களை ஏமாற்றியதைக் குறிப்பிடுகிறான்.

சற்று மேடான பகுதியில் ஏற நேர்ந்தபோது- பழக்கமற்றவள் மூச்சிரைக்க- நீண்ட அவனது கையை மறுக்க முடியாமல் பற்றிக்கொண்டாள். அப்பாவின் கைகளை அடிக்கடி பற்றிக் கொள்வதுதான் என்றாலும் அவை மிருதுவும், தளர்வும் ஆனவை. வெதுவெதுப்பான இவனின் வலிய கைகள், அதன் இதமான அழுத்தம் தனி தெம்பு தந்ததை உணர்ந்தாள்.

மேட்டுக்கு ஏறியதும் அங்கிருந்த விசாலமான மூங்கில் வீட்டை வியப்பாய் பார்த்தாள்.

பெரும் சோகத்தை விழுங்கியது போல தணிவாய் நின்றது அந்த ஒற்றை வீடு.

அதை நெருங்க, உள்ளே நடமாட்டம் தெரிந்தாலும் கடும் அமைதி.

மிதந்த மெல்லிய பனிமூட்டத்தின் நடுவே ஒரு ஓவியம் போல இருந்த அதனுள்-

"சின்னவர் வந்திருக்கேன்" என்று குரல் தந்தபடி நுழைந்தான் விக்ரம். சாணம் மெழுகிய தரையின் பசுமையும், மூங்கிலின் பழுப்பும் கண்களுக்கு ரம்மியமாக இருந்தன. மாலை வெயிலின் மஞ்சள் ஒளி பரவாத இருளுக்குள் விக்ரம் குனிந்து நுழைய, இவள் தன் காலணிகளைக் கழற்ற குனிந்தாள்.



"வேண்டாம். அப்படியே வா" என்றவன்- உள்ளே இருந்தவர்களிடம் பேசியபோது, அவன் குரலில் கனிவு குழைந்தது.

"மண்ணெண்ணை தந்து விட்டேனே... ரெண்டு விளக்குகளை ஏற்றி வைக்கலாமே?"- குற்றம் சாட்டாமல் மிருதுவாகவே சொன்னான். ஓரமாக இருந்த முக்காலி இரண்டை எடுத்துப் போட்டு, தான் ஒன்றில் அமர்ந்தபடி- இவளையும் அமர சைகை காட்டினான்.

ஆனால் வர்ஷிக்கு அந்த இருளில் தடுமாறியது. புகையும், மூலிகை மணமுமாய் இருந்த அறையில் மூச்சு திணறியது.

"சின்னவரு விளக்கு ஏத்தி வைக்கச் சொல்லுதாரு"- பெரியவர் தன் மனைவியிடம் கிசுகிசுக்க, அவள் விம்மினாள்.

"குடும்ப விளக்கு போச்சுல்லா... பிறவென்ன?" என்றாள், விரக்தியாக!

"ரெங்கு எப்படி இருக்கா...? வரச் சொல்லுங்க."

"சாப்பிடல, பேசல... இருட்டுள்ளார முடங்கியே கிடக்கா."

விக்ரமிடம் பேசினாலும் அம்முதியவரின் கண்கள் வர்ஷியையே அளவெடுத்தன. அந்தத் தீவிரம் தாங்காமல் வாசல் கதவோரம் ஒண்டினாள் இவள்.

"ரெங்குவின் மாமன்- மாமி வந்தாங்களா?"

"அவுக வர-போகத்தான் இருக்காவய்யா. ஆனா, மவதான் புலம்பறா. இந்த மலையவிட்டு இறங்கமாட்டேன்னு புருஷனையும் இங்கனயே இருக்க வச்சவளை இப்ப குத்த உணர்வு மசக்குது."

அனைவருக்கும் தான் காட்சி பொருளானது போன்ற சங்கடத்தில் நின்றாள் வர்ஷி. என்ன பேசுவது என்றும் தெரியவில்லை. மேலும், இருண்ட உட்புற அறையில் இருந்து தளர்வாய் வந்தது ஒரு பெண் உருவம். கட்டி இருந்த சேலையைப் போலவே கசங்கிய தோற்றம்...

"வா ரெங்கு" என்றபடி விக்ரம் பேசியதைக் கவனியாது அந்த இளம்பெண் கண்களை இடுக்கி வர்ஷியை உறுத்து பார்த்தாள். 'சொல்லி வைத்தாற்போல எல்லாரும் தன்னை ஒரு விசித்திர ஜந்து போல பார்ப்பது ஏன்?'- அவளின் எரிச்சல் விக்ரமிடம் பாய்ந்தது.

'ஒரு இழவு வீட்டில் தன்னை ஏன் காட்சிப் பொருளாய் கொண்டு வந்து நிறுத்தினான்? பரிமளாவிடம் அதிகம் பேசக்கூடாது என்பதற்காகவோ?'

மலைப்பாதையில் விழுந்த மரங்களை அகற்ற ஆரம்பித்துவிட்டதாய் காலையில் ஒரு பேச்சு இவள் காதில் விழுந்தது. தான் ஓரிரு நாட்களில் இங்கிருந்து கிளம்பிவிடலாம். அதற்குள் இங்குள்ள ரகசியங்களைத் தேனீ போல உறிஞ்சி எடுத்துக்கொண்டு பறந்துவிடக்கூடாது என்ற

முன்னெச்சரிக்கை.

'நீ பத்திரிகை நிருபரா?' என்றும் கூட ஒன்றுக்கு இரு முறை கேட்டவனாயிற்றே! ஜீன்ஸும், குர்தாவுமாய் உடுத்திய பெண்ணை இவர்கள் பார்த்திருக்க மாட்டார்களோ? சின்னத்திரை தா சகலத்தையும் இவர்களுக்கு அறிமுகப்படுத்தி இருக்குமே? ஆனாலு வெயில் படாத சருமமும், வளைந்த புருவங்களும் பளபளக்கு உதடுகளுமாய் ஒரு பெண்ணை இவர்கள் நேரில் பார்த்திருக் மாட்டார்களே? தவிர, ஒருவரை இப்படி வெறிக்கப் பார்ப்ப அநாகரீகம் என்பதை அறியாதவர்கள்.'

"குழிப்புள்ள... மடியில என்பாங்க ஐயா. ஆனா, இவ மனசு தேறுதல இல்லீங்க."

தாயார் புலம்ப, ரெங்கு மூச்சிரைக்கக் கத்தினாள்.

"பாதகத்தி வந்துட்டியா? புதைச்ச எங் குழந்தய உம் மருந்து எழுப்பித் தந்திருமா? சத்து மாத்திரையில எங் குழந்த வளந்து திரளும்னியே! துவண்டு, கருகி மண்ணுக்குப் போயி நாலஞ்சு நாளாச்சே... இப்பதான் பாக்க வந்தியா?"

பேசியபடி பாய இருந்தவளை, அவளது பெற்றோர் பிடித்துக்கொண்டார்கள்.

கேள்வியாய் எழுந்த விக்ரமிடம் ரெங்குவின் அப்பா விளக்கினார்–

"இப்படி உடுத்திட்டு வந்தவங்களாலத்தானய்யா இத்தினி வேதனை. இனிக்க பேசி, மாத்திரையோட 'டார்ச்சு', 'டி.வி.'ன்னு ஏதேதோ அவுக தந்ததுல ஏமாந்துட்டோம்."

விக்ரம், ரெங்குவைச் சமாதானப்படுத்தினான்.

"இது வர்ஷி. நம்ம வீட்டு விருந்தாளி... நமக்கு வேண்டியவங்க."

"ஐயோ... நீங்களும் ஏமாந்துராதீங்க. இதேபோல பூட்ஸுதான அவுக காலிலும்? இதே ரகம், நிறம்னு... இது அந்தக் கூட்டத்துப் பொட்டதானுங்க."

அதுவரை சோர்ந்து கிடந்த அப்பெண் ஆவி புகுந்தது போலக் குமுறி பாய, வர்ஷி வெளியே வந்தாள்.

'ம்ப்ச்... முதலியேயே காலணிகளைக் கழற்றி போட்டிருக்க வேணும். இப்போதும்தான் என்ன? வெறுங்காலோடு உள்ளே போய், ரெங்குவிடம் ஆறுதலாய் சில வார்த்தைகளைச் சொல்லிவிடலாம்.'

உள்ளிருந்து பெருகிய புலம்பலும், விம்மலும் இவளை நொறுக்கின. இரண்டு வயதுக் குழந்தையைப் பறிகொடுத்த அந்த ரெங்கு தன்னைவிட இளையவள்.



அவசரமாய் வலது பக்க காலணியைக் கழற்றியவள், மறுகாலை உயர்த்த– வலது பாதத்தில் ஏதோ 'சுருக்'கென ஏறியது.

துள்ளி விலகியவள், கத்தாமல் இருக்க தன் வாயைக் கைகளால் மூடிக்கொண்டாள்.

## 13

இவளை வாசலிலேயே வெகுநேரம் காக்கவிடாமல், விக்ரம் சிறிது நேரத்திலேயே தன் பாக்கெட்டில் எதையோ திணித்தபடி வந்தான். இவளைப் பார்த்த விதத்தில் சிறு மன்னிப்புக் கோரல்– ஆனால், உடனே புருவம் சுருங்க கேட்டான்...

"வியர்த்திருக்கே... என்னாச்சு?"

"ம்ஹூம்."

"பனி நேரத்துல இப்படி வியர்வையா...? சரி, ரெங்கு பேசினதில பயந்திட்டியா?"– கனிவு மாறாத குரலில் கேட்க, இவளுக்கு தொண்டை அடைத்தது.

"இல்ல... வீட்டுக்குப் போலாமா?"

குழந்தைத்தனமான முகத்துடன் இருந்த ரெங்குவின் தலையைக் கோதி, அவளது இழப்பு எவரால் ஏற்பட்டது என்பதைக் கேட்டறிந்து, அதற்காய் ஏதேனும் செய்ய வேண்டும் என்ற பரபரப்பு எல்லாம் ஒரே முள் குத்தலில் பஸ்பமாகி இருந்தது.

வலது பாதம் சூடாகி வீங்கினது போல இருந்தது. மறுபடி போட்டுக்கொண்ட காலணியை கழட்டி வீசிவிடும் அளவுக்கான வலி. ஆனாலும் விக்ரமைத் தொடர்ந்தாள்.

"வீட்டில் அடைஞ்சு கிடந்தே. இங்கே சில விவரங்கள் தேவைப்பட்டன. உன்னைத் தனியே வெளியே அனுப்ப முடியாது. அதான் என்கூட வரட்டுமேன்னு நினைச்சேன்...!"

'நானா? வீட்டில் கொண்டாட்டமும், கோலாகலமுமாய் அல்லவா இருந்தேன்?' என்று பதிலடிக்க நினைத்தும் முடியவில்லை. ஒரு விதமான சோர்வு தன்னைப் போர்வை போல மூடுவதை அச்சத்துடன் உணர்ந்தாள்.

"அன்றைக்கு என் காலில் குத்தினது முள்தான். பாம்புக்கடி இல்லைன்னு எப்படி தெரிஞ்சுகிட்டீங்க?"

"தொட்டுப் பார்த்தால் முள் உன் விரலுக்குக் தட்டுப்பட்டு

இருக்குமே! எதிலும் பதற்றம் கூடாது. பயம்தான் முதல் சத்துரு. கத்திக் கதற உடம்பு ஓஞ்சிடும்."

'அவன் சொல்வதுபோல இதெல்லாம் தன் மனப்பிராந்தியா? மதமதப்பாகிவிட்ட வலது காலை நகர்த்துவதே சிரமமாகிறதே?'

"நான் இங்க வந்திருக்கவே கூடாது."

"ம்... நானும் அப்படித்தான் நினைக்கிறேன்."

கிண்டல் பேசியவன் அதற்கு பதில் வராமல் போகவும் திரும்பி திகைத்தான்.

சரிந்து விழுந்திருந்த வர்ஷியை அள்ளி எடுத்தான். தொய்ந்தவளை தூக்கியபடி நடந்தான்.

கையின் பாரத்தைப் போலவே அவன் மனதும் வெகுவாய் கனத்தது.

வர்ஷிக்கு கண்களைத் திறக்கவே முடியவில்லை. உடம்பைப் போலவே இமைகளிலும் கனம். யாரோ கன்னத்தைத் தட்டி தன்னை எழும்பச் சொல்வது புரிகிறது. ஆனாலும், செய்ய முடியாததை ஏன் செய்யச் சொல்கிறார்கள் என்ற சோர்வான சலிப்பு.

ஒரு வழியாய் கண் திறந்தபோது, தன்னைச் சுற்றி நிழல் உருவங்களாய் பலர் நிற்பதைப் பார்த்தவள்,

"விக்டோரியா ஸ்டேஷன்...?"– குழறினாள்.

"இது மும்பை இல்லை வர்ஷி... தேன்முகடு."

"தேன் மலை... அங்க போக வேணாம். நிறைய பிரச்சினை."

உடம்போடு வாயும் வீங்கின மாதிரி இருக்க, உச்சரிக்க சிரமப்பட்டாள்.

"குளுர்... குளுருதே..."

யாரேனும் கதகதப்பாய் போர்த்திவிட்டால் சுகமாய் தூங்கிவிடலாம் என்றுத் தோன்ற... கெஞ்சலாய் கேட்டாள்.

"இல்ல வர்ஷி. இப்ப நீ தூங்கக்கூடாது. கொஞ்சநேரம் முழிச்சி இரு. அப்பதான் வைத்தியர் தந்த மருந்து வேலை செய்யும்?" என்றபடி யாரோ தன் முகத்தை ஈரத்துணியால் துடைக்கவும் சிணுங்கினாள்.

சுற்றிலும் சளசளத்த பேச்சு அவளை நிம்மதியாய் இருக்கவிடவில்லை. குமட்டுவது போல எதையோ குடிக்கத் தந்து, நெஞ்சை நீவி விட்டார்கள். எழுப்பி, இருபுறமும் தாங்கியபடி தன்னை நடக்கவும் வைத்தனர். ஆனால், நடக்க இயலாமையில் அழுகை முட்டியது.

'இதென்ன உறங்கவிடாத கொடுமை?'

சில மணி நேரம் கழித்து அவள் உலகம் அமைதியானது. யாரும் தன் கன்னத்தைத் தட்டி, கூவாமல்– குலுக்காமல் இவளை நிம்மதியாக இருக்கவிட்டார்கள்.

முழு உறக்கத்தினுள் அமிழ்ந்தாள்.

இடையிடையே எழுப்பி உணவு புகட்ட, சிரமப்பட்டு விழுங்கினாள்.

'ஏன் இங்கே யாருக்கும் தன்னைப் பிடிக்கலை? கல்லெறிந்து கொல்ல வருகிறார்கள்? திட்டி துரத்துகிறார்கள்? இப்போது தூங்கவும் விடாத இம்சை...'

கண்களை சற்று இயல்பாய் திறக்க முடிந்தது. உடம்பையும் கூட அசைத்து புரள முடிந்தது. தன் அசைவை உணர்ந்து அருகே வந்த உருவத்தைப் பார்த்தாள்.

"செல்லா..."

"கடவுளே... உங்களுக்கு நினைவு மீண்டிருச்சு."

"என்ன... என்னாச்சு?"– உலர்ந்த உதடுகளைப் பிரித்து கேட்டாள்.

"எல்லாம் நல்லாயிருச்சு. ஏதும் குடிக்கிறீகளா?"

"தண்ணி..."

சில நிமிடங்களில் புளிப்பும், இனிப்புமான ஒரு பானம் புகட்டப்பட, தாகத்துடன் அதைப் பருகினாள் வர்ஷி.

"எனக்கு என்ன?"

"ஒண்ணுமில்ல... பூச்சிக்கடிங்க! அவ்வளவுதான்."

"மயக்கமாயிட்டேனா?"

"முழுசா மூணு நாளு மயக்கம். கண்ண முழிச்சு எங்க வயித்துல பால வார்த்தீக அம்மணி."

"மூணு நாளா?"

"ஆமாம்... இது நாலாம் நாளு."

"நான் ஊருக்குப் போகணுமே?"

"இன்னும் அசந்துதான தெரியுதீக. மேலுக்குத் தெளிஞ்சதும் ஆகட்டுமுங்க" என்ற செல்லா, ஈரத்துணி கொண்டு இவளைத் துடைத்து, கூந்தலையும் சிக்கு பிரிக்க ஆரம்பித்திருந்தாள்.

பசித்தது. ஓடி வந்து பரிமளாம்மா ஊட்டியதை உண்டவள் மெல்ல கேட்டாள்...

"அவர்... விக்ரம்?"

"மூணு நாளா பெரும்பொழுது இங்கனதான் இருந்தாக. இப்ப வேற ஜோலி வர, போயிருக்காக..." என்றாள் செல்லா.



வயிறு நிரம்பியதும் மறுபடி கண்கள் செருகின.

மறுபடி விழிப்பு வந்தபோது, தெம்பு கூடி இருந்தது. எழுந்து படுக்கையில் உட்கார்ந்தவளின் பார்வையில் ஜன்னல் வழியே காக்கிச் சட்டையின் நடமாட்டம் தென்பட்டது.

தானே பக்கத்தில் இருந்த குவளை நீரை எடுத்துப் பருகினாள். மறுபிறவி எடுத்தது போல தெரிந்தது. மெல்லிய போர்வையை விலக்கி, சற்று அச்சத்துடனேயே தன் வலது காலை ஆராய்ந்தாள். சற்று சிவந்து வீங்கி இருந்தது. ஆனால், பெரிய வலி ஏதும் இல்லை.

எழுந்து நிற்கவும், நடக்கவும் முடிந்தது. குளியலறைக்குப் போனவள் முகம் கழுவிவிட்டு ஜன்னல் பக்கமாய் நின்று காவல் துறையின் நடமாட்டத்தை உன்னிப்பாக கவனித்தாள்.

'இத்தனை போலீசார் கூடும் அளவுக்கு இங்கே என்ன குற்றம் நடந்திருக்கும்? புதைபட்ட ரகசியங்களை எல்லாம் காவல்துறை தோண்டி எடுத்துவிட்டதோ?

செல்லாவை அழைத்துக் கேட்கலாமா?

ஏதோ வழக்கு விசாரணை என்பதால்தான் யாரும் தன்னருகே இல்லை. இப்படி வேண்டாத வம்பில் சிக்கி இருப்பது அப்பாவுக்குத் தெரிந்தால் என்ன சொல்வார்?

நீ வேலைபார்த்த லட்சணத்தைப் பார்த்தாயிற்று. பேசாமல் வீட்டில் இட– என்று பாசக் கோபத்துடன் வீட்டோடு இருத்திக் கொள்வாரோ?'

யோசனையில் மூழ்கிய இவள் முகம் பெரிய வியப்பில் விரிந்தது.

'வெளியே விக்ரமோடு பேசியபடி வருவது யார்?

அப்பாவா... தன் அப்பாதானே?

அவரைப் பற்றி எண்ணியதில் நேர்ந்த பிரமையா, இது? அல்லது விஷக்கடி தன் சித்தத்தைக் கலக்கிவிட்டதா?'

ஜன்னல் கம்பியை இறுக்கியபடி வெறித்திருந்தாள் வர்ஷி.

## 14

"நான் தமிழ்நாட்டில் வளர்ந்தவன். ஆனா, இப்படி ஒரு அற்புதமான ஊரைப் பார்த்தது இல்லைங்கறதை விடு... கேள்விப்பட்டதுகூட இல்லியேம்மா."

உற்சாகமாய் பேசிய தன் தகப்பனைப் பிரமிப்புடன் பார்த்தாள் வர்ஷி.

"என்னம்மா அப்படி முழிக்கறே? இன்னும் அப்பா உன் முன்னே இருப்பதை நம்ப முடியலியா?"

"ம்..."

"என்ன டாக்டர்? எம் பெண், முழுக்க குணமாயிட்டதா சொல்றீங்க. இன்னும் அவளுக்கு பேச்சுகூட வரலியே?"

அங்கு நின்ற ஒரு புதுமுகத்திடம் வேடிக்கையாகப் பேசி சிரித்தார் அவளின் தந்தை துரைராஜ். கழுத்தில் 'ஸ்டெதஸ்கோப்' எல்லாம் போடாத அம்மருத்துவர்...

"நாலு நாள் மயக்கமில்லையா? கொஞ்சம் கொஞ்சமாய்தான் தீரும்"- என்று தன் பங்குக்கு கேலி பேசினார்.

"நீங்க... இங்கே எப்போ வந்தீங்கப்பா... எப்படி?"

"நேற்றுதான் வந்து சேர்ந்தேன். முதல் நாளே உன்னை கருஞ்சிலந்தி கடிச்ச தகவலை எனக்கு மிஸ்டர் விக்ரம் சொல்லிட்டார். கவனமாய் பார்த்துக் கொள்வதாய் அவரும், அவங்கம்மாவும் சொல்லியும் எனக்கு மனசு கேட்கலை. கிளம்பிட்டேன். விமான டிக்கெட் கிடைக்கறதில் தாமதம். உன்னை படுக்கையில் சுயநினைவு இல்லாமல் பார்த்ததும்..."

அப்பா தொடர முடியாமல் நிறுத்த, மகளுக்குக் கண் கலங்கிவிட்டது.

"நாடித் துடிப்பு சீராய் இருப்பதால், எந்த ஆபத்தும் இல்லைன்னு சாரை சமாதானப்படுத்தினோம். காலையில கண் விழிச்ச நீ, செல்லாவைக் கூப்பிட்டு பேசினதும்– பழரசம் குடிச்சதும்– அவருக்கு மட்டுமல்ல... எல்லாருக்கும் நிம்மதி. முக்கியமாய் எனக்கு! இனி நான் வீட்டுக்குப் போலாமே?"

மருத்துவரோடு தன் தந்தையும் ஏதோ இங்கே பல காலம் இருந்தவர்கள் போல இயல்பாய் பேசுவதை விநோதமாய் பார்த்திருந்தாள்.

"முகேஷ் மித்தலும் கூட வர்றதாய் சொன்னார்..."

"அவருக்கும் விஷயம் தெரிஞ்சாச்சா?"

"பின்னே விக்ரம் அங்கேயும் பேசிட்டாரே" என்று அப்பா சொல்ல, இவளுக்குக் கண்ணைக் கட்டியது.

ஏதோ பல ஆண்டுகள் பழக்கம் போல இதெல்லாம் என்ன?

மருத்துவர் சொன்ன மருந்து விவரங்களைக் கேட்டுக்கொண்ட பரிமளம்மா, "வர்ஷி குளிச்சிட்டு சாப்பிடட்டும்... தினம் உடம்பைத் துடைச்சு விட்டாலும் குளிச்சாத்தான் அலுப்பு நீங்கும். பிறகு நல்ல சாப்பாடு... அப்புறம்தான் பேச்செல்லாம்."

ஆண்கள் வெளியே போக, பெரியவர் இவளது குளியலுக்கான



ஏற்பாட்டில்,

"பிள்ளைங்க எங்கேம்மா?"

"அவங்க அம்மாவைக் கண்டதும், நம்ம கண்ணிலேயே அதுக
படலையே! ஒரே பேச்சும், கும்மாளமும்தான்."
கேட்ட வர்ஷிக்குள் குபீரென மகிழ்வு பெருகியது. அந்த உற்சாகம்
உடம்பின் களைப்பை அடித்து விலக்கியது.

"வத்சலா... அதான் உங்க பொண்ணு வந்தாச்சுங்களா?"

"இங்கே நடந்த கதையை எல்லாம் கேட்டவ, மனசு தாங்காமல் தன்
குடும்பத்தைத் தேடி ஓடி வந்துட்டா. கெட்டதிலேயும் ஒரு நல்லதுன்னு
சொல்லுவாங்களே அதுபோல. என்னென்னவோ அசம்பாவிதங்கள்
உலகில் நடக்க, நாம வம்பை விலை தந்து வாங்கக் கூடாதுன்ற புத்தி
வர, மாப்பிள்ளையோடு பேசி, அவரும் கிளம்பி வந்துட்டிருக்கார்..."

"சந்தோஷம்மா. ஆனால், அப்படி இங்க என்ன நடந்தது?"

"சொல்றேன்ம்மா. இங்கே நீ வந்தபோது, அந்த பயங்கரத்தில்
சம்பந்தப்பட்டவன்ற சந்தேகக் கலவரத்தில் உன்னிடம் யாரும் எதுவும்
பேசலை."

"இங்கே ஏதோ ரகசியம் ஒண்ணு இருந்தது புரிஞ்சுது.ஆனாலும்..."

"ரகசியம் இல்லைம்மா வர்ஷி... பயங்கரம்! குழந்தைகள்னுகூட
பாராமல் அவங்களைப் பயன்படுத்தி, அதுக உயிரை வேண்டாத
குப்பையைப் போல கசக்கிப் போட்ட அக்கிரமம்."

பரிமளத்தின் குரல் ஆத்திரத்தில் நடுங்கியது.

"மறுபிறவி எடுத்த உனக்கு மற்ற விவரமெல்லாம் இப்போ வேண்டாம்.
வந்து இப்படி உட்கார். நான் தண்ணி ஊத்தறேன்."

தைலம் மணமணக்கும், தளும்பிய வெந்நீரை மொண்டு இவள்
மேலுக்கு இதமாய் ஊற்றிவிட்டார் பெரியவர். துவாலையைச் சுற்றி
இருந்தாலும் இவளுக்குச் சங்கடம்தான்.

"உங்களுக்குச் சிரமம்மா... செல்லாகூட."

"அவளையும் விசாரிக்கறாங்க. அவதானே இந்த அக்கிரமத்தை
முதல்ல கண்டுபிடிச்சது?"

மசமசத்த தன் புத்திக்கு இப்படி அங்கொன்றும் இங்கொன்றுமாய்
கிடைத்தத் தகவலைக் கோர்க்கத் தெரியவில்லை போலும். குழம்பித்
தத்தளிக்கிறதே! ஆக... மவுனமாய் உட்கார்ந்திருந்தாள் வர்ஷி.

குழப்பிய குளியல்பொடி தேய்த்து அலசிய பின்பு சுகமாய்
இருந்தாலும், கடுமையான பசி. அவசரமாய் தலையைத் துடைத்து,
பெரியவர் வைத்திருந்த சேலையை உடுத்திக்கொண்டு, பரிமாறப்பட்ட

உணவை வேகமாய் சாப்பிட்டாள்.

"மெல்ல... மெல்ல" என்றபடி சில தகவல்களைத் தந்தபடி நின்றார் பரிமளம்மா.

"கருஞ்சிலந்தி கடிச்சதும் சிகிச்சை எடுக்காட்டா ஆபத்தும்மா. கடிச்ச இடம் ரணமாகி, கையோ- காலோ இழந்தவங்க உண்டு. விக்ரம் உடனே யூகிச்சதால நரம்பு பக்கம் அறுத்து, விஷத்தை வெளியேறிட்டான். செல்லா ஏதோ பச்சிலைக் கட்டு போட, பிறகு டாக்டரும் வந்தார்."

"ரோடு அடைப்பட்டு இருந்ததே?"

"நீ வந்த மறுநாளே... சொன்னதுபோல மரம் விழுந்த இடம் வரை வந்த அவரை பிறகு விக்ரம் தன் ஜீப்பில் போய் கூட்டிட்டு வந்தான். அவர் பெரிய ஆபத்து இல்லைன்னு சொல்லிட்டாலும், எங்களுக்கு கலக்கந்தான். அதிலும் விக்ரம் ஆடிட்டான். அவன்தானே உன்னை வலிய கூட்டிட்டுக் கிளம்பினது? உன்னைப் பார்த்ததோடு அவனைத் தேற்றவும் பாடுபட்டோம்... போ."

இவளது ஈரக் கூந்தலைத் துடைத்து கோதிவிட்டபடியே அவர் பேச, இவளுக்கு நடப்பதெல்லாம் நனவுதானா என்ற சந்தேகம்! சற்று நேரத்தில் தணல் கரண்டியோடு வந்த சமையல்கார வேணி, சாம்பிராணி புகை காட்டி இவளது கூந்தலை ஆற்றினாள்.

அடர்ந்த கருங்கூந்தல் வழியே புகை எழும்பி வாசனையாய் படர, இவளுள் ஒரு சுக கிறக்கம். ஒரு வாரத்துக்கு முன்பு, நனைந்த கோழியாய் வந்து இறங்கிய தான் இப்போது வெகு இயல்பாய் இங்கு பொருந்தி இருப்பதை நம்ப முடியவில்லை. இதில் அப்பா வேறு உற்சாகமாய் பேசிவிட்டுப் போகிறார்.

"ஹா... இப்பதாம்மா பழைய களையாய், இல்ல புதுக் களையோடு இருக்கிறேம்மா வர்ஷி. இந்த ஊருக்கு வந்ததும் அஞ்சு, பத்து வயசு குறைஞ்சிடுச்சு."

"அப்ப எனக்கு வயது பதினெட்டா, பதிமூணா?"

"சேலையெல்லாம் கட்டிட்டு இருக்கியா... ஆக பதினெட்டுதான்." விக்ரம் சொன்னான்.

அப்பாவும் அவள் கண்ணுக்கு இளமையாகி இருந்தார்தான்.

"உங்க பேச்சைக் கேட்டு இருக்கணும்ப்பா... நான் வந்து சிக்கியதோடு உங்களையும் பதறியபடி வரவைத்து..."

"எல்லாம் ஒரு அனுபவம்தானேம்மா! அங்கே ஆணாட்டம் வேலை வேலைன்னு ஓடிய நீ, இங்கே அழகிய பெண்ணாய் தெரியறதுல எனக்குத் திருப்திதான்."

"அது இந்தச் சேலையால... விக்ரமின் அக்காவினுடையது இது."



"ம்... வத்சலாவும் துடுக்கான பொண்ணுதான். ஆனா, இப்போ வாழ்க்கையில் முதலிடம் தன் புருஷன்- பிள்ளைகளுக்குன்னு புரிஞ்சு, கனிஞ்சு வந்திருக்குது."

"ஆணுக்குப் பெண் அத்தனை அவசியம் இல்லையாப்பா?"

"அவன் வாழ்வின் அச்சாணியே அவதானே? உங்க அம்மா உன்னை எனக்கு தந்துட்டுப் போனதால நான் பிழைச்சேன். பெண் பிள்ளை நீ ஒரு தாய்போல என்னைக் கவனிச்சுக்கிட்டியே? 'ராணி' அல்லி கேள்வி-பதில் பகுதியில் வாசிச்சேன்...

'பெண், வாழ்க்கை வாகனத்தின் பின் சக்கரமா, முன் சக்கரமா?' என்பது கேள்வி.

பதில் வருது- 'சக்கரமில்லை... சக்கரத்தின் காற்று!' ன்னு. அந்த சக்தி இல்லாம எதுவும் இல்லை."

அப்பாவின் நெகிழ்ச்சியில் மகளும் உருகினாள்.

"அழகிய பெண்ணும், அவளது காதலும்தான் இன்று வரை உலகத்தைக் காப்பாற்றி வருகின்றன' என்று ஞானியே ஒத்துக்கலை?"

"எந்த ஞானிப்பா அது? விக்ரம் என்கிற ஞானி சொன்னாரா?"

வாய்விட்டுச் சிரித்தார் அப்பா.

"விக்ரம் புத்திசாலிதான்ம்மா. ஆனா, இதைச் சொன்னது... சாக்ரடீஸ்! இந்தக் காலத்தில் புத்தின்னா வெறித்தனமாய் உழைத்துப் பணம் சம்பாதிக்கறதுன்னு நினைக்கிறாங்க. சென்னையில் உள்ள தன் வேலையைவிட்டு இங்குள்ள தேவைக்காய் ஓடி வந்திருக்காரே, அந்த மனிதாபிமானத்தை நாம மெச்சணும்."

கட்டிலில் சாய்ந்திருந்தவள் எழுந்து, தகப்பனின் தோளைப் பற்றினாள்.

"இங்கே என்னப்பா நடக்குது? மரத்தின் தேனடை போல நிறைய ரகசியங்கள் தேங்கி இருக்கிறது புரியுது. ஆனால், என்னன்னு முழுசாய் தெரியவுமில்லை. இடையே மயக்கத்தில் நாலு நாள் போச்சு..."

"தேடப்படுவதுதான் கிடைக்கும் என்பாங்க. ஆக, நாம மகிழ்ச்சியை மட்டும் தேடுவோமே! உன் வியாபாரத்துக்கான நல்ல நிலம் தேடி வந்தே. ஒரு அருமையான குடும்பத்தைக் கண்டுகிட்டே. பரிமளம்மாவுக்கும் உம் மேல ரொம்ப பாசம். வச்சலாவின் பிள்ளைகள் உன்னைப் பற்றி நிறைய பேசுதுங்க."

"வத்சலாவை நான் இன்னும் சந்திக்கலை."

"அவர் கோவை விமான நிலையம் வந்துட்டாராம். புருஷனும், மனைவியும் போனில் விடாமப் பேச, பிள்ளைகளுக்கு அவங்க அம்மாவைவிட்டு நகர மனசில்லை. இப்ப நான் குறிப்பிட்ட இயந்திர

ஓட்டத்தில் அந்தக் குடும்பமும் சிக்கி இருந்தது. காற்று இ சக்கரம் எப்படி உருளும்? சக்கரத்தில் அடைபடாத காற்று இ எங்கேயோ அலைய, அப்படி ஆகிட்ட குடும்பம் இப்போ பூரண பார்க்க நிறைவாய் இருக்கும்மா" என்ற துரைராஜ், மகளின் கேசத்தை நீவினார்.

"உனக்கும் இதுபோல ஒரு நல்ல வாழ்வு அமையணும் வர்ஷி

அதற்குள் இருவருக்குமாய் சூடான சூப் வர... வர்ஷி, "இவங்களுக்கு சிரமமப்பா. அழையா விருந்தாளியாய் வந்ததுமில்ல படுத்து நிறைய வேலை வேற வாங்கறேன்." சங்கடப்பட்டாள்.

"இதெல்லாம் உன் கையில் இல்லையேம்மா. தன் ஆட்டத்தில் திட்டத்துடன் கடவுள் நகர்த்தும் காய்கள் நாம். இதை நம்பினவர் நடப்பது எப்படியோ... ஆனால் நிச்சயம் முடிவு நன்மைதான்."

அது அவளுக்குத் தெம்பு தர, புன்னகைத்தாள்.

## 15

"கடவுள்தான் தக்க நேரத்தில் உன்னை இங்கே கொண்டு வ சேர்த்தார், வர்ஷி. இல்லைன்னா எங்க அம்மா திண்டாடி இருப்பா கலகலவென்று பேசியவளை ஆர்வமாய் சந்தித்தாள் இவள்.

உயரமும், உடல்வாகும், புத்திசாலித்தனமான முகமுமாய் வத்ச பக்கா பட்டணத்துப் பெண்.

"பெருசாய் ஏதும் செய்திடலைங்க. அப்படியே முதல் மூணு செய்த சின்ன உதவிக்கு பல மடங்கான உபகாரத்தை இப்ப உங்களி இருந்து பிடுங்கிட்டேனே?"

"இல்லை வர்ஷி. அதனால்தானே உன் அப்பாவையும் நாங்க சந்தி முடிந்தது?"

சாப்பாட்டு மேசையில் எல்லோருமாய் உணவுக்கு அமர்ந்திரு பேச்சும் சரளமாய் உருண்டது.

"என் பிள்ளைங்க ரெண்டும் இப்போ அதி சமர்த்து. வீட்டை சுத்தமாய் வைக்க உதவுறாங்க. இன்னும் பல நல்ல பழக்கங்க கத்துக்கிட்டாங்க."

மனைவியின் பேச்சை கண்களில் பிரியம் வழிய பக்கத்தில் இரு பார்த்துக்கொண்டிருந்தார் அரவிந்தன், வத்சலாவின் கணவர். த



பாவின் மடியில் அமர்ந்திருந்த ராகுல், அவரது குறுந்தாடியைத் வியபடி சமர்த்தாய் சாப்பிட்டான்.

நல்லவேளை... இந்த அருமையான குடும்பம் ஆளுக்கொரு சக்குப் போகாமல் இணைந்துவிட்டது.

ஒரு நாள் இரவு. புது விருந்தாளியாய் வர்ஷி வந்து நிற்க, நான் ங்கச்சுட்டேன். ஆனா, இருந்த குழப்பத்தை ஓரளவு சரியாக்கியது வதான்."

சொன்ன பரிமளம்மா– "மெலிஞ்சுட்டேம்மா. காரட் அல்வா ஒரு ண்டி போடவா?" பரிந்தார்.

சுவையான புலவு, வறுவல், இனிப்பு என்று இருந்த உணவு வர்ஷிக்கு க்கவில்லை.

"சேலையில் அட்டகாசமா இருக்கறே நீ!"– வத்சலா ராட்டினாள்.

"மன்னிக்கணும், உங்க சேலையில் உங்களைச் சந்திப்பது..."

"எத்தனை தடவைதான் இதையே சொல்லுவே? இரவல் சேலையைச் ற்றிக்க பலர் தயங்குவாங்க. நீ கவுரவம் பார்க்காமல் கட்டிக்கிட்டது ங்களுக்குக் கவுரவம். நீலமும், பச்சையுமாய் மயில் போல இருக்கே."

இவள் அருகே உட்கார்ந்திருந்த சின்ன ரம்யா குறுக்கிட்டாள்.

"நாங்க 'ஆன்ட்டி'யோட மத்த உடைகளை எல்லாம் ஒளிச்சு ச்சுட்டோமே!"

"நல்ல காரியம்"– என்றபடி அக்கா மகளை தன் மடியில் ரக்கிக்கொண்ட விக்ரமை இவள் கண்களால் விரட்டினாள்.

"அசந்த மாதிரியே தெரியறே வர்ஷி. நீ போய்த் தூங்கு. இப்ப மணி ன்பதைத் தாண்டியிருச்சே! தவிர, முழுக்க உன்னில் இருந்து விஷத்தை க்கும் அந்த மருந்து ரொம்ப தூங்கத்தை தரும்னு சொன்னார் டாக்டர். நான் ஏதேனும் புத்தகம் எடுத்து வாசிக்கறேன்" என்று அப்பா எழும்ப, வளும் எழுந்தாள்.

முதலில் தங்கின அறைக்கே வர்ஷி மாறி இருந்தாள்.

"எல்லாரும் உன்னை சிறப்பாக கவனிக்க வசதின்னுதான் இந்த முன் அறைக்கு மாற்றினோம். இனி இதில் அப்பா தங்கிக்கட்டுமே! கொஞ்ச நேரம் கழித்து, குடிப்பதற்காக பால் அனுப்பறேன்" என்றார் மூத்தவர்.

"இல்லைம்மா... வேணும்னால் நானே எடுத்தக்கறேன். உங்க மக குடும்பம் வந்திருக்கிற வேளை, இது."

"நீ வந்த நல்ல நேரம்தான் எல்லாருமாய் ஒண்ணு சேர்ந்தாங்கன்னு நான் நினைக்கிறேன். விக்ரம் அதிகம் பேசவே இல்லை கவனிச்சியா?"

தன்னாலதான் உனக்கு இந்த நிலைமைன்னு கவலைப்படுறான்

"இப்பதான் அவரைப் பார்த்தேன்."

"ஒரே அலைச்சல் அவனுக்கு. நீ மூணு நாளாய் கண் வி கவலை வேற..."

"சரி... நானும், அப்பாவும் நாளைக்குக் கிளம்பலாம்னு..."

"அந்தப் பேச்சுக்கே இப்ப இடம் கிடையாது. உன் உடம்பு மு தேறட்டும். தவிர, நீ இங்க இருக்கறது எங்களுக்கு சந்தோஷ உனக்குத் தெரியாதா என்ன?"

பரிமளம்மா இவளது கன்னத்தை வருட, குழந்தைகளும் ஓடி அவளின் கழுத்தைக் கட்டிக்கொண்டனர். வத்சலா முக புன்னகை.

"இதென்ன ராணி தேனீ மாதிரி, உன்னை எல்லாரும் இ சூழ்ந்துட்டாங்க?"

"நாங்க 'ஆன்ட்டி'கூட விளையாடப் போறோம்."

"அதெல்லாம் ரெண்டு நாள் ஆன பிறகு..."

பிள்ளைகளை இழுத்தபடி பெரியவர்கள் கிளம்பினர்.

தனக்காக வந்த பாலை பருகிய வர்ஷியின் மனமும் நி இருந்தது.

குடும்பம் எனும்அமைப்பு எத்தனை அர்த்தமும், அழகுமான ஒருவரை மற்றவர் பராமரிப்பதும், பாசம் காட்டுவதுமாய்! தன ஏதோ ஆகிவிட்டது என பயந்து ஓடி வந்துவிட்ட அப்பாவைப் பா வேண்டும் போலத் தோன்றியது அவளுக்கு. எழுந்து தன் அறைக் கத அவள் திறந்த நேரம் மின்சாரம் தடைபட்டது.

முழு வேகத்தில் கவிழ்ந்த இருட்டைத் துழாவி, மறுபடி அறை தடுமாற்றத்துடன் திரும்பினாள். இரு மெழுகுவர்த்திகளோடு தீப்பெட் இருந்த குறுமேசையைத் தேடி, வெளிச்சம் ஏற்றிவிட்டு நிமிர, எதி கண்ணாடியில் தெரிந்தது இவளது பிம்பம்.

'மங்கிய ஒளியிலும் மினுமினுவென தேவ கன்னிகை போ தெரிவது தான்தானா?'

லயித்து நின்றவளைச் சுண்டியது, கதவின் தட்டல்.

"வரலாம்... கதவு திறந்து இருக்குப்பா."

ஆனால், வந்தது விக்ரம். சன்ன மஞ்சள் ஒளியில் ஒரு பெ சுடர் போல நின்றவளை விழி எடுக்காமல் பார்த்தவன், அவ நெருங்கினான். மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகமாய் இவளும் அசைவி நின்றாள்.



ண்ணாடிக்கு உள்ளும், வெளியேயுமாய் இரு பெண்கள் எதிரே தான மாய மயக்கத்தில் அவன் ஏதும் பேசவில்லை. மவுனம் அந்தச் லை மேலும் மோகனமாக்கியது. திறந்த கதவின் வழியே நுழைந்த று, ஒளிர்ந்த சுடர்களைச் சீண்டி படபடக்கச் செய்தது. சுடரில் மாய் கனிந்திருந்தாள் வர்ஷி.

அக்கினி தேவனுக்கு பெண்கள் மீது தனி பிரியம்ங்கறது சரிதான்"– ட்டையாய் சொன்னான் விக்ரம்.

இதென்ன உளறல்?'– என்றே தோன்றினாலும், இவள் கேட்டாள். "என்ன சொல்றீங்க?"

நீங்க வந்த விஷயம் என்ன?' என்று கேட்காமல், இப்படிக் கேட்பது ரவசியம் என்று அவளுக்குப்பட்டாலும் அது பிடித்திருந்தது.

"பாரதத்தில் ஒரு கதை உண்டு. அக்காலத்தில் தவ முனிவர்கள் ழைத்தபோது மட்டுமே அக்கினி தேவன் பூமிக்கு வருவாராம். முறை வசிஷ்டரோடு மற்ற முனிவர்கள் தங்கள் யாகத்துக்கு க்கினியைக் கூப்பிட, வந்தவர் யாகத்தில் பங்கு பெற்றுத் திரும்பும் தியில் ஒரு தடாகத்தில் ரிஷி பத்தினிகள் குளிப்பதைக் கண்டு ங்கிவிட்டாராம்."

'இந்த நேரத்தில் சொல்ல வேண்டிய கதையா, இது?' என்பதையாய் கம் திருப்பிக்கொண்டாள். இயல்பாய் அவனைப் பார்க்க முடியாத ச்சம்.

ஆனால், அவன் கதையைத் தொடர்ந்தான்.

"ரிஷி பத்தினிகளை நெருங்குவது சுலபமே இல்லை.கற்புக்கரசிகள் விர முனிவர்கள் சபித்துவிடவும் கூடும். இந்த அழகிய பெண்களைத் னமும் அருகில் இருந்து கண்டு ரசிக்க ஒரே வழி, அவர்கள் மைக்கும்போது, அடுப்பினுள் தான் இருந்து கொள்வதுதான் என்று வு எடுத்தாராம் அக்கினி. அதனால்தான் பெண்கள் சமைக்கும் ணவுக்குத் தனி சுவை. இப்பவும் இதுவே சுடர் ஒளியில ஒரு ஆண் த்தனை ரம்மியமாய் தெரியக்கூடுமா?"

"மங்கலான வெளிச்சத்தில் குறைகள் மழுங்கிவிடுவதால்கூட கூடுதல் அழகாக தெரியலாம்."

"ஆண் மங்கலாயத் தெரிவானே தவிர, மோகனமாய் அல்ல."

"சரி, நான் தூங்கணும்..."

அவனை வெளியேற்றுவதற்காய் சொல்ல, அவன் தயக்கமாய் நின்றான்.

'இந்த நேரத்தில் அவன் ஏன் இங்கு வரவேண்டும் என்பதைக்கூட கேட்காதது தப்புதான். ஆனால், மின்சாரம் தடைபட்ட இந்நேரம்

இங்கே இருப்பது அதைவிட தப்பாயிற்றே? தவிர, அவனது ரசனை வேறு தன்னைப் படபடப்பு ஆக்கிவிட்டதே.'

அந்நேரம் மின் விளக்குகள் உயிர் பெற,

"நிறைய வேலைகள் வர்ஷி. உன் மயக்கம் தெளிந்த பிறகு பார்த்து பேச முடியலை. மன்னிப்பும் கேட்க வாய்க்கலை. என்னோடு வந்ததால்தானே இந்த நிலை..."

"அது உங்க தப்பே இல்லை."

"இன்னும் உன் கேள்விகளுக்குப் பதில் கிடைக்கலை, இல்லையா?"

இதுவரை தன் சந்தேகங்கள் தீரும் சந்தர்ப்பம் அமையும்போதெல்லாம் ஏதேனும் இடையூறு நேரும். இப்போது இங்கு புதைந்த பயங்கரங்கள், தன் முன் பரப்பப்பட போகின்றனவா?

அதுவரை அவளை நெருங்கி நின்ற உறக்கம் சட்டென விலகியது.

"உட்காருங்க..."

இருவருக்குமாய் நாற்காலிகளை இழுத்துப் போட்டவன், தணிந்த குரலில் சொல்லலானான்.

"இங்கே வசிப்பவர்கள் பெரும்பாலும் ஆதிவாசிகள். இந்தியாவில் மம்பா, பிகலி, டங்கினு என்று அவர்கள் பேசும் ஏறக்குறைய நூறு மொழிகள் இப்போது வழக்கில் இல்லை. இப்போது இருக்கும் 8 கோடியே 40 லட்சம் ஆதிவாசிகள் இந்திய மக்கள் தொகையில் 8.2 சதவிகிதம்."

முழு விழிப்புடன் கேட்டிருந்தாள்.

அவர்களின் பெரிய நிழல்களும்கூட அசைவற்று... கவனத்துடன்!

"இந்த மக்களுக்கு இயற்கை ஒரு வணிகப் பொருள் அல்ல- அவர்களது வீடு, அவங்களுக்கான வாழ்க்கை."

ஆமோதிப்பாய் தலை அசைத்தாள் வர்ஷி.

"குறுக்கு வழியில் பணம் சேர்க்க எண்ணுபவர்கள், இங்குள்ள இயற்கை வளங்களைச் சுரண்டினாங்க. அது போதாது என்பது போல இப்போ இவர்களின் உயிரையும் துச்சமாக்கிட்டாங்க. வளர்ந்த நாடுகளுக்கும் அதே அலட்சியப் போக்கு. தன் முன்னேற்றத்துக்கு, விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்கு இந்த எளியவர்களை பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற மனப்பாங்கு.

தான் இதுவரைத் தேடிய ரகசியத்தின் கதவு எதிரே அவன், தன்னைக் கூட்டி வந்து நிறுத்திவிட்டது புரிந்தது. சில்லிட்ட கைகளைக் கோர்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.

"ஒரு புது மருந்து விற்பனைக்கு வர, மூவாயிரத்து அறுநூறு கோடி



ரை செலவாகும். அதில் சற்று சிக்கலான விஷயம், அந்த மருந்தால் ற்படும் பாதிப்பை அறிவது... அதை மனிதர்கள் மீது பயன்படுத்தித்தான் அறியணும்- அதாவது பரிசோதனை எலிகள் போல...

வளர்ந்த நாடுகளில் இதற்குக் கடும் சட்ட திட்டங்கள் உண்டு. பாதுகாப்புக்கான செலவு அதிகம். ஆனால், மூன்றாம் உலக நாடுகளில் இதே பரிசோதனையை மேற்கொள்ள அறுபது சவிகித செலவு குறைவு."

இருட்டினுள் இறுகிக் கிடந்த ரகசியக் கதவு- ஒரு பயங்கர முனங்கலுடன் திறக்க ஆரம்பித்திருக்க- திகிலில் கட்டுண்டிருந்தாள் வர்ஷி!

## 16

வெளியே ரம்யாவின் குரல் கேட்டது.

"ஆன்டிகிட்ட போகணும்" என்ற ராகுலின் அடமும்கூட. ஆனால், இவளுக்கு எழும்ப கால் வரவில்லை.

பிரச்சினையின் பிரமாண்டம் இவளை அமுக்கி இருந்தது. எழுந்து போனவன், குழந்தைகளை எப்படியோ சமாதானம் செய்துவிட்டு மீண்டும் வந்து உட்கார்ந்தான்.

இம்முறையேனும் விவரங்களை முழுமையாய் அறிந்துகொள்ளும் பதைப்பில் அசையாது இருந்தாள் இவள்.

"இந்தியாவின் இப்படியான மலைக் கிராமங்கள்- அங்குள்ள மக்களின் ஏழ்மை, அறியாமை, நாட்டின் வளையக்கூடிய சட்ட விதிகள், அரசாங்கம் போதிய கண்காணிப்பு செய்யாதது...எல்லாமுமே வெளிநாட்டு மருந்து நிறுவனங்களுக்கு வசதியாப் போனது.

ம்... எல்லாவற்றையும் சட்டத்தால் ஒழுங்குபடுத்திட முடியாது. அப்படி முடியுமெனில் உலகில் குற்றமே இருக்காதே. நேர்மை ஒரு நெறிமுறையாய், வாழ்வின் நடைமுறையாய் இருக்கும் சமூகமே நாகரீகமானது.

உதாரணத்துக்கு நேரம் தவறினால் சில நிறுவனங்களில் அபராதத் தொகை, மற்ற இடங்களில் ஒரு அலட்சிய மன்னிப்பு கோரல் அல்லது அதுவுமில்லை. அதனால் பிறருக்கு ஏற்படும் பாதிப்பு புரிவது முக்கியம். ஆனால், தங்களை அதிநாகரீகர்களாய் காட்டும் வெளிநாட்டினருக்கு தங்கள் உடலும், உயிரும் வெல்லக்கட்டி. பின்தங்கிய நாடுகளில்

உள்ளவர்கள் எல்லாம் துச்சம். குழந்தைகள் என்றும்கூட பாராமல்... இங்கு வேலை பார்த்த சிறு பெண்ணும்கூட... நல்ல வேளை சரியான தருணம் அவளை ஆபத்தில் இருந்து மீட்டுட்டோம்."

"ரெங்குவின் குழந்தை...?"

தலை அசைத்தான். "அதுவும் இந்த சோதனைக்குப் பலியானதுதான்! போன வருஷம் நம் நாட்டில் மனிதர்களை பயன்படுத்தி நடந்த மருத்துவப் பரிசோதனைகளில் ஆறு சதவிகிதம் பேர் இறந்துட்டாங்க. அதில் எட்டு பேருக்கு மட்டுமே இழப்பீட்டுத் தொகை கிடைச்சது. இது வருஷா வருஷம் கூடுது.

"இவ்வளவு பெரிய குற்றத்தைச் செய்பவர்கள் எப்படி தப்புகிறார்கள்?"

"இங்கே மாநிலத்துக்கு மாநிலம் சோதனை விதிகள் மாறுவதால், நிறுவனங்கள் தப்பிவிடுகின்றன. வருண், என் சித்தப்பா மகன்றது உனக்குத் தெரிய வந்திருக்கும்."

"ஆனா... அவரை நான் இன்னும் பார்க்கலை"

"பரம்பரைச் சொத்தில் தனக்குப் பங்கு வேணும்னு கேட்டவன், இப்போது அதை உங்களுக்கு விற்கும் முயற்சியில்..."

"ம்... அதனால்தானே நான் இங்கே வந்தேன்."

"பூர்வீக நிலத்தில் அத்தனை வாஞ்சை உள்ளவன் போலக் காட்டிக்கொண்டவன் செய்த காரியம், மன்னிக்க முடியாத கொடுமை."

அவன் விழிகள் தரையை வெறித்தன.

"என்னை இங்கே வரழைச்சது போல, வெளிநாட்டு மருத்துவ நிறுவனத்தாரையும் வரவழைச்சது வருண்! அப்படித்தானே?"

சொன்னவளது உதடுகள் உலர்ந்திருந்தன.

"ம்... இப்போ உலக அளவில் பரவலான நோய், கருப்பை வாய் புற்று. அதற்கான மருந்தைக் கண்டுபிடிப்பதில் மும்முரமாய் இருப்பவர்களை வருண் இந்தப் பக்கமாய் கை காட்டிவிட, அவங்க வந்து சில பரிசுப் பொருட்களோடு சிறுமிகளுக்கான சத்து மாத்திரையை இலவசமாய் விநியோகம் பண்ணி இருக்காங்க..."

"உலகில் இலவசம் என்று எதுவுமே இல்லை, எல்லாவற்றுக்குமே மறைமுகமான ஒரு விலை உண்டு என்பதை நாம புரிஞ்சிக்கணும்."

"ஆந்திராவிலும், இங்கேயுமாய் ஏறக்குறைய 14 ஆயிரம் சிறுமிகளை இப்பரிசோதனையில் ஈடுபடுத்தியதாக இப்போ தகவல் வருது.

"கடவுளே..." கன்னத்தில் பதித்த அவளது விரல்கள் நடுங்கின. திறந்த



ரகசியத்தின் கதவு வழியே இவளே பார்த்து இப்போது சில விஷயங்களைப் புரிந்துகொள்ள முடிந்தது. அதனால்தான் தன்னை அத்தனை சந்தேகித்து இருக்கிறார்கள். கல்லெறிந்து கொல்ல நினைத்த அப்பாவு என்ற அந்த ஏழைக் கிழவரின் ஆத்திரம் நியாயமாய்பட்டது.

"பாவம், ரெங்குவின் குழந்தைக்கு ரெண்டே வயசு. அதையுமா மருந்தால் கருக்கிட்டாங்க?"

"அப்பாவு பறிகொடுத்த பேத்தியின் மகளுக்கு, ஒரு வயசுதான் வர்ஷி."

இவளுக்கு நெஞ்சு வலித்தது. பால் குடிக்கும் மழலைகளுக்குக் கடும் நோய்க்கான பரிசோதனை மாத்திரையைத் தருவது அயோக்கியத்தனம் அல்லவா?

"இந்தியா உள்பட பல மூன்றாம் உலக நாடுகளிலுள்ள குழந்தைகள் மீதும் மருத்துவப் பரிசோதனை நடத்த அனுமதி அளித்துள்ளது அமெரிக்க அரசு. இதில் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் ஆர்வம்."

"அவர்களின் பரிசோதனை எலிகளாய் நாம்? ச்சே..."

"இந்த அக்கிரமத்தை முதலில் கண்டுபிடித்தது செல்லாதான். சத்து மாத்திரை தரப்பட்ட குழந்தைகள் சீர்குலைய, அதைத் தடுத்து எனக்கும் தகவல் தர, உடனே இங்கு வந்தேன். பெண் குழந்தைகள் சம்பந்தப்பட்ட விவரம் என கூடவே அம்மாவையும் அழைத்து வந்தேன். காவல்துறைக்கு தகவல் தந்தாலும், ஆதாரங்களைக் காட்டணுமே..."

"கிடைச்சுதா ஆதாரங்கள்?"

"இங்குள்ள மக்கள் பொய் சொல்றதில்லை. தவிர, வெளிநாட்டுப் பரிசுப் பொருட்கள் அவர்களிடம் இருந்தன. ரெங்கு வீட்டுக்கு நாம போய் திரும்பும்போது அவர்கள் தந்த மருந்து அட்டைத்தாள், பெட்டியை எடுத்துக்கிட்டேன். போலீசுக்கு அனுப்பினேன்."

தான் அன்று காலில் கடிபட்டு நின்ற நேரம், விக்ரம் தனது பாக்கெட்டினுள் எதையோ வைத்தபடி வந்தது தெளிவாய் அவளுக்கு நினைவில் இருந்தது.

"வந்த மறுநாள் இந்த மலைக் கிராமத்தில் அடைபட்டு எப்படி ஒரு வாரம் கிடக்க முடியும்னு நினைச்சேன். ஆனால், இங்கே கற்பனைக்கும் மிஞ்சிய பயங்கரங்கள் நடந்திருக்குது. நான் வந்த முத்தையாவின் வேனில்கூட– ஏதோ சரக்கு ஏற்றி வந்ததாய் சொன்னான். அதையும் விசாரிச்சோம். இவர்களது உயிரை விலை பேசும் 'இலவசங்கள்'தான் அதில் அனுப்பப்பட்டு இருக்கின்றன. அதுவரை என்ன ஏதுன்னு கவனிக்காமல் விட்டது என் தப்புதான்..."

"இதற்கெல்லாம் நீங்க பொறுப்பாக முடியாது விக்ரம். இந்த மக்கள்

தெளிவாய் இருந்திருக்கணும். அப்படி விசாரிக்க வந்த உள்நாட்டு பிரதிநிதி போல நான் இருந்ததால்தான், ரெங்குவும் என்னிடம் அப்படி சீறி இருக்கா. பாவம்... இதை எல்லாம் எனக்கு முதலிலேயே சொல்லி இருந்தால், நான் தனியே வெளியே போயிருக்க மாட்டேன். புரிஞ்சு நடந்திருப்பேன்."

ஆனால், பதிலாய் முறுவலித்தவனின் கண்களில் சங்கோஜத்துடன் சீண்டலும் தெரிந்தது.

"அதெப்படி? நாங்களும் உன்னை சந்தேகித்தோமே? நீ தந்த தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு உன் அப்பாவோடும், முகேஷ் மித்தலுடனும் பேசின பிறகே- இதற்கு சம்பந்தப்படாத புது ஏமாளி வர்ஷின்றது புரிஞ்சது!"

"அறியாமை ஆபத்தானதுதான். இவர்களுக்குக் கல்வி அவசியம். அரசாங்க பள்ளிக்கூடம் ஏதும்...?"

"பல ஆண்டுகளுக்கு முன்னே அரசு கட்டின பள்ளிக்கூடம் இப்ப சிதிலமாயிடுச்சு. ஆசிரியர்கள் யாரும் வர்றதில்லை. மாற்றல் அல்லது நீண்ட விடுப்பு போட்டுடுறது. இப்போ அதை சீர்செய்து சமூக அக்கறை உள்ள ஆசிரியர்களைத் தேடுறேன். சென்னையில் உள்ள என் நண்பர்களும் முயற்சி செய்வதால், அது சாத்தியம்தான் என்கிற நம்பிக்கை வந்திருக்குது."

"வெறும் தேன், பழம்னு விற்று காலம் தள்ள முடியாது. கல்வியோடு தொழிலும் அமைத்துத் தரணும்."

"அதான் உன் 'ரிஸார்ட்' இங்கே வந்தால் நல்லதுன்றே?"

அவன் முறுவலிக்க, இவள் மறுத்தாள்.

"இல்ல... அப்படி யோசிச்சு பேசலை. ஆனால், அப்படியொரு களம் அமைந்தால், இந்த கிராமம் நிச்சயம் முன்னேறும். அதை எங்களுக்கு நீங்க தரலைன்னாலும், வேறு தரமான நிறுவனத்தை இங்கே அனுமதிக்கணும்."

"யோசிக்கிறேன் வர்ஷி."

"போலிஸ் வந்திருக்குதே?"

"விசாரணைக்குத்தான். சிலர் வீட்டில் இன்னும் மீதமிருந்த மருந்துகளைக் கைப்பற்றி இருக்கிறார்கள். இங்கு வந்தது யார்? என்னென்ன இலவசங்களை கொடுத்து இருக்கிறாங்க? என்பது போன்ற கேள்விகள் கேட்டுக்கிட்டு இருக்கிறாங்க.

வரும்போதே நான் இரண்டு டாக்டர்களுடன்தான் வந்தேன். நீ பத்திரிகையைச் சேர்ந்தவளோன்ற சந்தேகம் வேறு! வெளியே செய்தி வந்தால், அந்த மருந்து நிறுவனங்கள் உஷாராயிடும். தீர விசாரித்து, வேறு எந்த கிராமங்களில் இதே கொடுமை நடந்திருக்குன்னு அறிந்து, பாதுகாப்புத் தருவது கெட்டுடும்."



"இங்கே இவ்வளவு களேபரமாக இருக்க... நாங்க அன்னைக்கு பலகாரம், கோலம், விளக்குன்னு கோலாகலமாய் இருந்ததைப் பார்த்ததில் உங்களுக்கு ஆத்திரம் வந்தது நியாயம்னு இப்ப புரியுது விக்ரம். என் மேலுள்ள சந்தேகத்தில் எதையும் முழுக்க விளக்க முடியாமல், அலட்சியப்படுத்தவும் முடியாத தவிப்பு... ஆனா அப்போ எனக்கு உங்க மேல... கோபம்தான்."

"நீ இதில் சம்பந்தப்படாதவள் என்பது முழுக்க நிருபணம் ஆகும் வரை, உன்னை அனுப்பத் தயாரில்லை நான்."

"சாலையில் மரம் விழுந்ததெல்லாம் நிஜந்தானா, பொய்யா?"

அவனைப் போலவே கண்ணில் கேலி ததும்பக் கேட்டாள்.

"அது உண்மைதான். ஆனால், அவசரம்னால் போக முடியாது என்பதில்லை" என்று குறுஞ்சிரிப்புடன் வந்தது பதில்!

"எப்பதான் நான் கிளம்பறது?"

"உனக்கு விஷக்கடி இருக்கு... இன்னும் மூணு நாள் டாக்டரின் மருந்தோடு, செல்லா தந்த கஷாயத்தையும் குடிச்சிடு. கொஞ்சம் மயக்கமா இருந்தாலும், உடம்பில் மிச்சமிருக்கும் விஷம் வெளியேறிடும். பிறகு, உங்களுக்கான பயண ஏற்பாடுகளைச் செய்றேன். இப்ப மருந்து எடுத்துக்கிட்டியா?"

"இதோ..." என்றவள் அதைச் செய்தாள். பின் மீண்டும் தன் பேச்சைத் தொடர்ந்தாள். "இத்தனையையும் கேட்ட பிறகு எனக்கு தூக்கம் வருமான்னு தெரியலை. ஏதோ ஒரு மாய உலகில் இருப்பது போல இருக்குது."

"எனக்கும்தான்"- என்றவன் முகத்தில் வித்தியாசமான ஒரு புன்னகை.

# 17

**சொ**ன்னது போல தூங்குவது சுலபமாக இல்லை. இதுவரை கேள்விகளோடு மறுகினாள். இப்போதோ கிடைத்த விடைகள் அவளை மருட்டின... உருட்டின.

'முதலில் தன்னை இவர்கள் சந்தேகப்பட்டதில் குற்றம் சொல்வதற்கில்லை. இங்கேயே மடக்கி வைத்ததுமே நியாயம்தான்.

இந்த கோரங்களைக் கேள்விப்பட்ட வத்சலா, தன் குழந்தைகளிடம் ஓடி வந்தது வேண்டுமானால், இதனால் விளைந்த ஒரு மறைமுக நன்மை எனலாம்...

நாகரீக நாடுகளில் எத்தனை அநாகரீகமும், அநியாயமும் நடந்திருக்கின்றன. அது தெரியாமல் விக்ரமை தான் 'திண்ணக்கம் பிடித்தவன்' என்று கணித்துவிட்டேனே!'– சற்று வருத்தத்துடன் நினைத்துக்கொண்டாள்.

குழந்தையைப் பறிகொடுத்த ரெங்குவும், அப்பாவு கிழவரின் வெறியும் சிந்தையை அலைக்கழித்தன.

ரகசியங்களைப் பதுக்கி வைத்திருந்த கதவு திறந்திருந்தது. அதே போல தனக்குள் ரகசியமாய் முளைத்திருந்த வேறு ஒரு கதவும் திறக்க முயற்சித்தது. அது புரிந்தும் புரியாத நிலையில் உறங்க முயற்சித்தாள் அவள்... சில நிமிடங்களா அல்லது சில மணி நேரமா?

யாரோ அவளைக் கூப்பிட்டார்கள்.

"வர்ஷி..."

கனத்த இமைகளைப் பிரித்தாள். அரை மயக்க நிலையில் புத்தி தடுமாறியது.

யாருடைய குரல் அது... அப்பாவா?

"யாரு...?"

"வர்ஷி... இங்கே கொஞ்சம் வா."

குரல் பரிச்சயம் இல்லாதது. ஆனால், பெயர் தன்னுடையது என்பதால் மெள்ள எழுந்தாள்.

அறைக் கதவைத் திறந்தவள், அப்பாவின் அறைக்குள் பார்த்தாள். ஜன்னல் வழியே புகுந்த நிலவின் வெளிச்சத்தில் படுக்கை காலி என்பது தெரிந்தது. 'நள்ளிரவு தாண்டியும் அப்பா ஏன் படுக்கவில்லை? அவர்தான் வெளியே போய் நின்று தன்னைக் கூப்பிடுகிறாரோ?'– தெளிவாய் யோசிக்க முயன்றவள், வெளி வாசல் கதவைத் திறந்தாள். அங்கே யாரோ நின்றிருந்தார்கள்.

"யாரு?"

'வா' என்பதாய் சைகை செய்தது அந்த உருவம்! இவள் அதை நெருங்குவதற்காக நடக்க ஆரம்பித்ததும், சற்று தொலைவு போய் இவள் புறமாய் திரும்பியது. அது, இவளுக்கு அறிமுகமே அற்ற ஒருவன்!

★★★

அந்த காவல்துறை வாகனம் மலைப் பகுதியில் வளைந்தும், குலுங்கியும் ஏறிக்கொண்டிருந்தது. அதில் இருந்த அதிகாரியும்,



காவலரும் தூங்கியும்... விழித்தும் பயணித்தபடி இருந்தார்கள்.

"பாடாதிவதி ரோட்டுல மறுபடி ஏற வச்சுட்டாங்களே சார்..."

"இந்த அமிர்தமலை விஷயம், கமிஷனர் வரைக்கும் போயிருச்சு. நம்மை நம்பி விசாரிக்க அனுப்பி இருக்காங்க, வீணா புலம்பாதே."

"அதான் வந்து எல்லாத்தையும் குடைஞ்சு எடுத்தோமே சார்?"

"அந்தப் பெண்ணைக் காணோமாம். இது, மருந்து நிறுவனம் சம்பந்தப்பட்டதா... வேறயான்னு தெரியல."

"அந்தப் பொண்ணைப் பார்த்ததுமே நினைச்சேன் சார்."

"அதை உன்னை யாரு பார்க்கச் சொன்னா?"

"ஹி ஹி... அதில்ல சார். பொண்ணு சினிமா நட்சத்திரமாட்டம் இருந்தது. அது எப்படி இந்தக் காட்டுல கிடக்கும்னு நினைச்சேன். அதே மாதிரி ராவோட ராவா அதைக் காணோம்னு தகவல் வருது. பேரென்ன... வர்ஷியா? பட்சி தப்பிச்சுச்சு சார்."

"பொன்னம்பலம்... உளறாதே. அவளுடைய அப்பா அங்கேதான இருக்கார். தவிர, அவங்க கிளம்புவதை யாரும் தடுக்கலை. உடம்பு தேறினதும் கிளம்ப வேண்டியவ."

"டெல்லி பொண்ணு வேற, ரொம்பவே விரைப்பா நின்னுது..."

"அது விக்ரம் ராஜசேகரனின் அக்கா."

"இப்படி படிச்ச நாலு பேரு இங்கே இருந்திருந்தால், இது மாதிரியான அசம்பாவிதம் நடந்திருக்காதே. கண்ட மருந்தையும் பெண் குழந்தைகளுக்குத் தந்த கொழுப்பெடுத்தவனுக. ஆனால், இப்ப தகவல் மற்ற

"மனசாட்சி இல்லாத அயோக்கியனுக."

பகுதிகளுக்கும் போனது ஒரு ஆறுதல்."

"பச்ச குழந்தைக பிழைச்சுட்டா அது நமக்குப் புண்ணியம்தான். இந்த வர்ஷி பொண்ணு காதல் விவகாரத்துல சிக்கிருச்சுன்னு நினைக்கேன் சார்."

"நீதான் தூது போனியாக்கும்?"

"ஹி ஹி... இல்ல சார். அத்தன அழகுப் பொண்ணு இந்தப் பிரதேசத்துல வந்து கிடக்கணும்னா..."

"இன்னும் பயங்கரம் தொடருதுன்னு அர்த்தம்."

"சின்னவர் ராஜசேகரனுடைய ஒன்றுவிட்ட தம்பி இந்த மருந்து பரிசோதனை விவகாரத்துல உள்கையா இருந்திருப்பாரில்ல சார்?"

"அப்படித்தான் தெரியுது. அந்த நிறுவனத்துக்கு இந்த இடத்தைக் காட்டி இருக்கான்."

"அதுக்கு கொழுத்த கமிஷனும் அடிச்சிருப்பானுல்ல?"

"காசுக்குத்தானே அலையறானுக. விக்ரமுக்குத் தம்பிங்கற பாசம் கொஞ்சம் இருக்குது. 'இந்த அளவுக்குப் போகும்னு வருண் எதிர்பார்த்திருக்க மாட்டான் எஸ்.ஐ.சார்'ன்னு சொன்னார். ஆனால், அந்த வருண் பயல் கிடைச்சா நொங்கிடணும்."

"அவனுக்கு இதுல சம்பந்தம் இருக்குமோ சார்?"

பொன்னம்பலம் கண்களை உருட்டினார். ஜீப் குலுங்கலுக்கு ஏற்றாற்போல அவரது தொப்பையும் ஆடியது!

"இந்தச் சூழ்நிலையில... இந்த பொண்ணு வர்ஷி வேற காணாமல் போயிட்டா?"

"இதுவும் அந்த வருண் வேலையாத்தான் இருக்கும்னு நினைக்கிறேன்."

"கெட்டவன்னு ஆயிட்டா, எல்லா கெட்ட காரியத்தையும் அவந்தலையில கட்டிடறதுதானே நமக்கு வசதி?"

அவர்கள் வந்து இறங்கிய ராஜசேகரனின் வீடு அமைதியாக இருந்தது. வர்ஷியின் அப்பா நொறுங்கிப் போயிருந்தார்.

"வயசுப் பொண்ணை திடீர்னு காணலை... தானே கதவைத் திறந்துட்டு வெளியே போயிருக்காங்க. வசியம் போல ஏதோ பண்ணி வரவழைச்சி, நரபலி கொடுத்திருவாங்களோன்னு பயமா இருக்கு சார்...?"- விம்மலாய் பேசினார்.

சப்-இன்ஸ்பெக்டர் இதமாய் மறுத்தார்.

"அப்படியெல்லாம் ஆதிவாசிகள் மத்தியில் நடந்ததில்ல சார். பலபேர் நினைக்கறதுபோல இவங்க காட்டுமிராண்டிங்க கிடையாது. மேலான பண்புக்காரங்க. அடுத்தவன் உடமையை ஆக்கிரமிக்கறது, தேவைக்கு மேலே எதையும் பயன்படுத்தறது, குடும்ப வன்முறை, விபசாரம், கற்பழிப்பு எல்லாம் இங்க கேள்விப்படாத விஷயம். வீட்டு நாயைக்கூட அடிக்க மாட்டாங்க. யாரும் பிச்சை எடுக்கறதில்லை."

இதைக் கேட்டதும்தான் வர்ஷியின் அப்பா துரைராஜின் பதற்றம் சற்று குறைந்தது.

"அப்ப எம் மகள் எங்க போனா?"

★★★

"என்ன எங்க கூட்டிட்டு போற?"

சற்று குழறலாய் பேசியவளை அவனால் சுலபமாய் அழைத்துப் போக முடிந்தது.

"இங்க அரண்மனையா இருக்குது? குகைக்குத்தான் போறோம்."

ஓடை ஒன்றைக் கடந்து, மலைப் பாறைகளின் இடையே இருந்த



இடுக்கில் நுழைந்தவன்- வர்ஷியையும் தன்னோடு இழுத்துக்கொண்டான். சேர்த்து கட்டி இருந்த அவள் கைகளில் இருந்து தொங்கிய கயிறை அவள் கணுக்கால்களோடு பிணைத்தான். குகை ஈரப்பதமின்றி வெது வெதுப்பாய் இருந்தாலும், அவன் கையில் இருந்த 'டார்ச்' ஒளி மட்டும் இல்லாவிடில் கும்மிருட்டுதான்.

வர்ஷிக்கு பயத்தில் சிலிர்த்தது.

"உட்கார். முடிஞ்சால் தூங்கு. இனி உன்னை வைத்துத்தான் என் பேரம்."

"உன்னோடு வியாபாரம் பேச வந்த என்னை இப்படி..."

"அட... அப்ப நான் யாருன்னு கண்டுபிடிச்சிட்டியா?"

"வருண்... உன்னை நம்பி வந்தது பெரிய் தப்பு."

"ஏன்... என்ன தப்பு?"

"இது உனக்கு உரிமையான நிலமில்ல."

"ஓஹோ... விக்ரம் அண்ணாச்சி விவரம் எல்லாம் சொல்லிட்டார் போல? அந்தளவு நெருக்கமாயிடுச்சு... ம்ம்?"

"அவர் அம்மாவும் சொன்னாங்க."

"என் அத்தை வசம் உள்ள சொத்து, இது."

"அதை நீயே வச்சிக்கலாமே தவிர விற்க முடியாது."

"அதை நீயே வச்சிக்கலாமே தவிர விற்க முடியாது." இருக்கணும்கறது

"இவ்வளவு அழகான இடத்தில் நான் மட்டுமே இருக்கணும்கறது பேராசை இல்லையா? ஆறு ஏக்கர். ஒவ்வொன்றும் பத்து கோடின்னா மொத்தம் அறுபது கோடி."

"இதுதான் பேராசை."

"இப்ப ஊழலே நூறு, ஆயிரம் கோடிகளில்தானே?" - நக்கலடித்தான்.

"பத்து ரூபாயோ அல்லது கோடியோ... நியாயமான வழியில்தான் பணம் வரணும்."

கோபத்தில் அவளது புத்தியும், நாக்கும் சுறுசுறுப்பாயின.

"அதிலெல்லாம் நான் ரொம்ப கறார் இல்ல. சட்டுன்னு முன்னேறணும்னா குறுக்கு வழிதான்."

"அது எத்தனை உயிர்களை- பிஞ்சுகளை அழிச்சி இருக்கு?"

"அதெல்லாம் முடிஞ்சு போன கதை. பழைய பேரம். இப்போ உம் மூலம் விக்ரமோடு பேசப் போறேன். 'இவ முழுசாய் உன் கைக்கு வரணும்னால், அத்தையின் நிலத்தை என் பேருக்கு மாற்று. அல்லது உன் நிலத்தை 'ரிஸாட்'டுக்காய் தந்து, வரும் பணத்தை எனது கணக்கில் சேர்த்துடு. அந்த மருந்து நிறுவன விவகாரத்திலேயும் எம் பேரை

இழுக்காதே'... அவ்வளவுதான்."

"பண ஆசைங்கறது பொதுவானது. ஆனா, அப்பாவி உயிர்களைக் காவு தந்து பணம் பாக்கறது... ச்சே, என்ன ஒரு கொடுமை.."

"இது ஒரு தரகர் மாதிரியான வேலைதான். இங்கே உங்களுக்கேற்ற ஒரு பொண்ணு, பையன் இருக்குன்னு சொல்றது போலத்தானே? விசாரிச்சு, சீர்வரிசைப் பேசி, கல்யாணத்தை முடிச்சுக்கறது அவங்கவங்க சாமர்த்தியம். அதேபோல 'உங்க பரிசோதனைக்கு ஏற்ற ஒரு அப்பிராணி கிராமம் இங்கே இருக்கு'ன்னு சொன்னேன். இதுல என்ன தப்பு?"

பேசியதில் நாக்கு வறண்டது, அவனுக்கு. தன் பையில் இருந்து சிறு புட்டி ஒன்றை எடுத்து குடித்தவன், கனைத்துக்கொள்ள– வர்ஷிக்குக் கலங்கியது.

'இந்த இடத்தைத் தேடி வந்து தன்னைக் காப்பாற்றி விடுவார்களா?'

"என்ன யோசனை... இந்த இடம் விக்ரமுக்குத் தெரியாது."

"ஆனால் ஏன் அவர் என்னைக் காப்பாற்ற வேண்டும்... நீ கேட்பதற்கெல்லாம் மசியவும் வேண்டும்?"

"ஹா... அதெல்லாம் விவரமாய் விசாரிச்சுட்டேன்ல?" என்றவன், இவளது கன்னத்தைத் தடவ, இவள் உதறி விலகினாள்.

"அந்த வீட்டுல உனக்குத் தனி மவுசாம். பெரியம்மாவில் இருந்து சின்ன ராகுல் வரை உன் பேச்சுக்கு ஆடுவாங்களாம்... அதிலும் விக்ரமுக்கு நீ உயி... ராமே?"– இழுத்தான்

"ச்சேச்சே... இதென்ன கதை?"

"ஊர் பேசுன கதை, என்னோட காதையும் எட்டிடிச்சு. அந்த கசாயம் கிறக்கும்ன்றதும் தெரியும். அதான் ஜன்னல் பக்கம் வந்து உம் பேரைச் சொன்னேன். கல்லை விட்டெறிஞ்சதுல... மாங்கா நேரே என் வாய்க்குள்ள விழுந்திருச்சு."

சிரித்தவனை அருவருப்புடன் பார்த்தாள்.

## 18

**க**றுப்புத் துணி போல இருந்தது, அந்த குகையின் உட்புறம். குளிரும், இருளும் அவளை மிரட்டியது.

கைகளும்... கணுக்காலும் பிணைக்கப்பட்டிருக்க, நிற்பது– நடப்பது அனைத்துமே சிரமம். உடம்பு முடங்கி இருந்தாலும் மூளை விழித்திருந்தது.

அவளைக் கடத்தும் திட்டத்துடன் வந்தவன், தகுந்த ஏற்பாடுகளுடன்தான் இருந்திருக்கிறான். எங்கு கூட்டிப்போய் ஒளித்து வைப்பது? கட்டுவதற்கான கயிறு– 'டார்ச்' என்று சகலமும் முன்னேற்பாடாய் இருந்தான். அவன் விரித்த வலையில் அவள்தான் மடத்தனமாய் வந்து மாட்டிக்கொண்டாள்.

'தன் குழப்பத்துக்கு, எடுத்த மருந்துகள் மீது பழி போட்டாலும், சற்று நின்று நிதானித்து இருந்தால் இந்தத் தொல்லை இல்லை. அவர்கள் அல்லது அப்பா– பரிமளம்மாவைக் கூப்பிட்டு இருக்கலாம். முதியவர்கள் என்று தயங்கினால், விக்ரமை அழைத்திருக்கலாம்.'

பழம் நழுவி வாயில் இறங்கிய 'கதையாய்– தானே வெளியேறிவிட்டாள்.

விடிவதற்கு இன்னும் எவ்வளவு நேரம்? சுகமாய் படுத்திருக்கும்போது நகருவது தெரியாமல் நழுவும் இரவு, இப்போது யுகமாய் மாறி நிற்கிறது.

'நல்லவேளை... என்னை மலையில் இருந்து இறக்கவில்லை. நடக்கும் தொலைவில் உள்ள தன்னை, விக்ரம் எப்படியாவது தேடிக் கண்டுபிடித்துவிடுவார்.'

கட்டப்பட்ட காலும், கையும் மரத்திருந்தன. வருணிடம் அசைவு தெரிய, "நான் கொஞ்சம் வெளியே போகணும்" என்றாள். நல்லவேளையாக அநாவசிய கேள்விகள் இன்றி கட்டுகளை நெகிழ்த்தினான். ஆனாலும், கைகளிலுள்ள கட்டு முழுதுமாய் அகற்றப்படவில்லை. "போயிட்டு வா... அஞ்சு நிமிஷத்துக்கு மீறினா வந்திடுவேன்..."

கால்களை மடக்கி பாறை இடுக்கின் வழியே வெளியேற சிரமப்பட்டாள். அடர்ந்த சருகுகளில் அஞ்சி, அஞ்சி பாதம் பதித்தாள். 'இங்கே ரெங்குவின் வீட்டு வாசலிலேயே கருஞ்சிலந்தி இருக்க, 'இங்கே என்னவெல்லாம் நடமாடுமோ?' என்று பயந்தாள்.

பயங்கர கனவொன்றில் சிக்கிய உணர்வு.

ஆனால், ஒரு நெடிய புதர் பக்கமாய் நடந்து அதில் மறைந்தாள். சன்னமாய் வழிந்த நீரில் முகம் கழுவி– நீரைப் பருக, மேலும் தெளிவானது. மணி காலை ஆறரை இருக்கலாம். ஆனாலும், வெளிச்சம் பரவ முடியாத மரங்கள் அடர்ந்த பகுதி, அது.

'கத்திப் பார்க்கலாமா?

ஆனால், இங்கே வருணைத் தவிர வேறு யார் உள்ளனர்?'

நீண்டுதொங்கிய கயிறைத் தன் கழுத்தைச் சுற்றிப்போட்டுக்கொண்டவள், பற்களால் கைக் கட்டைப் பிரிக்க முயன்றாள்.

அடுத்த கணம் அச்சத்தில் உறைந்தாள்.

பயங்கரமும், நூதனமுமான ஒரு சத்தம், இருளை ஊடுருவி ஆகாயம் வரைப் பரவியது. ஓடி மற்றொரு புதரில் பம்மினாள்.

'என்ன சத்தம் அது? யானையின் பிளிறலா?'– அவளது மூச்சு சற்று நின்று, பின் அதை ஈடுசெய்ய வேகமானது. கண்கள் பரபரவென்று ஒரு பெரிய மிருகத்தைத் தேடின. இவ்வளவு வலிய சத்தத்தை ஒரு பிரமாண்ட மிருகம்தானே கிளப்பக் கூடும்?

அச்சத்தின் பிரமாண்டத்தை அவள் முழுமையாய் உணர்ந்தது அப்போதுதான். பயத்தில் உயிர்விட்ட ஒரு வாலிபனைப் பற்றி பத்திரிகையில் வாசித்தபோது நம்பவில்லை. வனப் பகுதியில் விளையாடப் போன இளவட்டங்களில் ஒருவன் மட்டும் அசந்து தூங்கி இருக்கிறான். நடுநிசியில் எழுந்தவனை இருளும், காட்டின் சூழலும் அதிகம் மிரட்டி இருக்கின்றன. விநோத சத்தங்களுக்கு அஞ்சி இங்கும், அங்குமாய் ஓடியவன்– மாரடைத்து அன்றிரவே இறந்துவிட்டான். 'இப்போது தானும் உயிரிழக்கும் தருணமோ?' என்று எண்ணினாள்.

மனிதனுக்கு உயிர் மேலுள்ள ஆசை மிக வலியது!

உடலை இயக்கும் உயிர் எனும் அந்த அற்புதம், கூட்டைவிட்டு வெளியேறிவிடுமோ என்று– உயிரைத் தக்க வைக்கும் ஆவேசம் ஆக்ரோஷமாய் கிளம்பிவிடும்.

'நீ வாழ வேண்டும் வர்ஷி'– என்று உள்மனம் அவளை உசுப்பியது. 'எப்படிப் போனால் தப்பலாம். உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாம்' என்று பரபரத்தவளை "உஷ்" என்ற ஒரு சத்தம் ஈர்த்தது. முப்பது அடி தொலைவில் ஒரு மலைவாசி இளைஞன் நிற்பது தெரிந்தது. உள்ளம் நம்பிக்கையில் துள்ளியது. உதட்டில் விரல் வைத்து இவளை எச்சரித்தவனின் வலது கை தன் நெஞ்சுப் பகுதியைத் தட்டியது.

'என்ன சொல்கிறான்?

நான் இருக்கிறேன் காப்பாற்ற என்றா?'

இடுப்பில் செருகி இருந்த ஒரு பொருளை எடுத்து உதட்டில் பொருத்தினவன், கன்னம் உப்ப ஊதினான். அந்த நேரத்தில் மறுபடி அந்த விநோத பிளிறல்– காட்டை ஊடுருவி உலுக்கியது.

"ஏய் வர்ஷி"– வருணின் குரல் அதட்டலாய் அழைத்தது. புதரை ஒட்டிய மரத்தின் பின்னே ஒண்டினாள்.

'இந்த அயோக்கியனின் கையில் சிக்கக்கூடாது. அவனது கெட்ட நோக்கத்துக்கான கருவியாகக் கூடாது. ஆனால் வேறு ஒருவனின் கண்ணில் பட்டுவிட்டேன். அவன் சங்கு ஊதியது ஏதோ ஒரு சமிக்ஞையோ? பரிமளம்மா ஒரு முறை சொன்னார்களே! தொடர்பு சாதனங்களாய் இம்மக்கள் முரசு, விசில், சங்கை பயன்படுத்துவதாய்...'



வருணுக்கும் அது தெரியாமல் இல்லை. ஆத்திரமாய் குரல் கொடுத்தான். "ஏய், எங்க பதுங்கி இருக்க? அட்டைப் பூச்சிங்க உன் ரத்தத்தை உறிஞ்சிடும். நீ சக்கை சடலமாய் இங்கேயே கிடந்து மக்கிடுவ. வெளியே வந்தால் உயிர் பிழைச்சு மும்பை போகலாம். நிலத்தை விற்கும் பணத்துல உனக்கு 'கமிஷன்' தர்றேன். பேசாம 'செட்டில்' ஆகிடலாம். இப்படி ஒளிஞ்சு நின்னா சமாதிதான்."

மரங்கள் கூட அசையாமல் இவளுக்குத் துணையாய் நின்றன.

"அந்த சங்கு சத்தம் கேட்டேல்ல? கடும் ஆபத்துலதான் அப்படி ஊதுவாங்க. இங்க ஏதோ பயங்கர மிருகம் இருக்குதுன்னு அர்த்தம். குகை வாசல்ல மூலிகைப் பரப்பி இருக்கேன். ஆக, அட்டைப்பூச்சிகூட அங்கே வராது, வா."

மூச்சு விடுவதைக்கூட சன்னமாக்கி ஒடுங்கினாள்.

"சனியனே... வந்துத் தொலை" கூச்சலிட்டவன், தாக்கப்பட்டது போல அலறினான். திரும்பி அவனுக்கு என்ன ஆனது? என்று அறியும் துணிவின்றி நடுங்கியபடியே நின்றாள். பலவித யூகங்கள் அவளுள் மிரட்டலாய் ஓடின. கொடிய விலங்குதான் வருணைத் தாக்கிவிட்டதோ? என நினைத்தாள்.

சிறு ஓடையின் மறுபக்க சரிவில் பலர் ஓடி வருவது போன்ற சத்தத்தில் எட்டிப் பார்த்தாள். நடுவே நடந்து வந்தவனைக் கண்ட நிம்மதியில், மகிழ்வில் அவளது கால்கள் மடங்கிச் சரிந்தன.

அப்பாவின் குரல் அவளை எழுப்பியது. அது அவளுக்கு இதமான பாதுகாப்பைத் தந்தது. கடைசியாய் தன்னை நோக்கி விக்ரம் வரக் கண்டபோதும்கூட இதே போலொரு நிம்மதியான உணர்வுதானே?

"என்னம்மா வர்ஷி... எப்படி இருக்கே?"

"பரவாயில்லப்பா."

"இங்க வந்ததில் இருந்து மயங்கறதும், ஆபத்தில் இருந்து பிழைக்கறதுமாய் ரொம்ப வதைப் பட்டுட்டேம்மா"– மகளின் தலையைக் கோதியபடி வருந்தினார் துரைராஜ்.

"சமீபமாய் நடந்த சம்பவங்கள்தான் அப்படி! மற்றபடி அருமையான இடம்ப்பா இது."

"ஆட்களும் அருமையானவங்கதான்"– ஒத்துக்கொண்டார்.

"எப்படி இங்க... வீட்டுக்கு வந்தேன்ப்பா?"

"மயங்கிக் கிடந்த உன்னை 'ஸ்ட்ரெச்சர்' போல ஒரு படுக்கையில் வைத்துக் கொண்டு வந்தாங்க..."

"விக்ரம் எங்கேப்பா?"

"நன்றி சொல்லத்தானே? உனக்காய் வந்த டாக்டர், போலீஸை

கவனிச்சு அனுப்பணுமே! எல்லோரும் இங்க இருக்கக் கூடாதுன்னு டாக்டர் சொன்னதால் நான் மட்டும் உன்னோடு இருந்தேன்."

இவர்களின் பேச்சுச் சத்தம் கேட்டு- உணவுத் தட்டோடு செல்லாவும், பரிமளம்மாவும் வர... வர்ஷி கூச்சத்துடன் எழுந்து நின்றாள். இப்படி சதா படுத்தபடி மற்றவர்களை வேலை வாங்குகிற சங்கடம் தோன்றியது அவளுக்கு!

ஆனால், அவர்களோ தங்கள் இருப்பிடம் வந்து அவள் ஆபத்துகளை சந்தித்த வருத்தத்தில் இருந்தார்கள்.

முகம் கழுவி, அவர்களுடன் பேசியபடி சாப்பிட்டவள்,

"குழந்தைங்க எங்கேம்மா?" என்றாள்.

"உனக்கு இப்ப அமைதி தேவைன்னுட்டார் டாக்டர். அதனால குழந்தைங்களை இந்தப் பக்கம் விடவில்லை. உனக்கு அவங்களைப் கட்டாயம் பார்க்கணுமா...?"

வர்ஷி 'ஆம்' என்பதாய் கெஞ்சலாய் தலையாட்ட, குழந்தைகள் வந்து இவளுக்குக் கதையும், பாட்டுமாய் சொல்லி சில மணி நேரத்துக்கு முன்பு நடந்ததை மறக்கடித்தார்கள். அவர்களது அணைப்பும், முத்தங்களும் கொள்ளை ஆறுதல்.

இவர்களை எல்லாம் விட்டு- நிரந்தரமாய் பிரியப் போவதை நினைத்தாலே அவளுக்கு கசந்தது.

மும்பையின் நெரிசலை, சின்னஞ்சிறு அடுக்கு மாடி வீட்டை, வேலைக்கான ஓட்டத்தை, களேபரத்தை நினைக்கவும் சகிக்கவில்லை. அப்படியொரு இயந்திரச் சுழற்சியில் தான் இதுவரை சிக்கிக் கிடந்ததே பரிதாப நிலையென அவளுக்குப் பட்டது.

இந்தக் குடும்பம் அவளைப் பாசத்துடன் கொண்டாட, அதில் திளைத்தவளுக்கு ஒரு சின்ன நெருடல்... 'விக்ரம் எங்கே? தன்னைப் பார்க்க ஏன் இன்னும் அவன் வரவில்லை. அது வெறும் எண்ணமா அல்லது ஏக்கமா?'

ஆராயத் துணியாமல் வாசலையே பார்த்துப் பார்த்து தவித்தாள் வர்ஷி!

## 19

"வர்ஷி... பேசிறியாம்மா? முகேஷ் உன்னோடு பேச விரும்புறார்."



அப்பா நீட்டிய 'கைபேசி'யை வாங்கிப் பேசியவளின் முகம் மலர்ந்திருந்தது.

"முகேஷுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்காம்ப்பா."

"ம்... நானும் வாழ்த்து சொன்னேன்."

"இங்குள்ள விவரம் எதுவரை சொன்னீங்கப்பா?"

"ஓரளவு. உனக்கு உடம்பு சரியானதும் வந்துடுவோம்னு சொல்லி இருக்கேன்"

"நேற்று முழுக்க ஓய்வு எடுத்துக்கிட்டதால இப்போ நல்லாயிட்டேன்."

"வருணின் அட்டகாசம் பற்றியும் சொன்னேன். அவருக்கு அது தெரியணுமில்லையா? விக்ரம்கூட முகேஷிடம் பேசினார்."

"ஓ...?"

"அதற்கு முன்னே விக்ரம் என்னிடம் கேட்டார்..."

"என்னன்னு?"

அப்பாவின் முகமாறுதலைக் கவனித்தவள் ஆர்வமானாள். அப்பாவின் முகபாவம் அவளுக்குப் சிரிப்பும், குறும்புமாக இருந்த அப்பாவின் முகபாவம் அவளுக்குப் புதிது.

"முகேஷ் உனக்கு வெறுமனே முதலாளிதானான்னு."

"இதென்ன அநாவசிய விசாரணை?"- முறைத்தாள்.

"கல்யாணமாகி அஞ்சு ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் மனைவிக்கு இது பிரசவ நேரம். இல்லாவிட்டால் இப்படி வர்ஷியைத் தனியே அனுப்பாமல், முகேஷும் கூடவே வந்திருப்பார். இந்தப் பொண்ணு அடம் பிடிச்சுக் கிளம்பினாள்ன்னு சொன்னேன்."

"இந்த விவரமெல்லாம் கேட்டாராப்பா?"

"விக்ரம் ஏன் கேட்டாருன்னு எனக்குப் புரிஞ்சதால், எல்லாம் விளக்கினேன்ம்மா."

"குழப்புறீங்கப்பா."

தன் கூச்சத்தை மறைக்க- சிடுசிடுத்தாள்.

"சீக்கிரம் உன் குழப்பம் தீர்ந்திடும்மா. எனக்கு வேலை சம்பந்தமாய் சில போன் பேச வேண்டியது இருக்கு" என்றவர் நகர, இவள் தன் அறையில் இருந்த வானொலியை திருகி, தனக்குப் பிடித்த வீணை இசையைத் தேர்ந்தெடுத்து வைத்தாள்.

வீணையின் நரம்புகள் மிக நளினமாய் மீட்டப்பட, அவள் மனம்

அமைதியானது.

'வேலை நிமித்தம் பழகிவிட்ட குடும்பம் இது... இனிமேலும் இங்கு தங்கிடக்கூடாது. கிளம்பிப் போய்விட வேண்டியதுதான். உணர்வுகளால் சிக்கல் ஆக்கக்கூடாது. ஒன்பது, பத்து நாட்களாய் தங்கினதே அதிகம்.

இங்கு இவ்வளவு விவகாரங்கள் புதைந்திருந்ததும், நான் அதில் சிக்கி சாவின் விளிம்பைப் பார்த்து மீண்டதும் ஒரு பயங்கர கனவு போல இருக்கிறது. இனி கையை உதறிவிட்டுக் கிளம்ப வேண்டியதுதானே? இதை நினைத்தாலே ஏனிந்த வருத்தமும், ஏக்கமும்?'

அறைக் கதவு தட்டப்பட, ஓடிப் போய் திறந்தாள். எதிர்பார்த்தது போல அங்கு நின்றது விக்ரம்தான்.

"ரொம்ப நன்றி" என்றாள், எடுத்ததுமே.

"விருந்தாளியைக் காப்பது என் கடமை இல்லையா... அந்த விருந்தாளி நடுராத்திரி சொல்லாமல் கொள்ளாமல் கதவைத் திறந்து போய்விட்டாலும்...?"

கேலியாய் புருவம் உயர்த்தியவனோடு சேர்ந்து சிரித்தாள்.

"தந்த மருந்தின் விளைவு அது. அசதியும், அரை விழிப்புமாய் என் பேரை யாரோ கூப்பிட, அப்பாதான் கூப்பிடுறாருன்னு நினைச்சு எழுந்தேன். அறையில் அப்பா இல்லைன்னதும், வாசல் பக்கம் போக..."

"முதலில் உன் ஜன்னல் பக்கம் வந்து கூப்பிட்டவன், பிறகு முன்புறம் வந்திருக்கணும். அப்பா கழிவறையில் இருந்ததால வெளியே நின்று கூப்பிடுவது அப்பாதான்னு நினைச்சுட்டே. வருணே இத்தனை சுலபமாய் உன்னை கொண்டு போகலாம்னு நினைச்சிருக்க மாட்டான்."

"கையில் கயிறு, 'டார்ச்' எல்லாம் வச்சிருந்தாரே?"

"நல்லவர்களை கடவுள் கைவிடறதில்லை வர்ஷி. நீ திறந்து வைத்த கதவு– காற்றில் அடித்து மோதியபடி இருக்க, அந்த சத்தம் என்னை எழுப்பிடுச்சு. நீயும், அப்பாவும் கிளம்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்த பிறகு ஏனோ ரொம்ப நேரம் விழித்திருந்தேன்."

ஒரு கணம் அவனை நிமிர்ந்து பார்த்தவள், கண்களை விலக்கிக்கொண்டாள்.

"கதவு திறந்திருப்பதைக் கண்டதும், கலவரமாகி நான் முதலில் தேடினது உன்னைத்தான். ஆக, நீ கிளம்பி வெளியேறிப் போனது அடுத்த அரை மணி நேரத்தில் எனக்குத் தெரிஞ்சுடுச்சு. உன் அப்பா

வீடெங்கும் தேட, அம்மா அழ ஆரம்பிச்சாச்சு. செல்லாவின் வீ
போய் நான் விவரம் சொன்னதும், அவள் தன் ஆட்கள் மூலம் அந்த
தகவலை சீட்டி ஒலியால் சுற்றிலும் பரப்பிட்டா."

"என்னன்னு?"

"நம் விருந்தாளியான அழகியப் பெண்ணைக் காணலைன்னு."

பட்டணத்தில் இதுபோன்ற பாராட்டுகளைச் சகஜமா
கேட்டவளுக்கு இங்கே முகம் சிவந்து போனது.

"மலைப் பாதையின் அடிவாரத்தில் ஆட்களை நிறுத்தினோம்
நீ கீழே கொண்டு போகப்படலைன்னு தெரிஞ்சிடுச்சு. இங்குள்ள
பகுதிகளில் இளைஞர்கள் தேட ஆரம்பிச்சாங்க."

"என்னைத் தேடி நீங்க கட்டாயம் வருவீங்கன்னு தெரிஞ்சாலும்
உள் மனதில் பதற்றம் இருக்கத்தான் செஞ்சது. கை, கால்களை மூடக்கி
குகையில் கட்டிப் போட்டபடி இருந்ததெல்லாம் கொடும் கனவு போல
இருக்கிறது."

சில நொடி அமைதிக்குப் பின் மீண்டும் தொடர்ந்தாள்.

"சங்கு சத்தத்தில் மிரண்டுட்டேன். ஆனால், அந்த இளைஞன் செய்த
செய்கை என்னை தைரியப்படுத்திடுச்சு."

"நல்லவேளை... வருணிடம் நீ மறுபடி போகலை. அவனிடம் கத்தி
இருந்தது."

"அவ்வளவுக்குத் துணிவானா என்ன?"

"அச்சம், அசட்டுத் துணிச்சலைத் தருமே! தவிர, உன்னை வைத்து
என்னை மசிய வைத்துடலாம் என்பது அவனது திட்டமாக வேறு
இருந்திருக்கிறது."

அவன் பேசுவது புரிந்தாலும்; நிமிர்ந்து முகம் பார்க்கும் துணிவின்றி
நின்றாள். மனதினுள் பரவசமான புது படபடப்பு!

"உனக்குப் புரியுதா வர்ஷி?"

"ம்கூம்."

தான் உடுத்தி இருந்த பொன் பழுப்பு நிற மிருதுவான பட்டுசேலையின்
முந்தானையைப் பற்றித் திருகுவதற்கு வெகு வசதியாய் இருந்தது!
அதன் அரக்குக் கரையின் தங்கப் புள்ளிகள் அவளது அழகை வெகு
அலங்காரமாய் காட்டின.

இந்த நூதன உணர்வின் பூரிப்பும், அன்று காலை அலசிய கூந்தலின்
மென்மையும் அவளை வெகு ரம்யமாக்கின.

" புரியவில்லையா.? உங்க அப்பா அளவுக்கு நீ கூர்மையாக இல்லை



ர்ஷி. அவரிடம் நான் முகேஷ் மித்தலைப் பற்றி விசாரித்ததுமே...
மாத்தத்தையும் கண்டுட்டாங்க. எனக்கு வேண்டிய அத்தனை
வரங்களையும் தெளிவா சொல்லிட்டாங்க."

அப்பாவின் குறும்பும் நினைவுக்கு வர, சேலையின் முந்தானை
வனிடம் வெகு பாடுபட்டது!

அதுவரை சாதுவாக இருந்த வீணை இசை, இப்போது சிருங்காரமும்...
ணுங்கலுமாகி இருந்தது.

அவள் பேச்சைத் திசை திருப்பினாள்.

"ம்ம்... அந்த விவரத்தை முதலில் சொல்லிடுறதும் நல்லதுதான்.
வனை அதிகப் பாதிப்படைய விடக்கூடாதுங்கற தன்னல எண்ணம்
முதலில் எனக்கு இருந்தது. சொந்தக்காரன் இல்லையா? மருத்துவ
பரிசோதனையின் விளைவு இத்தனை சாவில் போய் முடியும்னு
னைக்கலைன்னு சொன்னான். வெளிநாட்டு நிறுவனங்கள் நேர்மையாய்
நடந்துக்கும்னு நம்பினேன்னு அவன் புலம்ப, காவல்துறையிடம் கொஞ்
சம் விட்டுப்பிடிக்க வேண்டினேன்."

"எய்தவன் இருக்க அம்பை நோவது போல, முழு வில்லன்களை
விட்டுட்டு இப்படி முழு விவரம் அறியாதவங்களை சிறையில்
அடைப்பது உசிதமில்லைதான்."

"ஆனா, இப்போ உன்னைக் கடத்தி, கட்டிப்போட்டு, கத்தியைக்
காட்டி மிரட்டி, தானும் சளைக்காத அயோக்கியன்னு காட்டிட்டான்.
இப்போ அவன் சட்டத்தின் கையில்... நானும் குறுக்கிடலை.

ஆந்திர மலைக் கிராமங்களிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தி,
பெயரிடப்படாத மருந்துகளைத் தவிர்க்க வச்சிட்டாங்க. இங்குள்ள
அரசு மருத்துவமனையை சீரமைத்து– மருத்துவரோடு உதவியாளரையும்
நியமிக்க கலெக்டர் கையோடு ஏற்பாடு செய்துட்டார். முறையான
மருத்துவம் இல்லாததால்தானே இத்தனை முறைகேடுன்னு அவரும்
பழியை ஏற்றுக்கிட்டது பெருமைக்குரியது."

"இழப்பு ஈடுகட்ட முடியாததுன்னாலும் இந்த நடவடிக்கைகள்
நிம்மதிதான்."

"நஷ்ட ஈட்டுக்கான தொகையை அரசாங்கம் தந்திருக்குது
வர்ஷி... அதைவிட இனி இது போன்ற அசம்பாவிதம் தொடராமல்
இருக்க செய்த ஏற்பாடுகள்தான் விசேஷம். ஆனாலும், நடந்தது என்
அஜாக்கிரதையால்தான் என்கிற குற்ற உணர்வு எனக்கு..."

தொட்டுவிடும் அளவில் நெருங்கி நின்றவனின் நெற்றியை நீவி, முடி
கோதிவிடப் பரபரத்த தன் கைகளை இறுக்கினாள்.

"இந்த கிராமத்து மக்கள் இங்கு நடக்கும் கல்யாணம் திருவிழாவுக்கெல்லாம் போன் மூலம் உங்களை அழைப்பது உண்டுன்னு சொன்னாங்க அம்மா. இப்படி இலவசமாய் பொருட்களும், மருந்தும் வர... அதை ஏற்பதா– வேண்டாமான்னு உங்களிடம் ஒரு வார்த்தை கேட்டிருக்கலாமே?"

"ம்... ஆனால், அத்தனைக்கான தெளிவு அவங்களுக்கு இல்லை."

"அதற்கு கல்விதான் ஒரே வழி. யோசிச்சு முடிவெடுக்கும் திறன் அவங்களுக்குள் வர... படிக்கணும். இங்குள்ள புத்தகங்களை பத்திரிகைகளை ஒரு பொது அறையில் வையுங்க, படிச்சு வளரட்டும் அதுக்குப் பிறகு அவங்களுக்கு உங்க யாருடைய பாதுகாப்பும் தேவை இல்லையே!"

"இந்த வீட்டின் ஒரு பாதியையே ஆரம்பப் பள்ளிக்கூடம் ஆக்கிடலாம் இல்லியா, வர்ஷி? பிறகு உன் ஆசை போல ஒரு விடுமுறைத் தளமும் இங்கே நாமே உருவாக்கினால்..."

இவள் கண்கள் மின்னின.

"அப்படிச் செய்தா, அமிர்தமலை முன்னேறிடும் விக்ரம். மக்கள் தொடர்பு– நிலையான வருமானம்ன்னு அமைய... அதற்கான அனுமதி வாங்குவது, அமைப்பு, விளம்பரம் எல்லாம் என் பொறுப்பு."

"இது புரியும் அளவுக்கு, இதற்கு முன் நான் சொன்னது உனக்கு ஏன் புரியலை வர்ஷி... இல்லை, புரியாதது போல நடிக்கிறாயா?"

"ரொம்ப தயக்கமும், கூச்சமும் உள்ளவர் போல நீங்க நடிக்கலை... சுற்றித்தானே வளைச்சீங்க?"

அதைக் கேட்டு சிரித்தவனின் கைகள், அவளைச் சுற்றி வளைத்தன.

"உன்னை விரும்பறேன் வர்ஷி. வாழ்ந்தால் அது உன்னோடுதான் என்கிற உன்னதமான காதல்..."

அந்த அணைப்பு– வெதுவெதுப்பாய் சொன்ன காதல் அவளுக்குப் புரிந்தது– பிடித்திருந்தது.

"இதுவரை நடந்ததில் இதை என்னால் நம்ப முடியலை."

அவன் மார்பில் சாய்ந்தபடி முணுமுணுத்தாள்.

"அவ்வளவு மோசமாகவா இருக்குது?"

அவள் முகத்தை கைகளில் ஏந்தி கேட்டான், "நீ பட்டணத்துப் பெண். சென்னையிலும் எனக்கு வியாபாரம் உண்டு. முழுக்க இங்கே அடைப்பட்டு கிடக்க நேராது. உன் வாழ்வை சுவாரசியமாக்கறது என் பொறுப்பு."

"இங்கிருந்து கிளம்பறதை நினைச்சு கலங்கினப்பதான், நீங்க ...ந்தீங்க."

அவளது நெற்றியில் அழுந்த முத்தமிட்டான்.

"முதல்ல அத்தனை சிடுசிடுத்தவரிடம், இப்போ இத்தனை ...ருங்காரமா?"– சீண்டினாள்.

"காரணத்தைத்தான் சொல்லிட்டேனே?"

"அப்பாகிட்ட சொல்லணும் விக்ரம்."

"மாமா, என் அம்மா, அக்கா... ஏன் மும்பையின் முகேஷுக்குக் கூட ...ம்ம விஷயம் தெரியும். அதிலே பூரண சந்தோஷம்."

"இதென்ன அக்கிரமம். எல்லோரிடமும் சொன்ன பிறகு கடைசியாய் ...ன்னிடமா?"

"இப்பதான் தைரியம் வந்தது. அதுதவிர நீ பெரும்பாலும் ...மயங்கியேல்ல கிடந்தே. எழுந்ததும் சொன்னால் மறுபடி மயங்கி ...விழுந்திடுவியோங்கற தயக்கம் வேறு!"

"முதல்ல எம்மேல அத்தனை கோபம், பிறகு எப்போ காதல் ...வந்ததாம்?"

"நீயும்தான் என்னைப் பார்த்ததும் சிடுசிடுன்னே இருந்தே. அப்பவே ...உம் மேல் எனக்கொரு ஆர்வ மொட்டு. பிறகு நீ அப்பாவின்னு தெரிய, அது அப்படியே மடமடன்னு விரிஞ்சிடுச்சி... உன் அனுபவம் எப்படி...?"

சிறு பையனின் ஆவலுடன் கேட்டான்.

"இங்குள்ள ரகசியங்களின் கதவு திறக்கக் காத்திருந்தேன். கூடவே எனக்குள்ளும் ரகசியமாய் ஒரு கதவு திறந்து, உள்ளே நீங்க புகுந்திருந்ததைக் காட்டிருச்சு."

"என் மாமா, உன் அத்தை, நாத்தனாரிடம் நல்ல செய்தியைச் சொல்லிடலாமா?"

"இப்பவா?"

"நமக்காய் காத்துட்டு இருக்காங்களே?"

சிரித்தவன் நீட்டிய விரல்களுடன் தன்னைப் பிணைத்தாள்.

விரல்கள் இடையே இயற்கையாக இடைவெளி இருப்பதே இப்படி அவனுடன் கோர்த்துக்கொள்வதற்காய் எனப் பட, இணைந்து நடந்தனர் இருவரும்!

(முற்றும்)